ஆசிரியர் உரை



# இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

## THE RESURRECTION OF JESUS CHRIST

*Louis Rushmore*

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முதல் நூற்றாண்டில் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷ செய்தியின் மையமாக இருந்தது. இன்றும் புதிய ஏற்பாடு முழுவதும் சுவிசேஷ செய்தியின் மையமாக இருந்து வருகிறது. **கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா[Iகொரி. 15:14].** எனவே தான், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம், அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. நம்முடைய உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சார்ந்திருக்கிறது. **கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும், இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம் [IIகொரி. 4:14]. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக: அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்[Iபேதுரு 1:3-4].**

கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தான் கிறிஸ்தவத்தின் மிக முக்கியமான பகுதியாயிருந்தது. இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழாவிட்டால் பாவப்பாரத்தால் தொய்ந்துபோன, இழந்துபோன மனித இனத்திற்கு முற்றிலுமாக நம்பிக்கையே இருந்திருக்காது! இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருந்தாலும் கூட அவருடைய உயிர்த்தெழுதல் இல்லையென்றால் மனித நம்பிக்கைகள் என்றென்றுமாய் நொறுங்கிப் போயிருக்கும். இயேசு கிறிஸ்து நீண்ட காலம் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட மேசியவாக இருந்தாலும் கூட அவருடைய உயிர்த்தெழுதல் இல்லையென்றால் அவரால், ஒருவரைக் கூட இரட்சித்திருக்க முடியாது. இயேசு கிறிஸ்து கல்வாரிக் குருசில் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தியிருந்தாலும் கூட, அவர் உயிர்த்தெழவில்லையென்றால்

அவரின் அந்த கிரயத்தொகை வியர்த்தமாயிருக்கும். இயேசு கிறிஸ்து எல்லா தீர்க்க தரிசனங்களையும், நிறைவேற்றியிருந்தாலும் கூட அவருடைய உயிர்த்தெழுதல் இல்லையென்றால் எல்லாம் அர்த்த மற்ற ஒன்றாய் இருக்கும். திரளான ஆத்துமாக்கள் யூத மதம் மற்றும் பிதாக்களின் கீழ் கீழ்ப்படிந்திருந்தாலும் கூட இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் அவைகளொன்றும் பரலோகத்தின் நித்தியத்திற்கு அருகில் கூட நம்மை அழைத்துச் சென்றிருக்காது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லை யென்றால் எல்லாமே மாயையாயிருக்கும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தான் இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்தார் என்னும் வாக்கியத்தின் உச்ச கட்டமாயிருக்கிறது [லூக்கா 19:10]. வேறு சிலரும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாலும் கூட இயேசு கிறிஸ்து மறுபடியும் மரிக்கவில்லை. மற்ற மனிதர்களுடைய கிரியைகள் அவர்களுடைய மரணத்தோடு முடிந்து விடுகிறது. ஆனால், இயேசு கிறிஸ்துவைப் பொறுத்தவரை அப்படியல்ல. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சாத்தானுக்கு மரண அடியாக இருக்கிறது. **இன்னும் இரத்தினச்சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லை யென்றால் கிறிஸ்தவமே இருந்திருக்காது!** இயேசு கிறிஸ்து தன் கல்லறையிலிருந்து வாக்கில் ஞாயிற்றுக்கிழமை உயிர்தெழுந்தார். கிறிஸ்து ஏப்ரல் 7 வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்பட்ட அந்த நாளில் பல பயங்கரமான சம்பவங்கள் சம்பவித்தன: பூமியதிர்ச்சி, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, அந்தகாரம் பூமியை சூழ்ந்து கொண்டது. நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் எழுந்திருந்தன. அரிமத்தியா ஊரனாகிய யோசேப்பும், நிக்கொதேமுவும் யூதர்களின் ஓய்வு நாள் வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கே தொடங்குகிறபடியால், ஆறுமணிக்குள்ளேயே அவசர அவசரமாக இயேசு கிறிஸ்துவை அடக்கம் பண்ணினார்கள். சனிக்கிழமை ஆலோசனைச்சங்கத்தார் பிலாத்துவிடம் இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்கு முத்திரை போடும்படியாகவும், கல்லறைக்குப் பாதுகாப்பு அளிக்கும்படியாகவும் முறையிட்டு பிலாத்துவை சம்மதிக்கச் செய்துவிட்டார்கள். யூதத் தலைவர்கள் இயேசு உயிர்த்தெழுவார் என்று சற்றும் எதிர் பார்க்கவில்லை. ஆனால், கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தை திருடி அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று சொல்லிவிடுவார்கள் என்று நினைத்தார்கள். பிலாத்துவும் கல்லறையைப் பாதுகாக்க பாதுகாவலர்களை அனுப்பினார்.

ஞாயிற்றுக்கிழமை இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். உலகமே இந்நாளை ஈஸ்டர் ஞாயிறு என்று அழைக்கிறது. ஆனால், இந்த நாளை பரிசுத்த நாளாக நினைவுகூரும்படியாக வேதாகமத்தில் எந்தப் போதனையும் இல்லை. ஒரு தேவ தூதன் கல்லறையின் வாசலில் இருந்த கல்லைப் புரட்டித்தள்ளினான். காவலாளர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுலைப் பார்த்துப் பயந்தார்கள். ஆனால், யூதர்கள் காவலாளிகளுக்கு லஞ்சம் கொடுத்து காவலாளிகள் தூங்கிக் கொண்டிருக்கும்போது கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தை திருடிக்கொண்டு போய்விட்டதாக சொல்லும்படி கேட்டுக் கொண்டார்கள். இயேசுவின் தாயாகிய மரியாளும், மகதலேனா மரியாளும் இன்னும் மற்ற ஸ்தீரிகளும் அதிக இருட்டோடே கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருந்ததைக் கண்டார்கள். உடனே அவர்கள் இந்தக் காரியத்தைப் பேதுருவினிடத்திலும், யோவானிடத்திலும் அறிவித்தார்கள். அதைக் கேட்டவுடனே பேதுருவும், யோவானும், அதைக் காணும்படி கல்லறையினிடத்திற்கு ஓடினர்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்த அந்த நாளிலேயே பலருக்குத் தரிசனமானார். மகதலேனா மரியாள் தான், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை முதலில் பார்த்தாள் [மாற்கு 16:9] அவளுக்கு பிசாசு பிடித்திருந்த போது, இயேசு அப்பிசாசுகளை அவளிடமிருந்து விரட்டினார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து, அப்போஸ்தலரிடம் சொன்னபோது அவர்கள் நம்பவில்லை [மாற்கு. 16:10,11] உண்மையுள்ள வேறு சில ஸ்திரீகளும் உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டார்கள் [மத்தேயு. 28:9-10]. அதன் பின்பு, அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்திற்கு நடந்து போகிறபொழுது அவர்களுக்கு கிறிஸ்து தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்களையும் அவர்கள் நம்பவில்லை[மாற்கு 16:12-13]. இயேசு கிறிஸ்து பேதுருவுக்கு தரிசனமானார் [லூக்கா 24:34] இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களில் பத்து பேருக்கு தரிசனமானார் [யோவான். 20: 13-23]. இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் ஏற்கனவே செத்துவிட்டான். இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு தரிசனமான போது அவர்களோடே தோமா அங்கிருக்க வில்லை[யோவான் 20:24]. உயிர்த்தெழுந்த கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்த பிறகு 40 நாட்கள் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் [அப்போஸ்தலர். 1:3]. பிறகு இயேசு கிறிஸ்து தோமா உட்பட பதினொரு அப்போஸ்தலர்களுக்கும் தரிசனமானார் [யோவான் 20:26-28]. அதன் பின்பு, கலிலேயாக் கடலில் கிறிஸ்து ஏழு அப்போஸ்தலர்களுக்கு தரிசனமானார் [யோவான்21:123].

பின்பு அவர் பரமேறினபோது பதினொரு அப்போஸ்தலருக்கும் தரிசனமானார் [லூக்கா.24: அப்போஸ்தலர் 1]. நம் ஆண்டவர் ஐந்நூறு பேருக்கும் அதிகமான சகோதரருக்கு ஒரே வேளையில் தரிசனமானார் [Iகொரி. 15:6] உயிர்த்தெழுந்த இயேசு பரமேறின பின்பும் கூட சிலருக்கு தரிசனமாகியிருக்கிறார். கிறிஸ்துவுக்காக முதலில் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் தான் கல்லெறிந்து கொலை செய்யப்பட்டு மரிப்பதற்கு முன்பாக உயிர்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டான்! [அப்போஸ்தலர். 7:55,56] தர்சு பட்டணத்து சவுல் [பவுல்] தமஸ்குவுக்கு செல்லும் பாதையில் உயிர்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டான் [அப்போஸ்தலர். 9:22; Iகொரி. 15:18]. இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் தான் கிறிஸ்தவம் மேம்படுத்துவதற்கு முதன்மை ஆதாரமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழ வில்லையென்றால் கிறிஸ்துவம் வெறுமையானதாகவும், பயனற்ற தாகவும் இருக்கும் [I கொரி. 15:19] கிறிஸ்தவத்தின் மையமே I கொரி. 15:1–4 வசனங்களில் தான் அடங்கியிருக்கிறது. ✝

## ஒருவர் போதும்

- ஒரு நல்ல சாமாரியன் எரிகோ சாலையில் காயப்படுத்தப் பட்ட மனிதனைக் காப்பாற்றினான் (லூக்கா 10).
- ஒரு வயதான மனிதர் (நோவா) மனித இனம் முற்றிலும் அழியா மலிருக்கக் காரணமாயிருந்தார் (ஆதியாகமம் 6; எபிரெயர் 11:7)
- ஒரு பெண் (எஸ்தர்) காலகாலமாக கடைபிடிக்கப்பட்ட பாரம் பரியத்தை உடைத்தெறிந்து ஒட்டுமொத்த தேசத்தையும் இனப்படுகொலையிலிருந்து காப்பாற்றினாள் ( எஸ்தர்4)
- ஒரு சிறு பையன் கொண்டு வந்த ஐந்து அப்பமும், இரண்டு மீனும் ஐயாயிரம் பேரை போஷித்தது (யோவான்6)

# பேசாதவனின் பிரசங்கம்
## Preaching of the man who never spoke

E.Z.S. Rajanayagam

விசுவாச வீரர்களின் பட்டியலை ஏந்தி நிற்கும் எபிரெயர் நிருபம், ஏராளமான நீதிமான்களின் விசுவாச வாழ்க்கையை எடுத்துக் கொடுக்கிறது. இப்பட்டியலில் இடம் பெறாத, யோபு போன்ற வேறு சில தேவ மனிதர்களும் உண்டு. ஆனால், அவர்கள் எல்லோரைக் காட்டிலும் அல்லது அவர்கள் எல்லோருக்குள்ளும் ஒரே ஒருவனை வேதாகமம் வேறுபடுத்திக் காட்டுகிறது. இத்தனைக்கும், அவன் தனது வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினதாக வேதாகமம் எங்கும் காணோம். கர்த்தருடனோ அல்லது தனது குடும்பத்தாருடனோ எதுவும் பேசினதாகக் கூட குறிப்பிடவில்லை. இவன் வாழ்வு பற்றி ஒரு சில வசனங்களே வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. [ஆதி.4:1-8].

விசுவாசத்திற்காக வாழ்ந்து, விசுவாசத்திற்காகப் பாராட்டுப் பெற்று, விசுவாசத்திற்காக அங்கிகரிக்கப்பட்டு, விசுவாசத்திற்காக மரித்த முதல் மனிதன் இவன் தான். குடும்பத்தில் பிறக்கும் தலைப்பிள்ளைக்கு பெற்றோரிடம் தனிச்சிறப்பு உள்ளது போல், விசுவாசக் குடும்பத்தில், முதன்முதலாகப் பிறந்த இவனுக்கு பரிசுத்த ஆவியானவர் தனியொரு முக்கியத்துவம் தந்துள்ளார்.

சரி, இந்த சிறப்பான மனிதன் நமக்காக என்ன பேசுகிறான் என்று கவனிப்போம். இவன் பேசும் அனைத்தையும் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் சிலவற்றை நாம் இங்கே கவனிப்போம்.

### I. விசுவாசம் பற்றி ஆபேலின் பிரசங்கம்

மரித்தும் பேசும் ஆபேல், நமக்குச் செய்யும் முதல் பிரசங்கம் விசுவாசம் பற்றியது. இது பற்றி பேச விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் அனைவருக்குமே தகுதியிருந்தாலும், இவன் தகுதி அலாதியானது. நான் ஏற்கனவே சொன்னது போல, அத்தகுதியை இப்பூமியில் பெற்ற முதல் மனிதன் இவன். இவனுடைய விசுவாசத்திற்கு தேவனே சாட்சி பகர்ந்திருக்கிறார்.

ஆபேலின் விசுவாசம் வெளியாவதற்குக் காரணமாயிருந்தது, இவனும் இவன் சகோதரனாகிய காயீனும் கொண்டு வந்த காணிக்கைகளே. ஆம், இருவரும் காணிக்கை கொண்டு வந்தது குறித்து வசனம் இவ்வாறாகக் கூறுகிறது. ...காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும், தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில்

கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார் (ஆதி. 4:3,4). காயீனின் காணிக்கை ஏன் தள்ளப்பட்டது, ஆபேலின் காணிக்கை ஏன் அங்கீகரிக்கப்பட்டதென்பதற்கு ஆதியாகமத்தில் போதுமான விளக்கம் இல்லாவிட்டாலும், எபிரெயரில் அதற்கு சரியான அர்த்தமும், முறையான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆம், அங்கே உள்ள அர்த்தம் மிகுந்த வார்த்தை, **விசுவாசத்தினாலே** என்பது தான்.

அப்படியானால், ஆபேல் எதை விசுவாசித்திருப்பான்? கொஞ்சம் சிந்தனைக்குத் தீனி போட்டுப் பார்ப்போம். எதை விசுவாசித்திருக்க வேண்டும்? எந்தப் பிரசங்கமும் அந்த நாட்களில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் எப்படி விசுவாசித்திருப்பான்? ஆம், தனக்காகக் கொண்டு வரப்படும். காணிக்கை இப்படிப்பட்டதாக இருக்கவேண்டுமென்று தேவன் நிச்சயம் அவர்களுக்கு வெளிப் படுத்தியிருப்பார். சந்தேகம் வேண்டாம். தேவன் வெளிப்படுத்தினதை இவன் விசுவாசித்துள்ளான். தேவன் எதைக் கொண்டு வரவேண்டு மென்று சொன்னாரோ, எவ்வளவு கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ, எப்பொழுது கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ அவைகளையெல்லாம் அவன் அப்படியே செய்து ள்ளான். ஆகவே தான், தேவ அங்கீகாரம் இவனுக்குக் கிடைத்துள்ளது.

தேவனுடைய வெளிப்பாட்டின் மீது தனக்கிருந்த விசுவாசத்தை கிரியைகளோடு நடத்திக் காட்டினான். வெறும் விசுவாசத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் காணிக்கையைக் கொண்டு வந்தான் என்று வேதம் கூறுகிறது. அவன் விசுவாசம், கிரியைகளோடும், கீழ்ப்படிதலோடும் இருந்துள்ளது. **கிரியை இல்லாத விசுவாசம் செத்ததென்று** யாக்கோபு ஆசிரியர் அடித்துக் கூறுகிறார் (யாக்கோபு. 2:26). ஆனால், காயீனுடைய விசுவாசம் செத்ததாக இருந்துள்ளது. தேவன் சொன்னதை விசுவாசித்துத்தான். காயீனும் காணிக்கை கொண்டு வந்துள்ளான். கிரியையும் ஓரளவு அவனிடம் இருந்தே உள்ளது. ஆனால், கீழ்ப்படிதல் அங்கே மறைந்து போய்விட்டது. நிராகரிப்புக்கு இது தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

கீழ்ப்படியாமையையும், கிரியை இல்லாத விசுவாசத்தையும், காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக்கொள்ளமாட்டார். பரிசுத்த ஆவியானவர் சாமுவேலைக் கொண்டு கூறுவதைக் கவனியுங்கள். ... **கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்** (Iசாமு.15:22). கர்த்தருக்கு எது பிரியம் என்று தெரிகிறதா? ஆகவே, ஆபேலைப் போல தேவ அங்கீ காரத்தைப் பெறும் அனைத்து முயற்சிகளையும் நாம் எடுப்போம்.

## II. பாடுகள் பற்றி ஆபேலின் பிரசங்கம்.

ஆபேல் நமக்காகச் செய்யும் அடுத்த பிரசங்கம் பாடுகள் பற்றியது. தேவனுடைய நாமத்திற்காகப் பாடு அனுபவித்த முதல் மனிதனும் இவன் தான். தன் உயிரை விடும் அளவுக்கு இவன் பாடு அனுபவித்துள்ளபடியால், பாடுகள் பற்றி நமக்கெல்லாம் பாடம் கற்றுக் கொடுக்க இவன் முற்றிலும் தகுதியானவனே.

இவனுக்கு நேர்ந்த நிலையைக்குறித்து வேதம் இவ்வாறாகச் சொல்லுகிறது. காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்: அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன், தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி, அவனைக் கொலை செய்தான் [ஆதி. 4:8]. காணிக்கை செலுதத்தப்பட்ட நாளுக்கும், ஆபேல் கொலை செய்யப்பட்ட நாளுக்கும் இடையே எவ்வளவு காலம் இருந்ததென்று தெரியவில்லை. ஆனால், அந்த நாளிலேயே கொலை செய்யப்பட்டான் என்று வேதம் கூறவில்லை.

ஆகவே, கொலை செய்யும் அளவு மூர்க்கமடைந்திருந்த தனது சகோதரனின் கோபாவேசத்திற்கு உள்ளான நிலையில், சில நாட்களையாவது இவன் கழித்திருக்க வேண்டும். அதாவது, தேவன் தனக்குக் கட்டளையிட்டிருந்தவற்றைச் செய்வதற்காக இவன் சரீரப்பாடுகளை அனுபவித்திருக்க வேண்டும். அதன் பிறகே, இவன் கொலைக்கு ஆளாகியிருக்க வேண்டும். நான் கூறும் இக்கருத்துப்படி நடந்திருக்க வாய்ப்பில்லையென்று சொல்லிவிட முடியாது.

எப்படியோ, மரித்தும் பேசும் இம்மாமனிதன் தேவ சித்தத்தை ஒருவன் நிறைவேற்றும்போது, அல்லது நிறைவேற்ற விரும்பும் போது பாடுகளும் துன்பங்களும் உண்டு என்று அழுத்தம் திருத்தமாக நமக்குச் சொல்லியிருக்கிறார்.

ஆகவே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்பும் நம்முடைய வாழ்க்கையிலும் பாடுகள் இருக்கவே செய்யும். நமக்குத் தான் இந்தப்பாடுகள் என்று நினைத்து, சோர்ந்து, விசுவாசத்தில் பின் வாங்கிப் போக வேண்டாம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ரோஜா மலர் படுக்கையல்ல. அது கல்லும், முள்ளும் நிறைந்த காட்டுப் பாதை. இந்த உண்மை தெரியாமல் கிறிஸ்தவத்தை அநேகர் ஏற்றுக்கொள்வதினால் தான், வந்த வேகத்தில் பின் வாங்கிப்போய் விடுகின்றனர்.

அருமையானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் வரும் பாடுகளைக் குறித்துக் கலங்காமல், ஆபேலைப் போல தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாயிருந்து, உயிரையே விட வேண்டியிருந்தாலும் சத்தியத்தில் நிலைத் திருப்போம். இக்காரியத்தில் நாம் ஆபேலின் பிரசங்கத்திற்குச் செவி கொடுப்போம்.

## III. பாடுகளுக்கான பலன் பற்றி ஆபேலின் பிரசங்கம்.

ஆபேலுடைய மூன்றாம் பிரசங்கம், பாடுகளுக்கான பலன் பற்றியது. ஒருவேளை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதினால் வரும் பாடுகளைக் கண்டு நாம் பயந்து போய், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாமா என்று சிந்திப்போமானால், ஆபேலின் இப்பிரசங்கம் நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தேவனுக்காக முதன் முதலாகப் பாடுகள் பட்டவன் ஆபேல் என்பதை நாம் கண்டோம். **தனக்காக இரத்தம் சிந்திய ஆபேலை தேவன் மறக்கவில்லை.** எபிரெய ஆசிரியரைக்கொண்டு கொடுத்த விசுவாசிகளின் பட்டியலில் இவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது. எத்தனையோ பேர் ஆபேலுக்கு இணையாகப் பாடுகள் பல பட்டு தேவனுக்காக வாழ்ந்து மரித்திருந்தாலும், **மரித்தும் பேசுகிறான்** என்ற சிறப்புப் பட்டமும் இவனுக்குத்தான் சொந்தமாக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஆபேல் வாழ்ந்து, மரித்து சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாகியும் தேவன் அவன் விசுவாசத்தையும், செயலையும் மறக்காமல், இப்பூமியில் அவனுக்கு என்ன அந்தஸ்து கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்தார். நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, இதைவிட மேலான அந்தஸ்து. ஆம், **நித்தியஜீவன்** என்ற அந்தஸ்தும் வாடாத **ஜீவ கிரீடமும்** அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிந்திய வருடங்களில் அநேக அல்லல்களுக்கு ஆட்பட்டு, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் சொல்லும் போது, **நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப் படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்து நாள் உபத்திரவப் படுவீர்கள், ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்று கூறியுள்ளார் [வெளி. 2:10].**

ஆகவே, எனக்கு அருமையானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ ஜிவியத்தில் நமக்கு நேரிடும் துன்பங்களையும் சோர்வுகளையும் கண்டு நாம் திடனற்றுப் போக வேண்டாம். அது எந்த வகையான பாடுகளாக இருந்தாலும் கலங்க வேண்டாம். கிறிஸ்தவ ஜீவியத்தில் முனைப்புக் காட்டுவோம். ஊழியத்தை உற்சாகமாகச் செய்வோம். தைரியமாகச் செயல்படுவோம். ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் | Louis Rushmore | ... 1 |
| பேசாதவனின் பிரசங்கம் | E.Z.S. Rajanayagam | ... 5 |
| திரித்துவத்தைப் பிரதிபலித்தல் | Jerry Bates | ... 11 |
| கர்த்தருடைய வார்த்தை ..... | Byron Nichols | ... 14 |
| வெட்கப்படாதீர்கள் | J.C. Choate | ... 19 |
| தேவனுடைய ஈவு | P.C. Philemon Rajah | ... 22 |
| ஆத்தும இரட்சிப்பு | B. Arjunan | ... 26 |
| இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் ... | E.Z.Selvanayagam | ... 30 |
| அவன் வானத்திற்கும், பூமிக்கும் ...... | Benny Martin | ... 35 |


## தேவன் – God


| | | |
|---|---|---|
| தேவதூதர்கள் | Betty Burton choate | ... 38 |
| ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை | Wayne Jackson | ... 42 |
| கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? | Dan Wheeler | ... 45 |


## சாட்சியங்கள் – Evidences


| | | |
|---|---|---|
| வேதாகமப் பதிவுகளை விசுவாசி ... | Ardron Hinton | ... 47 |
| தேவன் ஒழுங்கின்மையிலிருந்தும், ... | Dave Everson | ... 50 |


## தேவனுடைய வார்த்தை – The Word Of God


| | | |
|---|---|---|
| கர்த்தாவே, உம்முடைய சத்தியத்தில்.... | Randall Caselman | ... 52 |
| கர்த்தரோடு சர்ச்சை செய்தல் | Carroll Sites | ... 55 |
| தேவனுடைய வார்த்தையைக் கலப்பாய் .... | Ken Tyler | ... 57 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 59 |

## இரட்சிப்பு – Salvation


| | | |
|---|---|---|
| சவுல் எப்போது இரட்சிக்கப்பட்டார்? | Raymond Elliott | ... 62 |
| ஒரு மனிதன் மரித்தால்... | Dean Fugett | ... 65 |
| ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ... | Marshall Keeble | ... 67 |


## சபை – The Church


| | | |
|---|---|---|
| பவுலின் பிரசங்கத்தைப் பற்றிய.... | Clarence DeLoach | ... 68 |
| காணவில்லை | Steve Higginbotham | ... 72 |
| சபையின் உரிமையாளர் யார்? | Hollis Miller | ... 73 |


## வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by


| | | |
|---|---|---|
| சொல்லப்படாத ஒன்று | David Deffenbaugh | ... 76 |
| பெருகும் கிருபை | Bobby Dockery | ... 78 |
| நான் ஏன் விசுவாசிக்க வேண்டும் | Kevin L.Moore | ... 81 |
| ஒரே அமர்வில் வேத பாட வகுப்பு | Paul Holland | ... 84 |
| எல்லாவற்றையும் அநுபவிக்க ... | Hugo McCord | ... 87 |
| மனிதனின் தேவைகள் | Perry N.Hall | ... 90 |


## செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action



| | | |
|---|---|---|
| அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | Bonnie Rushmore | ... 91 |
| எதிர்பார்ப்பை விட அதிகமாகச்... | Dale Grissom | ... 94 |
| பிரதான கட்டளை - யாருக்கு....? | Bill Keele | ... 96 |


## ஆராதனை – Worship


| | | |
|---|---|---|
| கர்த்தருடைய பந்தி | Dennis gulledge | ... 99 |
| இந்தக் கொடுக்கிற காரியத்தில் | Jerry jenkins | ... 102 |
| பாடுங்கள்! | Travis L. Quertermous | ... 104 |


## வேதாகம கதாபாத்திரங்கள் – Bible Characters


| | | |
|---|---|---|
| அக்கினிமயமான புறப்பாடு | Betty Tucker | ... 107 |



இணை ஆசிரியர் உரை

# திரித்துவத்தைப் பிரதிபலித்தல்
# Reflecting the Trinity

Jerry Bates

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் திரித்துவக் கொள்கையைப் பற்றி நன்றாக அறிந்திருக்கிறார்கள். அதைப்போலவே பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சபை ஒன்றாய் இருப்பதன் அவசியத்தையும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் இவ்விரு காரியங்களுக்கு மிடையே உள்ள தொடர்பைப்பற்றி சிலராவது அக்கறைப்படுகிறார்கள் என்று நான் நம்புகிறேன். நாம் ஒருவருக்கொருவர் எப்படி தொடர்பு டையவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்குத் திரித்துவம் உண்மை யாகவே ஒரு மாதிரி என்று கருதுகிறேன். நாம் தேவனைப் போலிருக்க பிரயாசப்பட வேண்டும், எனவே, நாம் ஒன்றாயிருக்க வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமும் பிதாவும் ஒன்றாயிருந்தது போல நாமும் ஒன்றாயிருக்க வேண்டுமென்று சொன்னார். யோவான்17:20-ல் **நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக் கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார்.** எனவே தேவத்துவத்திலுள்ள ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தைப் பற்றிய புரிந்த கொள்ளுதல் நாம், சீஷர்களாக ஒருவருக்கொருவர் எப்படிப்பட்ட உறவைக்கொண்டிருக்க வேண்டும் என்பதைத் துல்லியமாகப்புரிந்து கொள்ள அவசியமாயிருக்கிறது.

**முதலாவது,** எல்லாக் கிறிஸ்தவர்களும் சம மதிப்புள்ளவர்களாக கருதப்பட வேண்டும். நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு திறமை களையும், தாலந்துகளையும், செயல்பாடுகளையும் உடையவர்களாக இருந்தாலும் கூட தேவனுடைய பார்வையில் சம மதிப்புள்ளவர் களாகவே இருக்கிறோம். [கலாத்தியர் 3:27] **ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே.** எனவே சபையில் ஓர் அங்கத்தினர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்துவதோ அல்லது ஒருவர் மதிப்பற்றவராக நடத்தப்படுவதோ பொருத்தமற்ற

ஒன்றாகத்தான் இருக்கும். சபைக்குள்ளே ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ மற்றவர்களுடைய தேவைகளை, சூழ்நிலைகளை, ஆசைகளை அவமதிக்கும்போது அங்கே பிரச்சனை உருவாகி, ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தி அது பல்வேறுப்பட்ட பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது. தேவத்துவத்துக்குள் பதவிப் பிரச்சனைகளையெல்லாம் ஒருவரால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அதுபோலவே, சபைக்குள்ளும் இத்தகைய பிரச்சனைகள் உருவாகவே கூடாது.

**இரண்டாவது,** சபையில் யாரையும் மற்றவர்களை விட உயர்வாக கருதக்கூடாது. நிச்சயமாகவே, சபையில் பிரசங்கியார் அல்லது சபையை வழிநடத்துபவர்களுடைய செயல்பாடுகள் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும் வண்ணம் அமையும். சிலருக்கு அதிகமான தாலந்துகள், திறமைகள் இருக்கும். அவர்கள் சபைக்கு வெளிப் படையாகச் செய்யும் காரியங்கள் பெரிதாகப் பார்க்கப்படும். சிலர் பொருளாதார வளர்ச்சி அடைந்தபடியால் மற்றவர்களைவிட அதிக மாகக் கொடுப்பார்கள். இத்தகைய சூழ்நிலைகளில் ஒரு குறிப்பிட்ட சாராரை மற்றவர்களைவிட உயர்வாக எண்ணுவது மனித இயல்பாக இருக்கிறது. இதை விளக்க இரண்டு உதாரணங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அந்த ஏழை விதவை இரண்டு காசுகளைத்தான் கொடுத்தாள். இருந்தபோதிலும் இயேசு கிறிஸ்து அவளை அதிகமாகப் பாராட்டி மற்றெல்லாரையும்விட அவள் தான் அதிகமாகக் கொடுத்தாள் என்று சொல்கிறார். யாக்கோபு இரண்டாம் அதிகாரத்தில் சபையில் ஐசுவரியவான்களுக்கு அதிகக் கனம் கொடுத்து பட்சபாதம் காட்டுவதை யாக்கோபு வன்மையாகக் கண்டிக்கிறார். தேவன் தம்முடைய ஜனங்களுடைய வாழ்க்கையில் பல ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் கூட எல்லோரையும் அவர் சமமாகத்தான் மதிக்கிறார், நாமும் அப்படியே செய்யவேண்டும். தேவத்துவத்தில் யாரும் மற்ற வரைவிட முக்கியமானவராகக் கருதப்படுவதில்லை. அதேபோல், சபையில் யாரும் மற்ற அங்கத்தினர்களைவிட முக்கியமானவர்களாகக் கருதப்படக்கூடாது.

யாருக்கு முக்கியத்துவம் என்னும் பிரச்சனை சபைகளுக் கிடையே காணப்படுவதையும் நம்மால் காணமுடிகிறது. பெரும்பாலும் ஒரு சபையில் செயல்படும் செயல் மற்ற சபைகளின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் யோசனையின்றி செய்யப் படுகிறது. சில வேளைகளில் சபைகளுக்கிடையே கடும் போட்டி ஏற் படுகிறது. எது பெரிய சபை எனும் போட்டி நிலவுகிறது. கிறிஸ்தவம் என்பது வியாபாரத்தைப் போன்று போட்டி நிறைந்ததாகக் காணப்படக் கூடாது. ஏனென்றால், வியாபாரத்தில் பெரிய நிறுனங்கள் சிறிய நிறுவனங்களை இல்லாமல் செய்துவிடுகின்றன. பெரிய சபைகள் சிறிய சபைகளை தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்தாமல் தங்கள் வளங்களை சிறிய சபைகளுக்கு உதவ பயன்படுத்த வேண்டும். தேவத்துவத்தில் அங்கம் வகிக்கும் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யும்

போது, அது மற்றவர்கள் மீது எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தும் என யோசனையின்றி ஒரு காரியத்தை செய்யும் சூழ்நிலையைப் பார்க்கவே முடியாது. ஆகவே, நாம் திரித்துவத்தை பிரதிபலிக்கும் போது சபைகள் மற்ற சபைகளுடைய நலனுக்காக அக்கறைப்பட வேண்டும். இந்த துக்ககரமான சூழ்நிலை சில வேளைகளில் வெளிநாட்டு ஊழியத் தளங்களிலும் தெரிகிறது. அமெரிக்காவில் உள்ள சபைகள் வெளி நாடுகளில் ஏற்கனவே இருக்கின்ற இடங்களில் பணியைத் தொடங்குவார்கள், ஏற்கனவே இருக்கின்ற சபைகளோடு சேர்ந்து வேலை செய்வதற்குப் பதிலாக முற்றிலும் புதிய பணியை அங்கே அவர்கள் தொடங்குவார்கள். சில வேளைகளில் ஏற்கனவே இருக்கின்ற சபைக்கு மிக அருகிலேயே சபையைத் தொடங்கி விடுவார்கள். இது தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்கு எதிர் வினையை ஏற்படுத்துகின்ற ஒரு காரியம் மாத்திரமல்ல, ஏற்கனவே தொடங்கப்பட்ட சபையை சோர்வடையச் செய்கிற காரியமாக இது மாறிவிடுகிறது. தேவத்துவத்தில் எந்த ஒரு உறுப்பினரும் மற்ற உறுப்பினருக்குத் தீங்கிழைக்கும் எந்த ஒரு காரியத்தையோ அல்லது சோர்வடையச் செய்யும் எந்த ஒரு காரியத்தையோ ஒருபோதும் செய்யமாட்டார்கள். அதே குணாதிசயங்களை அவருடைய சபையும் பிரதிபலிக்க வேண்டும்.

இதே பிரச்சனை நம் குடும்பங்களிலும் எதிரொலிப்பதை நம்மால் காண முடியும். குடும்பத்தில் எந்த ஒரு நபரும், ஒரு சிறு குழந்தை கூட குறைவான மதிப்புள்ள ஒன்றாக பார்க்கப்படக்கூடாது. அதே நேரத்தில் குடும்பத்தில் எந்த ஒரு உறுப்பினரும் சோம்பேறித்தனமாக இருந்து கொண்டு குடும்ப நலனுக்கு தன் பங்களிப்பை குறைவாகச் செலுத்தக் கூடாது. திரித்துவத்தில் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரே குறிக்கோளு க்காக வேலைச் செய்கிறார்கள். ஆகவே, நம் வாழ்வில் நாம் தேவனைப் பிரதிபலிக்கும் போது, வீட்டில் எல்லோரும் ஒன்றிணைந்து, அவரவர் சுய விருப்பங்களை துறந்து குடும்ப நலனுக்காகப் பாடுபடவேண்டும்.

திரித்துவத்தை நாம் புரிந்து கொள்வது நம் வாழ்வில் எப்படிப்பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். தேவனும் கிறிஸ்துவும் தம்முடைய ஊழியக் காரர்களுடைய ஜீவியங்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள். பவுல் கலாத்தியர்2:21 ல் **கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்** என்று சொன்னார். தேவனும் கிறிஸ்துவும் நமக்குள் வாழ வேண்டுமென்றால் தேவனுடைய தன்மையை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் ஒருவருக்கொருவர் எவ்விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்பது முடிவாக தேவத்துவத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அன்பில் தான் தெளிவாகக் காண முடிகிறது. நாம் திரித்துவத்தை புரிந்து கொள்ள வில்லையென்றால், எந்த அஸ்திபாரத்தின் மீதிருக்கிற மாதிரியை நாம் பின்பற்ற வேண்டுமோ அந்த அஸ்திபாரத்தை நாம் அகற்றிப் போடுகிறவர்களாயிருப்போம். ✝

# கர்த்தருடைய வார்த்தை தொடர்ந்து தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகிறது

## The word of the lord continues under attack

Byron Nichols



வேதாகமம் பழைய ஏற்பாடாக இருந்தாலும் சரி, புதிய ஏற்பாடாக இருந்தாலும் சரி தேவ ஆவியினால் ஏவப்பட்டிருக்கிற வார்த்தைகளைக் குறித்து விசுவசத்தோடும், மரியாதை யோடும் நன்றி நிறைந்த இருதயத்தோடும் வெளிப்படுத்தியிருக்கிற வாக்கியங் களால் நிரம்பி வழிகிறது. மற்றெந்த எழுத்தாளரையும் விட தாவீது தேவனுடைய வார்த்தையைக் குறித்து தன்னுடைய நன்றி உணர்வையும், அந்த தேவனுடைய வார்த்தை தன் வாழ்க்கை முழுவதும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்னும் தன் ஆர்வத்தையும் திரும்பத் திரும்ப பதிவு செய்திருக்கிறார்.

சங்கீதம் 119-ல் மட்டும் நாம் பார்த்தால் கூட தாவீது குறிப்பட்டிருக்கிற சில காரியங்களை நாம் கூர்ந்து கவனிக்க முடியும். **நான் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்**[வசனம்11] **உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்** உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம் [வசனம் 97] உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன் [வசனம் 103,104]**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது''** [வசனம் 105]

ஆனாலும், என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது; மிகுந்த கொள்ளையுடமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறது போல, நான் உமது வார்த்தையின் பேரில் மகிழுகிறேன் [வசனம் 161,162]

சங்கீதக்காரனான தாவீது தேவனிடத்திலிருந்து கேட்டவைகளையும், வேத வாக்கியங்களில் வாசித்தவைகளையும் அப்படியே விசுவாசித்தார். மேலும், தாவீது அவைகளெல்லாம் தேவனுடைய மனதிலிருந்து எவ்வித மாற்றங்களோ அல்லது பிழைகளோ இல்லாமல் வந்தது என்று தன்னுடைய ஒட்டுமொத்த நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

வேதாகமம் சுமார் 40 வித்தியாசமான எழுத்தாளர்களுக்கு ஏறத்தாழ 1600 ஆண்டுகளாக தேவனால் கொடுக்கப்பட்ட வழிமுறைகளின் விளைவாகும். தேவன் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இந்த எழுத்தாளர்களின் மனதில் ஊதி அல்லது ஏவி தாம் எதை விரும்பினாரோ அதை வேத வாக்கியங்களில் இடம் பெறும்படி செய்தார். மற்ற எல்லா வேதாகம எழுத்தாளர்களைப் போலவே அப்போஸ்தலராகிய பவுலும் [II தீமோத்தேயு 3:16,17] வசனங்களிலுள்ள வார்த்தைகள் உட்பட பரிசுத்த ஆவியனவராலே வழி நடத்தப்பட்டு எழுதவும், பேசவும் செய்தார்.

**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.** இதை அப்போஸ்தலனாகிய பேதுரு முழுமையாக ஒத்துக்கொண்டு II பேதுரு 1:20,21] வசனங்களில் இவ்விதமாக எழுதுகிறார். **வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.**

காலப்போக்கில் அநேகர் அதிலும் குறிப்பாக மதத்தலைவர்கள் இன்னும் தேவனுடைய ஊக்கமான, உண்மையான செய்தித் தொடர் பாளர்களாக கருதப்படும் நபர்கள் வேதாகமம் உண்மையாகவே ஏவப்பட வில்லை, அது எப்போதுமே நம்பத்தகுந்ததல்ல, மேலும் அது மனிதனுக்கான முழுமையான பாதுகாப்பான வழிகாட்டியாக கருதப் படக்கூடாது என்றெல்லாம் சொல்வது எவ்வளவு சோககரமானது. இக்கூற்று பரிசுத்த வேதவாக்கியத்தோடு நேரடியாக முரண்படுகிறது. குறிப்பாக I தெசலோனிக்கேயர் 2:13 ல் பவுலின் வார்த்தைகளோடு

நேரடியாக முரண்படுகிறது. [ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல் தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.

கிறிஸ்தவர்கள் மனக்கிலேசத்தை உண்டாக்கும் தகவல்களை எல்லாம் அறிந்துகொள்ள வேண்டும். அவைகளில் ஒன்றை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அமெரிக்க ஐக்கிய தேசத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற விரிவுரையாளர் ஒருவர் சமீபத்தில் ஒரு புத்தகம் ஒன்றை எழுதினார். அதில் அவர் எழுதியிருக்கிற காரியங்கள் வேதாகமத்தோடு முற்றிலும் முரண்படுகிறது. உதாரணமாக, இயேசு கிறிஸ்துவைப் பற்றி நாம் அறிந்திருக்கிற காரியங்களெல்லாம் அவரைப் பற்றி எழுதிய மனிதர்கள் அவரைப் பற்றி எண்ணியவைகள் தான் என்று உறுதியாகச் சொல்கிறார். மேலும், ஆதி கிறிஸ்தவ சுவிசேஷ புத்தகங்களில் இடம் பெற்றுள்ள எல்லாமே வரலாற்று நினைவிலிருந்து எடுக்கப்பட்டது. அல்லது கடனாக பெறப்பட்டது அல்லது புதிதாக கண்டு பிடிக்கப்பட்டது என்று இந்த நபர் ஆணித்தரமாகச் சொன்னார்.

மேலும், தேவ ஆவியினால் ஏவப்படாத இந்த மனிதன் சுருக்கமாகச் சொன்னால் இயேசுவைப் பற்றி சுவிசேஷப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளெல்லாமே வெறும் வதந்திகள் தான் என்று கூச்சமில்லாமல் கூறினார். இன்றும் கூடுதலாக இந்த நபர் இயேசுவின் வார்ததைகள் என்று வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் காரியங்கள் கூட வரலாற்றுப் பூர்வமாக சாத்தியமானவைகள் ஆனால், வரலாற்றுப் பூர்வமாக நிச்சயமானவைகளல்ல என்று வாதாடினார். இந்த மனிதன் வெட்கமின்றி தைரியமாக இயேசுவின் வாழ்க்கைக்குப் பிறகு பல ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் வரலாறெனத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதாகச் சொன்னார். அதாவது, பாரபட்சமற்ற முறையில் அவைகள் எழுதப்படவில்லை என்று சொன்னார்.

இந்த மனிதன் இயேசு கிறிஸ்துவைப்பற்றி தன் கையாலேயே எழுதிய எழுத்துக்களிலிருந்து கூடுதலான தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். "இயேசு எந்த நடத்தை நெறி முறைகளையும் விட்டுச் செல்லவில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர் பல நடைமுறை விதிகளை விட்டுவிட்டார். அப்படி யிருக்கும் போது அவருடைய கருத்துக்களை நாம் எப்படி நம் அன்றாட வாழ்வில் இணைக்க முடியும் அல்லது சொந்தமாக்க முடியும் என்று கேள்வி கேட்டார்.

அநேகமாக, நீங்கள் உங்களுக்குள்ளையே ''வேதாகமத்தை கரைத்துக்குடித்த ஒரு வேதாகம பேராசிரியரால் எப்படி வேதாகமத்தைப் பற்றியும், தேவனுடைய குமாரனைப் பற்றியும் எப்படி இவ்வளவு தரக்குறைவாக, மரியாதையற்ற முறையில் பேசியிருக்க முடியும்? என்று கேட்கலாம். மேலும், அந்த நபர் தேவனுடைய வார்த்தைகளில் சில பகுதிகள் மற்றவைகளை விட நம்பத்தகுந்தவைகள் என்று சொல்கிறார். தேவனுடைய வார்த்தைகளில் சில பகுதிகள் தவறான வைகளென்றும் நம்பத்தகுந்தவைகளல்ல என்றும் சொல்லும் ஒரு மனிதனுக்கு வேதாகமத்தின் சில பகுதிகள் எதற்காக வேண்டும்?

இது வேறு சில கேள்விகளுக்கும் வழி வகுத்திருக்கிறது, தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்கிறவர்கள் இக் கேள்விகளை தங்களுக்குள்ளேயே கேட்டுக் கொள்ள வேண்டும். வேதாகமம் தன்னை எப்படி சொல்லிக் கொள்கிறதோ அதை அப்படியே நாம் விசுவாசிக்கிறோமோ? வேதாகமம் பிழையற்ற தேவனால் ஏவப்பட்ட புத்தகம் என்பதை விசுவாசிக்கிறோமா? வேதாகமத்தின் சில பகுதிகள் உண்மையானதென்றும், சில பகுதிகள் நம்பத்தகுந்தவைகளல்ல என்றும் விசுவாசிக்கிறோமா? அன்பான கிறிஸ்தவ நண்பரே, இக்கேள்விகள் மிகவும் முக்கியமானவைகள். கர்த்தருடைய சபையில் சிலர் இன்னும் சொல்லப்போனால் உயர் பதவிகளில் இருப்பவர்கள் கூட அந்த பேராசிரியரின் எண்ணத்தில் ஒரு எந்த குற்றத்தையும் காணவில்லை. உண்மையில் தனிப்பட்ட முறையில் சபை அங்கத்தினரில் எனக்கு இரண்டு பேரைத் தெரியும். அவ்விருவரும் பல்கலைக்கழகத்தில் அப்பேராசிரியரோடு மத சம்மந்தமான பாடப்பிரிவில் பணிபுரிந்தவர்கள் தான். இவர்கள் வெளிப்படையாகவே வேதாகமத்தைத் தரக் குறைவாகப் பேசிய பேராசிரியரின் மேதாவித்தனத்தைக் குறித்தும், போதனையைக் குறித்தும் பெருமையாகப் பேசி ஒத்துக் கொண்டார்கள்.

நான் இவைகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கான நோக்கம் கர்த்தருடைய சபையில் இன்றைய நாட்களில் நிலவும் நடை முறைகளும், உறுதிப்பாடுகளும் காலப்போக்கில் பல மாற்றங் களுக்குட்பட இருப்பதால் சபை விழித்திருக்க வேண்டும் என்பது தான். இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் சபையில் புதிதல்ல. கிறிஸ்து எப்போது சபையை ஸ்தாபித்தாரோ அப்போதிலிருந்து பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது. 1800களின் கடைசி பகுதியில் மற்றும் 1900களின் முதல் பகுதியில் W. Mc Garvey என்பவர் சபையில் பிரபலமான வேத வல்லுனராகக் கருதப்பட்டார். இவர் பல ஆண்டுகளாக அமெரிக்காவிலுள்ள கெண்டகி வேதாகம கல்லூரியில்

உறுதியான நம்பத்தகுந்த தலைவராக இருந்து வந்தார். அப்போது தாராளக் கொள்கையுடைய ஒருவர் உள்ளே வந்தார். அவர் Mc Gravey போன்று வேதாகமத்தைப் பற்றிய உறுதியான கொள்கைப்பிடிப்புடையவராக இருக்கவில்லை. அப்படிப்பட்ட தாராளக்கொள்கையை உடைய அவர் வேதாகமக் கல்லூரியை ஒட்டுமொத்தமாக தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டார். அன்று தொடங்கிய தாராளக் கொள்கை தான் இன்றும் கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடுகிறது.

பல வருடங்களுக்கு முன்பு Charles pugh III என்னும் பேர் கொண்ட ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் ஒரு முறை வேதாகமக் கல்லூரி நூலகத்தைப் பார்வையிட்டார். அவர் அந்த நூலகத்திற்குப் பொறுப்பாளராக இருந்தவரிடம் வேதாகமத்தின் ஏவப்படுதல் மற்றும் பிழையற்ற தன்மை சம்மந்தமான உபதேசங்களை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று கேட்டபோது, பதில் பெருஞ்சத்தத்துடன் இல்லை என்று எதிரொலித்தது! மேலும், மளிகைக்கடைப் பட்டியலில் பொருட்களின் பெயர்களை வாசிப்பது போல வேதாகமத்தில் எல்லாவற்றையும் உண்மையாக வாசிக்க முடிவதில்லை என்றும் பதில் வந்தது.

அருமையான வாசகரே! இத்தத்துவம் நாம் முதலில் பார்த்த வேதாகமப் பேராசிரியரின் தத்துவத்திற்கு ஒத்திருக்கிறதல்லவா? மேலும், இது அப்பேராசிரியரின் கருத்துகளுக்கு ஆதரவளித்து அதன் விளைவாக வேதாகமத்தையும் தேவனையும் பரிசுத்த ஆவியானவரையும், அப்போஸ்தலர்களையும், வேதாகமத்தின் மற்ற எழுத்தாளர்களையும் பரிகாசம் செய்த சக பேராசிரியர்களின் மனப்பான்மைக்கு ஒத்திருக்கிறதல்லவா?

நாமெல்லோரும் *I*யோவான் 4:1ல் இடம் பெற்றுள்ள யோவானின் எச்சரிப்புக்கு செவிகொடுப்பது ஞானமான காரியமாயிருக்கும். " **பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.** நாம் ஆவிகளை (போதகர்களை) சோதித்தறிவது தேவ ஆவியினால் ஏவப்பட்ட நம்பத்தகுந்த தேவனுடைய வார்த்தையினால் இருக்க வேண்டும். ✝

# வெட்கப்படாதீர்கள்
## Don`t Be Ashamed

J.C.Choate



கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து பலர் வெட்கப் படுகிறார்கள். இவர்கள் தாங்கள் தேவனை விசுவாசிப்பவர்கள் என்று மற்றவர்களுக்கு அறிவிக்கக் கூட வெட்கப்படுகிறார்கள். ஆனால், இவர்களும் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் சபையைக் குறித்து வெட்கப்படுவது மாத்திரமல்லாமல் இயேசு கிறிஸ்துவினால் வாங்கப்பட்டு அவருடைய இரத்தத்தினாலே கழுவப்பட்ட ஒரே சபை கிறிஸ்துவின் சபை தான் என்று அறிவிப்பதற்கும் வெட்கப்படுகிறார்கள். இவர்கள் தவறான காரியங்களுக்கு எதிராகப் பேசவும், சத்தியத்திற்காக நிற்கவும் தயங்குகிறார்கள்.

ஜனங்கள் ஏன் பேசாமலிருக்கிறார்கள்? ஏனென்றால், அவர்கள் உலகத்தை அதிகமாக நேசித்து உலகத்திலும் சரி, மத உலகிலும் சரி, பெரும்பாலானவர்களோடு இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் எல்லோர் மத்தியிலும் பிரசித்தி பெறவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவும் விரும்புகிறார்கள். **அவர்கள் சிறுபான்மையிரோடு ஐக்கியம் வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்று மற்றவர்களால் கருதப்படவும் விரும்புவதில்லை.** அவர்கள் கிறிஸ்துவுக்காக வாயைத் திறந்து

பேசுவதை விட்டுவிட்டு தங்கள் நண்பர்களோடும், அயலாரோடும், குடும்ப அங்கத்தினரோடும் கூட்டு வைத்துக் கொள்வதன் மூலமாக அவர்களிடம் பகைத்துக் கொள்ளாதபடி பார்த்துக்கொள்கிறார்கள். ஆனால், இத்தகைய மனநிலை கர்த்தரை மறுதலிப்பதை விட மரிக்கத் துணிந்த ஆதிக்கிறிஸ்துவர்களின் மனநிலைக்கு நேர்மறையானது. **அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரமாக எப்பட்டபடியினால் [அப்போஸ்தலர் 5:41]** அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார் [ரோமர் 1:16,17] **கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.** மேலும் [ரோமர் 9:33] **இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுஎதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று."** மற்றும் [ரோமர்10:11] "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் [பிலிப்பியர் 1:20-21]. நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும் போல, இப் பொழுதும் மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும்: சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும், நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும். கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். தொடர்ந்து பவுல் [IIதீமோத் 1:8-12]ல் இவ்விதமாகச் சொல்கிறார். IIதீமோத்தேயு 2-15 **நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய்யிரு.** எபிரெய ஆசிரியர் தேவனைப் பற்றியும், அவருடைய பிள்ளைகளைப் பற்றியும் பேசும்போது இவ்விதமாகச் சொல்கிறார் [எபிரெயன் 2:10-12]. ஏனென்றால், தமக்காகவும் தம்மாலேயும், சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அருவருக்கேற்றதாயிருந்தது. எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக் கிறார்கள்: இதினிமித்தம் அவர்களை சகோதரதென்று சொல்ல அவர் வெட்கப்படாமல், உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும் எழுதியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுருவும் இப்படிச் சொல்கிறார். ஆதலால், உங்களில் ஒருவனும்

கொலைபாதகனாயாவது திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நியகாரியங்களில் தலையீட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்[1பேதுரு 4:15,16]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்னும் தெளிவாக விளக்குகிறார் [மத்தேயு 10:32,33]மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். மேலும், கிறிஸ்து இவ்விதமாகச் சொல்கிறார். ...என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படகிறானோ, அவனைக் குறித்து மனுஷ குமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும் போது வெட்கப்படுவார் [மாற்கு 8:38] என்று சொல்கிறார்.

என் நண்பரே, கர்த்தருக்கு முன்பாக நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா [ எபிரெயர் 11:6: யோவான் 14:1] அல்லது மனுஷருடைய உபதேசங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்களா? நீங்கள் கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கிறீர்களா? [மத்தேயு16:18] அல்லது மனிதனால் தொடங்கப்பட்ட மார்க்கப் பிரிவினை சபையில் அங்கம் வகிக்கிறீர்களா?

நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறீர்களா.[அப்போ 4:12] அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட நாமத்தைத் தரித்திருக்கிறீர்களா? கடைசி நாளில் நாமெல்லாரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை தான் நம்மை நியாயத்தீர்க்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் [யோவான் 12:48]. தயவு செய்து கிறிஸ்துவையும் அவருடைய சித்தத்தையும் நிராகரிக்காதீர்கள். அவரைக் குறித்து வெட்கப்படாதீர்கள். கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக வாழுங்கள். ஒருநாள் அவர் உங்களை தமக்கு சொந்தமானவர்களாக ஏற்றுக்கொண்டு பரலோகத்தில் உங்களுக்கு நித்திய வீட்டைத் தருவார்.

# தேவனுடைய ஈவு
## *The gift of god*

*P.C. Philemon Rajah*

**Biblos** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து பைபிள் [Bible] என்ற வார்த்தை வந்தது. இதன் பொருள் **புத்தகம்** என்பதாகும். வேதாகமம், அனைத்து மக்களுக்குமான அறிவுறுத்தலுள்ள தேவனுடைய புத்தமாக இருக்கிறது. வரலாற்றில் மிக நீண்டகாலமாக வேத வசனங்களைப் போன்று அநேகருடைய வாழ்வை மாற்றிய, மனதைப் பாதித்த வார்த்தைகள் [புத்தகங்கள்] வேறு எதுவும் இல்லை. ஏனென்றால், வேதமானது மனிதனுடைய நடக்கை மற்றும் நம்பிக்கைகளைச் சரிசெய்யும் படியாக தேவனால் வெளிப்படுத்தபட்ட அவருடைய சத்தியமாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட ஊக்கமளிக்கும் புத்தகங்களும் கடிதங்களுமான, அறுபத்தாறு புத்தகங்கள் அடங்கிய நூலகமாக வேதாகமம் இருக்கிறது. பொதுவாக, ஒரு மனிதனின் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, மனிதனால் ஏற்படுத்த பட்ட மதங்களுக்கு நேர்மாறாக, 1500 ஆண்டுகளுக்கு மேலாக பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட 40 வித்தியாசப்பட்ட மனிதர்களைக் கொண்டு எழுதப்பட்ட புத்தகமாக வேதாகமம் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் பல நுற்றாண்டுகளில் மாறுப்பட்ட காலங்களில் வாழ்ந்திட்ட வித்தியாசமானவர்களாயிருந்தாலும், வேத புத்தகத்தில் எந்த வித முரண்பாடும் இன்றி ஒருமித்த கருத்தே உள்ளது என்பது வியப்பான விஷயமாகவே இருக்கின்றது. நிச்சயமாகவே, அவர்களை விட வல்லமையான ஒருவரால் அவர்கள் அனைவரும் வழி நடத்தப் பட்டிருந்தாலொழிய, இது சாத்தியமாகியிருக்காது.

### 1. வேதபுத்தகம் மனித குலத்திற்கான தேவனுடைய ஆசீர்வாதம்

தேவன் மனித குலத்தை ஆசீர்வதிக்கும்படியாகக் கொடுத்த மிகப்பெரிய அவருடைய கொடைதான் பரிசுத்த வேதாகமம். வேத புத்தகத்தின் வாயிலாக ஒருவர் தேவன் யார் என அறிந்து, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் போது, எல்லாம் வல்ல தேவன் அந்த ஒரு நபரை மிகவும் ஆசீர்வதிக்கிறார். ஆனால், அதையும் தாண்டி ஒரு மிகப்பெரிய விஷயம் என்னவென்றால், வேத புத்தகம் தேவனால் கொடுக்கப்பட்ட மனிதனுக்கான மிகப்பெரிய ஆசீர்வாதம் என்பதே! **2 தீமோ. 3:16,17.**

ஒருவர் மிகவும் மோசமானவராக இருந்தாலும், அவர் வாழ்வு எவ்வளவு அலங்கோலமாக இருந்தாலும், அந்த நபர் வேத வசனங்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பாரானால், வேதம் அவருடைய வாழ்வை நெறிப்படுத்தி, மிகவும் அழகாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், வேத வசனங்கள் தேவனால் பேசப்பட்டவைகள் [**மத். 22:43: அப் 1:16: 2 தீமோ. 3:16**]: அவை பரிசுத்த தேவனால், பரிசுத்த ஆவியானவர் வழியாக , மனிதகுலத்தை வந்தடைந்த மிகப்பெரிய பொக்கிஷம் [**யோவான் 14:26: யோவான் 16:13, 1கொரி. 2:10-13, 2பேது. 1:20,23**].

**2. வேதாகமம், தேவனுடைய வார்த்தை என நாம் உறுதியாக நம்பலாம்!**

தெய்வீக ஆதாரத்தை அஸ்திபாரமாகக் கொண்டதாக வேதாகமம் இருக்கிறது. தேவன் தம்முடைய வார்த்தைகளை வெறுமனே போதிப் பதற்கும் எழுதுவதற்கும் மனிதர்களை அனுப்பாமல், அவர்களைக் கொண்டு அற்புதங்களையும் நடப்பித்து, அவைகளால் தமது வார்த்தைகளை உறுதிப்படுத்தினார் **மாற்கு 16:19-20**. இன்றைய நாட்களிலும் வேதாகமம், தொல்பொருள் ஆராய்ச்சி, அறிவியல் மற்றும் பல்வேறுபட்ட சோதனைகளால் நம்பத்தகுந்த புத்தகமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வேதாகமம் மனிதனுக்கான தேவனுடைய செய்தியாக இருக்கிறபடியால், அதை மாற்றவோ, திருத்தவோ நம்மில் யாருக்கும் அதிகாரம் இல்லை. அவ்வாறு செய்வது மிகவும் தண்டனைக்குரிய பாவமாக இருக்கிறது [**வெளி. 22:18,19**].

தேவன் தமது அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் மற்றும் பலத்த செய்கைகளினாலும், நேர்மையினாலும் வேதாகமத்தினை தன்னுடைய வார்த்தையாக நிரூபித்திருக்கிறார் [**1ராஜா. 18:30: யோவான். 20:30,31: அப். 2:33: அப். 4:29-30:1 கொரி 2:1-51; கலா.3:5: எபி.2:3-4**]. ஆகயால், நாம் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை முழுமையாக நம்பலாம்.

**3. வேதாகமம் நம்முடைய வாழ்வை மாற்றக்கூடியது !**

ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் சரி அவர்கள் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று விசுவாசித்தால், அவர்களுக்கு வேதாகமத்தின் செய்திகள் மிகப்பெரிய பொக்கிஷ மாகும். விசுவாசிக்கின்ற அந்த நபர், வேத வசனங்களுக்குக் கீழ்ப்படியும்போது, அது அவரை சுயத்தைத் தூக்கியெறிய செய்து, தேவனுடைய விருப்பத்திற்கேற்ற நபராக மறுரூபமாக்கிட [உருமாற்றம் அல்ல, உள்ளம் மாற்றம்] வல்லமையுள்ளது [**எபி. 4:12**].

வேத வசனங்களை நம் இருதயத்தில் வைத்துக்கொள்ள முடியும் [**கொலோ. 3:16:1 யோவான் 2:14**]. வேத வசனங்கள் நம் உள்ளத்தி லிருக்கும் போது, அது நம்மை தேவனுக்கு விரோதமான பாவத்திற்கு

விலக்கிக் காக்கும் [சங். 31:31;119:11]: மேலும், வேத வசனங்களுக்கு ஒருவர் நேர்மையுடன் கீழ்ப்படியும்போது, நிச்சயமாகவே வேத வசனம் அவரது வாழ்வை மாற்றும் [யாக். 1:22-25; 1 யோவான். 1:6-7:2 யோவான். 4:3, யோவான். 3-4] காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்தவர்களைக் கூட மிகவும் நாகரீகமானவர்களாக வேத வசனம் மாற்றியிருக்கிறது.

## 4. வேதாகமம் எல்லாவற்றிற்கும் போதுமானதாக இருக்கிறது.

தேவனுக்குப் பிரியமாக இருப்பதற்குத் தேவையான எல்லா வழிகாட்டுதல்களையும் வேதாகமமானது தன்னிடத்தில் வைத்துள்ளது . அது எல்லாவற்றிற்கும் போதுமானதாக இருப்பதால், வேதாகமமானது நம்முடைய வாழ்விலே பல மாற்றங்களைக் கொண்டு வர வல்லமையுள்ளது.

[1பேதுரு 2-1-2: 2பேது 1:3, 1தெச 4:1, 3யோவா3-4], நம்மை நித்திய ஜீவனுக்குள் வழிநடத்த வல்லமையுள்ளதாயிருக்கிறது. அது மட்டுமல்லாது நாம் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ, நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்திட போதுமான தாயிருக்கிறது [2தீமோ. 3:16-17:1 பேதுரு 5:12, கொலோ. 1:5-10:1 தீமோ. 3:14]. வேத வசனம் நமக்கு சமாதனத்தைத் தரவும் [சங். 119:15], நமக்கு சந்தோஷத்தைத் தரவும் [சங். 119:92 ], நமக்கு வல்லமையைத் தரவும் [எபி. 4:12], நம்மை விடுவிக்கவும் [யோவான் 8:32], நம்மை பரிசுத்தப்படுத்தவும் [யோவான் 17:17], நம்மை ஞானவான்களாக்கவும் [சங். 119:99-100], நம் ஜீவனை சுதந்தரிக்கவும் [யாக். 1:25], நாம் தேவபக்தியுள்ளவர்களாய் வாழ்ந்து, நித்திய ஜீவனை சுதந்தரிக்கவும் [2பேதுரு 1:3] மற்றும் நம்மை நியாயந்தீர்க்கவும்[யோவான் 12:48] என எல்லாவற்றிற்கும் போதுமானதாக இருக்கிறது.

## 5. வேதாகமம் மனிதனுக்கான தேவனுடைய கடைசி வெளிப்பாடாகும்.

வேதாகமமானது மனிதனுக்கான தேவனுடைய சத்தியத்தின் கடைசி வெளிப்பாடாக இருக்கிறது. வெளிப்படுத்தல் என்ற வேதாகமத்தின் கடைசி புத்தகத்தை எழுதியதின் மூலம், தேவன் இந்த உலக வரலாற்றில் கடைசி காலங்களில் மனிதன் தெரிந்து கொள்ளும் படி எல்லா வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்தி முடித்து விட்டார். எபி. 1:1-2. பரலோக தேவன், வேதாகமத்திற்கு வெளியே நமக்கு எதையும் வெளிப்படுத்தப் போவதாக எந்த வாக்கும் அளிக்கவில்லை. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிற பரிசுத்த ஆவியானவரே கூட, சுயமாய் எதுவும் பேசாமல், கிறிஸ்து போதித் தவைகளின் படிதான் நம்மை வழிநடத்துவார் என்று, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே சொன்னார் [யோவான் 16:13-15 ].

இன்னும் சிலர், ஆண்டவர் இயேசு ரகசியமாக வருவார் என்கின்றனர். நிச்சயமாகவே வேதவசனத்தில் இதற்கான தெளிவான மற்றும் உறுதியான ஆதாரம் இல்லை; **ரகசியமாக வருவேன்** என இயேசு வாக்குரைக்கவும் இல்லை; அவர் எல்லோரும் பார்க்கும் படியாக எப்படிச் சென்றாரோ, அப்படியே எல்லோரும் பார்க்கும் வண்ணமாகவே திரும்ப வருவார் என்று வேதாகமம் கூறுகின்றது. அவரது வருகை என்பது இந்த உலகத்தின் முடிவு என்றும் வேதாகமம் தெளிவாகக் கூறுகின்றது [**அப். 1:9-11,வெளி.1:6 -8,2பேதுரு. 3:8-14**]. இயேசு, என் ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்கு உரியது அல்ல என்று சொல்லிய பின்பும் [யோவான் 18:36] அவர் **1000 வருடம்** பூமியில் அரசாளுவார் என்கின்றனர். அவருக்கு ஆயிரம் வருடம் ஒரு நாள் போன்றது என வேதவசனம் சொல்லியிருக்கிறது [**2பேதுரு 3:10-12**] அதுமட்டும்மல்லாது, இப்படிப்பட்ட சாபத்திற்கேதுவான நூதனமான உபதேசத்தை விசுவாசிப்பது எவ்வளவு சாபக்கேடான தாயிருக்கும் [கலா. 1:9-10] எனவே, நாம் மிகவும் விழிப்புடன் இருந்து வேதவசனத்தின் வெளிச்சத்திலே நடப்போம் **2தீமோ. 4:3-5.**

### 6. வேதாகமத்தின் மூலமாகவே இன்று தேவன் செயல்படுகிறார்

தேவன்நம்முடைய வாழ்விலே அவருடைய வசனங்களின் மூலமாகவே இடைப்படுகிறார், பேசுகிறார் மற்றும் உறவாடுகிறார். வேத வசனங்களைக் கேட்கவோ, வாசிக்கவோ, அதன்படி நடக்கவோ தவிர்க்கும் ஒருவர் உண்மையிலேயே தேவனுடைய உறவைத் தான் புறக்கணிக்கிறார்.

**தேவன் எங்களிடம் பேச வேண்டாம்! நீர்பேசும்** என இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம் சொன்னார்கள். இது எவ்வளவு வேதனையான காரியம் [**யாத். 20:19**] நீங்கள் வேதம் வாசிக்காதபோதும், வேத ஆராய்சிக்கு செல்லாதபோதும், வேதவசனத்தின்படி வாழாமல் இருப்பதற்கும் காரணங்களை அடுக்கி நியாயப்படுத்த முற்படும்போதும் தேவனது குரலை, சத்தத்தைக், கேட்க மனதில்லாதிருக்கிறீர்கள்; மற்றும் தேவனுடைய பேச்சைக் கேட்காதபடி உங்களது காதுகளையும் இருதயத்தையும் அடைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே நிசப்தமான உண்மை **எபி. 3:7-8 .**

அன்பானவர்களே! எல்லாம் வல்ல தேவன் நமக்குக் கொடுத்துள்ள மிகப்பெரிய ஒப்பற்ற ஈவுகளில் ஒன்று வேதாகமம். ஆகையால் வேதாகமத்தை தினசரி வாசிப்போம், சுவாசிப்போம், விசுவாசிப்போம், யாசிப்போம், மற்றும் மனப்பாடம் செய்து இருதயத்திற்குள் பத்திரப் படுத்துவோம். மேலும், மாற்கு 16:16 ன் படி ஆண்டவருடைய கட்டளைக்கிணங்க மாற்றவர்களுக்கும் அதை அறிவிப்போம். ✞

# ஆத்தும இரட்சிப்பு
# Salvation Of Soul

B.Arjunan

**நா**ம் ஆத்துமாவில் வாழ்கின்றோம், இந்த ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். சரீரத்தில் நம்முடைய தேவைகளுக்காக பல காரியங்களைச் செய்துகொள்கிறோம். அது நம்முடைய சரீர பாதுகாப்பிற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆகையால், சில வருடங்கள் இந்த மண்ணான சரீரத்தில் வாழ்ந்து பின்பு தேவன் நியமித்திருக்கிற இடத்திற்கு ஆத்துமா கடந்து செல்கிறது. இந்த ஆத்துமா பாதாளத்திற்கு அதாவது அவியாத அக்கினிக்கு தப்புவிக்கப்பட வேண்டுமானால் நாம் இந்த ஆத்துமாவில் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறபடி நடக்க வேண்டும். யாக்கோபு என்ற தேவ தாசன் சொல்லுகிறார்: **நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப் பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயு மிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்** (யாக்.1:21). நாம் நம்முடைய வாழ்க்கையில் களையப்பட வேண்டியவைகளைக் களைந்து, இருதயத்தில் வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை சாந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு நோயாளிக்கு ஆப்ரேஷன் செய்ய இருக்கும் போது அவன் வழக்கமாக செய்யும் தவறை செய்யமுடியாது, மாறாக, அப்படி அவன் மீறி செய்வானேயானால் அவனுக்கு ஆப்ரேஷன் செய்யமாட்டார்கள். அவன் பிழைப்பது கடினமாகிவிடும். நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட ஒரே வழிதான் உண்டு. ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிற கர்த்தருடைய வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பு கிடைக்கும்.

கர்த்தருடைய வசனம் உலகமெங்கும் பிரசிங்கிக்கப்பட்டு வருகிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்ப்டுகிறார்கள். முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை வளர்ந்து பெருகிற்று. ஆதி அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வசனத்தை யூதர்களுக்கு மட்டுமல்ல புறஜாதிகளுக்கும் பிரசங்கித்தார்கள். **யூதர்கள் பக்தியும்** கனமுமுள்ள ஸ்திரிகளையும் பட்டணத்து முதலாளிகளையும் ஏவி விட்டு, பவுலையும் பர்ன பாவையும் துன்பப்படுத்தும் படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப்

புறம்பாக அவர்களைத் துரத்தி விட்டார்கள் [அப்.13:50]. ஆனால் புறஜாதிகள் அவர்களை ஏற்றுக்கொண்டார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப் படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள் [அப். 13:38]. இன்றைக்கும் பாரம்பரிய மக்கள் எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கர்த்தருடைய வசனத்தைப் புறம்பாக்கிப் போடுகிறார்கள். ஆகையால், புறஜாதி மக்களுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்கள் இந்த புறஜாதி மக்களைப்போல கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? அப்படி ஏற்றுக்கொள்ளும்போது உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். **கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது** என சங். 15:7-ல் வாசிக்கிறோம். ஆத்துமாவை உயிர்ப்பிக்கக்கூடியது கர்த்தருடைய வசனமே. இதற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட முயற்சியுங்கள்.

ஆத்துமா இரட்சிக்கப்பட ஆண்டவர் இயேசுவிடம் கற்றுக்கொள்ள வேண்டும். வேதாகம கல்விக்கூடங்கள் நிறைந்து காணப்படுகிறது. ஆனால், அங்கே கிறிஸ்துவினுடைய போதனைகள் இருக்கிறதா? பரிசுத்த வேதாகமத்தின்படி நடக்கிறார்களா? என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். வேதாகமத்திற்கு விரோதமாக நடக்கிற கூட்டங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசிக்கிறவர்கள் சிலர் என்றே பார்க்கிறோம். ஆகையால் **கேட்டின் வாசலையே** அநேகர் நாடு கிறார்கள். இயேசு சொல்கிறார்; **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்** என்கிறார் [மத். 11:29]. எத்தனை பாட சாலைகள் இருந்தாலும் நாம் ஆண்டவர் இயேசுவின் பாதம் அமர்ந்து கற்றுக்கொள்ளும் அனுபவம் தனிச்சிறப்பானது. ஏனெனில், அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறார். நம்முடைய கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்ளுவார். அவர் கொடுக்கிறதான வசனத்தை அதாவது, அந்த நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்டு கற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய கோரிக்கையை முதலாவது அவர் நிறை வேற்றட்டும் பின்பு அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்கிறேன் என்று சொல்லுகிறவர்கள் தான் அதிகம். ஆனால் ஆண்டவர் சொல்லுகிற காரியம் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார்.

நீங்கள் பள்ளியில் வேலை பார்க்கிற ஒரு ஆசிரியையாக இருக்கலாம். ஆனால், உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் ஆசிரியையாக வீட்டில் இருக்க முடியாது. நீங்கள் செய்ய வேண்டியது என்ன? அவனை ஆண்டவருடைய பாதத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அப்படியானால் புதிய ஏற்பாட்டை அவனுக்கு வாங்கிக் கொடுத்து அதைப் படிக்கச் சொல்ல வேண்டும். அப்பொழுது அவன் இயேசுவின் அநேக போதனைகளைப் படித்து அதன்படி தன்னை மாற்றியமைத்துக் கொள்ளுவான். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின் வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார் (எபி. 10:38). ஆகையால் உங்களுடைய ஆத்துமாவைக் குறித்த விஷயத்தில் சற்று கவனமாக இருங்கள். உங்களுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. அது நித்தியத்தில் தேவனோடு வாழவேண்டும். ஆகையால், உங்கள் ஆத்துமா ஈடேற விசுவாசிகளாகத் தொடர்ந்து செயல்படுங்கள்.

உங்களுடைய ஆத்துமா குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படவேண்டும். அதற்கு நான் என்னசெய்ய வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாரும் குற்றம் செய்து தேவமகிமையற்றவர் களானோம். ஆனால், நாம் மனந்திரும்பும்போது மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுகிறோம். சிலுவையில் தொங்கிய கள்ளன் குற்றவாளி, ஆனால், அவன் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு இயேசுவை நோக்கி உம்முடைய ராஜ்யத்தில் அடியேனை நினைத்தருளும் என்று கேட்டபோது; அவன், அந்த நிமிடமே மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுகிறான். அதேபோல் ஐசுவரியவனாக வாழ்ந்து மரித்தவன் பாதாளத்தில் வேதனைப் படுகிறான். அவன் பூமியிலிருந்த நாட்களில் லாசருவை நினைக்கவில்லை, அவனுக்கு உதவி செய்யவில்லை, அவன் மனந் திரும்பவில்லை. ஆனால், பாதாளத்தில் இருந்து கொண்டு இந்த இடத்திற்கு என் சகோதரர்கள் வந்துவிடாதபடி அவர்களுக்குச் செய்தி அனுப்பும் படியாக ஆபிரகாமைப் பார்த்து கேட்டான். அவனுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அது கூடாததாயிருந்தது. நாம் பூமியில் தேவனிடத்தில் விசுவாசம் கொள்ளும்போது ஆத்தும இரட்சிப்பை அடைகிறோம்.

ஆகையால், நாம் செய்யவேண்டுவதென்ன? உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமா வோடும், உன் முழு மனதோடும், உன் முழுப்பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை எனக் காண்கிறோம் (மாற்கு.12:30). நீங்கள் முழுமையுமாக தேவனிடத்தில் அன்பு கூருகிறீர்களா? அன்பு கூருகிறேன் என்று சொல்லி, ஆண்டவரிலும் மேலாக, உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூருவீர் களானால் தேவனுடைய அன்பை இழப்பீர்கள். ஏனெனில், என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல என்று ஆண்டவர்

சொல்லியிருக்கிறார். ஆகையால் உலகத்தில் உள்ளவைகளைக் காட்டிலும் தேவனிடத்தில் முழுமையுமாக அன்பு செலுத்துங்கள். நீங்கள் உங்களுடைய இருதயத்தையும், ஆத்துமாவையும், மனதையும், பலத்தையும் கர்த்தருடைய சமூகத்தில் முழுமையுமாகக் கொடுக்கும் போது உங்களை உண்டாக்கின தேவன் உங்களை கண்ணோக்கிப் பார்ப்பார். இந்த விசுவாசத்தை ஆபிரகாம் பெற்றிருந்தார். அந்த விதமான விசுவாசத்தை நீங்களும் பெற்றுக்கொண்டு, உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக என்று 1 தெச.5:3-ல் சொல்லப்பட்டபடி காக்கப்படும்.

அநேகர் சரிரத்தில் வெளிப்பிரகாரமாக குற்றமற்றவர்களாக நடந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆத்துமாவில் அல்லது ஆவியில் அசுத்தர்களாக காணப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மூன்றிலுமே குற்றமுள்ளவர்களாக வாழ்கிறார்கள். ஒரு மனிதன் செய்யும் தவறை கண்களால் பார்த்து விடலாம். ஆனால் ஆவிக்குரிய குற்றம் செய்கிறவர்களையும், ஆத்துமாவில் குற்றம் செய்கிறவர்களையும் நாம் அறியோம். ஆனால், தேவன் அறிவார். நியாயத்தில் அப்படிப்பட்டவர்களைக் கொண்டு வந்து நிறுத்துவார். அப்பொழுது அவனுடைய குற்றங்கள் வெளியாகும்.

## நம்முடைய ஆத்துமாவை யாரிடம் ஒப்படைக்க வேண்டும்?

ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பும் என வேதத்தில் படிக்கிறோம். இயேசு சிலுவையில் ஜீவனை விடும் வேளையில் **பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்** என்றார். தன்னை அனுப்பின பிதாவின் வேலைகளை முடித்து ஜீவனை ஒப்புக்கொடுத்தார். பூமியில் ஆத்துமாவில் சிருஷ்டிக்கப்பட்ட நீங்களும் நானும் அதே காரியத்தையே செய்யவேண்டும். ஆண்டவர் தம்மை அனுப்பின பிதாவை நோக்கிப் பார்த்தார். அவரிடம் தன்னை ஒப்புக்கொடுத்தார். பேதுரு சொல்லுகிறார்; **தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக்கடவர்கள்** என்கிறார்[1பேதுரு.14:9]. நீங்கள் அந்த விதமாக ஒப்புகொடுக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? அல்லது எவனை விழுங்கலாமோ என்று கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல வலம் வரும் பிசாசுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கப்போகிறீர்களா? இன்றே சிந்தித்து உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவர் இயேசுவுக்கும் அவருடைய திருப்பணி வேலைகளுக்கும் ஒப்புக்கொடுங்கள். ✞

# இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும்

## God`s part and man`s part in salvation

E.Z.Selvanayagam

கிறிஸ்துவ மார்க்கத்தில் எந்த ஒருதலைப்பை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கும் என்பது வேதனையான உண்மை. இரட்சிப்பு என்ற பொருளும் அதற்கு விதி விலக்கல்ல. இந்த முரண்பாடுகளுக்கு வேதாகமம் பொறுப்பல்ல. மனிதனுடைய சிறுமதியும், தான் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துக்குப் பொருந்தி வருகிற வசனங்களை மட்டும் தேடிப்பிடித்து வைத்துக் கொண்டு, அதே பொருளைக் கூறுகிற மற்ற வசனப் பகுதிகளைப் புறக்கணித்து ஓதுக்கி ஓரம் கட்டி விடுவது தான் காரணம்.

எந்த ஒரு கருத்தைப் பற்றியும் சரியான முடிவுக்கு வரவேண்டு மானால் அதைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லா வசனங்களையும் படித்து அவைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்று ஆய்வு செய்து முடிவுக்கு வர வேண்டும். இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கதைபோல கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இரட்சிப்பு போன்ற முக்கியமான காரியங்கள் நம் நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். இதைக்குறித்து இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பது அபாயம். ஆகவே, அதைப்பற்றி வேத வசனங்களின் வெளிச்சத்தில் தெளிவு பெற முயற்சிப்போம்.

**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல,** (எபே. 2:8,9) என்கிற வசனத்தையும், **தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்கிற வசனத்தையும் ஆதாரமாகக் காட்டி இரட்சிப்பு தேவனுடைய சுத்த கிருபை அதில் மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று போதிக்கின்றனர்.

வேறு சிலர்... **நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்** (மாற்கு 16 : 15, 16) என்கிற வசனத்தையும் **நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்**

**கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்** [அப்.2:38] என்கிற வசனத்தையும் சுட்டிக்காட்டி இரட்சிப் பின் திட்டத்தில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்று வற்புறுத்துவர். இருசாரார் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், அது முழு உண்மை அல்ல. ஒருவர் இரட்சிப்புக்கு தேனுடைய கிருபை மட்டும் போதும் என்கிறார். மற்றவர் மனுஷருடைய கிரியை முக்கியம் என்கிறார். வேதாகமத்தை ஆய்ந்து பார்க்கின், இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபையும் வேண்டும்; மனுஷனுடைய கிரியையும் வேண்டும் என்பது புலனாகும்.

கிறிஸ்து, இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்று போதிக்கவில்லை. **என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது என்கிறார்** [யோவான் 7 : 16]. அந்த உபதேசத்தில் மாற்றம் ஏற்படக்கூடாது என்று கருதி, அதைத் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்புவித்து, அவைகளின்படி அப்போஸ்தலர்களை வழிநடத்தவும், மறந்து போனதை நினைவுக்குக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்தார். [யோவான் 14 : 26 ; 16 : 13] அப்படிப்பட்ட தெளிவான முறையில் உபதேசத்தைக் கற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் இரட்சிப்பைக் குறித்து எபேசு பட்டணத்தில் ஒரு மாதிரியும், கொரிந்து பட்ணத்துக்குப் போய் அங்கு ஒருவிதமாகவும் போதிப்பார்களா? நிச்சயமாக இல்லை. மாறாக, இயேசு கிறிஸ்து தான் ஒரே வழி, அவருடைய போதனையும் ஒரே போதனை தான்.

பல சமயங்களில், நாம் மனிதனுடைய பங்கையே அதிகமாக வலியுறுத்திக் கொண்டு இரட்சிப்பில் தேவ கிருபையின் இன்றியமை யாமையை மறந்து விடுகிறோம். கிருபை என்பது என்ன? கிருபை என் பது நாம் சம்பாதிக்காத ஒரு சொத்து. அதைப் பெற்றுக்கொள்வதற்கு நமக்குத் தகுதி கிடையாது. அதற்கு ஈடாக நாம் ஒன்றும் தர வேண்டிய தில்லை. அதைப் பெற்றுக்கொள்ள ஒரு தகுதியும் நிர்ணயிக்கப்படவும் இல்லை. அதை, ரோமத் திருச்சபைக்கு அப்போஸ்தலன் பவுல் கீழ்வரு மாறு விளக்குகிறார். **கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிரு பையென்று எண்ணப்படாமல் கடன் என்று எண்ணப்படும்.** ஆக, தேவ கிருபை என்பது, இரட்சிக்கப்படுவதற்கு எவ்விதத் தகுதியுமில்லாத ஒருவனை இரட்சிப்புக்குள் கொண்டு வர தேவன் பாராட்டுகிற இரக்கம் என்று சொல்லலாம்.

ஆகையால், இரட்சிக்கப்படுவதற்கு தேவ கிருபையும், கிறிஸ்து வினுடைய தியாகமும் அவசியம். அது இலவசம், ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள விசுவாசம் தேவை **விசுவாசத்தின் மூலம்** என்ற சொல்லாட்சிக்கு அதுவே பொருள். தேவனால் கொடுக்கப்படுகிற இலவசமான ஈவாகிய இரட்சிப்பை மனிதன் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் [எபே. 2:8,9] கூறுகிற

முழுமைக் கருத்து. அப்படியில்லை என்று சொன்னால் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நேரடியாக சொல்லியிருக்கலாமே. **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடர் ஏன்?

ஆகவே, இயேசு இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசத்தின் வெளிப்பாடாகிய மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை நாம் குறைவாக மதிப்பிடவோ உதாசீனம் செய்யவோ கூடாது. ஆனால், ஒன்றை நாம் எல்லாருமே ஒத்துக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தமே இரட்சிப்பின் மையம். இரட்சிப்பின் திட்டத்தில் தேவ கிருபை சிலுவையின் வழியாக மனிதனிடத்திற்கு இறங்கி வருகிறது, மனிதனுடைய விசுவாசம் அதே சிலுவை வழியாக தேவனிடத்துக்கு ஏறிப்போகிறது.

**கிருபையின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது கிரியையினால் உண்டானது அல்ல** (எபே.2:8,9) என்கிற வசனப்பகுதி நமக்குப் போதிக்கிற உண்மை என்ன? நம்முடைய இரட்சிப்புக்கு மனிதனுடைய கிரியைகளை விட தேவ கிருபையே பிரதானமானது. அந்த வல்லமை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் இருக்கிறது. நமக்குப் பாவமன்னிப்பு உண்டாவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே முழு முதற்காரணமாகிறது. நம்முடைய ஆவிக்குரிய நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே. ஆகவே, இரட்சிப்பில் தேவனுடைய பங்கே பிரதானமானது. **கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது தேவனுடைய ஈவு.**

இப்பொழுது இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நாம் சிந்தித்த (எபே. 2:8,9) ஒரு பகுதி நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று மட்டும் சொல்லாமல் மனிதனுடைய விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கூறுகிறது. வேதாகமம் இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்கிறது. அதற்கு இரட்சிப்பு நிபந்தனை அற்றது என்று பொருளா? இல்லை. நீங்கள் ஆம், இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று நான் நம்புகிறேன் என்று சொல்வீர்களானால் **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றாடருக்கு அங்கு வேலையில்லையே! கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு என்பதெல்லாம் எவ்வளவு அர்த்தமுள்ளவைகளோ, அதே அளவு 'விசுவாசத்தைக் கொண்டு' என்பதும் அர்த்தமுள்ளதே! தேவன் தம்முடைய இரக்கத்தினால் இரட்சிப்பை மனிதனுக்கு ஈந்ததற்காக ஸ்தோத்திரம்.

**விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடரில் பொதிந்து கிடக்கிற கருத்து என்ன? இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் சிலுவையை மையமாகக் கொண்டிருக்கிறது. சிலுவையல்லாமல் மனிதனுடைய பங்கு அர்த்தமற்றது. தேவனுடைய பங்கு கூட சிலுவையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றாலும் கூட விசுவாசம், ஒப்புக்கொடுத்தல் என்பவைகளின் பொருளை சரியாக

விளங்கிக்கொள்ளாமற்போனால், இழந்த பாவிக்கு அது பொருளற்றதே. ஒருவன் தன்னுடைய விசுவாசத்தைக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்த வேண்டும்.

முதலாவது நாம் இரட்சிப்பின் வேர் எது என்று கண்டுபிடித்து பின்னர் இரட்சிப்பின் கனியைத் தேட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தமே இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்பது சரி. ஆனால் நம்மை நீதிமானாக்குவது நமது விசுவாசமே. விசுவாசம் என்பது செயலையும் சேர்த்துத்தான் குறிக்கிறது; செயல் இல்லாத விசுவாசத்தை வேதாகமம் **ஆவியில்லாத சரீரம்** என்று வாக்களிக்கிறது [யாக். 2:26] ரோமர் 4:3ல் **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது** என்கிறது. அவனுடைய விசுவாசம் உறுதியுள்ளதாகவும், உயிருள்ளதாகவும் தேவனுடைய எந்தக் கட்டளைக்கும் கீழ்ப்படியத் தயாராகவும் இருந்தது. அவனுடைய விசுவாசம் செயல்படாததாக இருந்திருந்தால் அது தேவனுக்குப் பிரியமாய் இருந்திருக்காது.

**விசுவாசத்தை கொண்டு** என்ற சொற்றொடரில் மனந்திரும் புதலும் அடக்கம். **அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது** என்று இயேசு சொன்னார். [லூக்கா. 24:47]. மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதன் சிலுவையண்டை வந்து நின்று தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் தேவ நீதியையும் நோக்கிப் பார்த்து கிறிஸ்து இயேசு அவனுக்காக மரித்தார் என்று உணர்வதாகும்.

**விசுவாசத்தைக் கொண்டு என்ற சொற்றொடரில் அறிக்கையிடுதலும் அடக்கம். கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப் புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் [ரோமர். 10:9-10].**

**பின்னர் ஞானஸ்நானம்** : இப்பொழுதும் நம் கண் முன்னே சிலுவையை நிறுத்தி நோக்குகிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். **அதே வேளையில் விசுவாசத்தைக் கொண்டு என்பதையும் மறந்துவிடக்கூடாது.** நம்முடைய கர்த்தரை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்யவேண்டும் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம்முடைய மனதில் மறைந்து கிடக்கும் விசுவாசத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** [மாற்கு 16 : 16].

ஞானஸ்நானத்தின் சிறப்பு நிலையை அறியாமல் மார்க்க உலகம் குழம்பி, பிரிந்து கிடப்பது எத்துணை வேதனை! சிலுவை இல்லாமல் அதற்கு ஒரு சிறப்பும் இல்லை; அதேபோல் விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாமல் சிலுவைக்கு ஒரு சிறப்பும் இல்லை. ஞானஸ்நானத்தில் நாம் அடக்கம் செய்யப்படும்போது, நாம் வெளிப் படையாகவும், அடையாளமாகவும் பாவமன்னிப்புக்கென்று அவருக்குள் மரிக்கிறோம் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது [அப். 2 : 38]. ஏனெனில், இந்த விசுவாச அறிக்கை மூலமாக அருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய மரணத் தினாலும், இரத்தத்தினாலும் தான் நம்முடைய பாவங்களுக்குரிய பிரயாச்சித்தம் கிடைக்கும்.

ஞானஸ்நானம் என்னும் ஒரு செயலின் மூலம் கர்த்தரோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்படுவது எத்துணை மகிழச்சியான காரியம்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்கிறோம். கீழ்ப்படிதலின் மூலம் நம்முடைய பெருமையைப் பறை சாற்றவில்லை. மாறாக, நாம் கர்த்தரை நேசித்துக் கனப்படுத்துகிறோம்.

மாற்கு 16:15ல் விசுவாசமும் ஞானஸ்நானமும், சொல்லப் படாததற்கு முன்பு, பூலோகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம்பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல். ஆக, நம்முடைய ஆத்தும ஆதாயப் பணியை சிலுவையிலிருந்து தொடங்க வேண்டும். தேவனுடைய கிருபையையும் அவருடைய குமாரனின் மரணத்தையும் பிரசங்கிக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் எல்லா சமயங்களிலும் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையுமே பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலன் பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்று கூறியதைக் கேட்டவர்கள் **சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும், என்று இருதயத்தில் குத்தப்பட்டுக் கேட்டனர்**[அப். 2 : 36,37].

ஆகவே, இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் இருக்கிறது. ஒன்றை வலியுறுத்தி மற்றொன்றை புறக்கணிப்பது தேவனுடைய கட்டளைகளை மாமிசமும் மனசும் விரும்புகிற வகையில் பின்பற்றுவதும், போதிப்பதும், தேவ சித்தத்தைப் புறக்கணித்து விட்டு சுய இஷ்டத்தை நிறை வேற்றுவதுமாகும். கடைசி காலத்தில் நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது, அது கிறிஸ்து சொன்ன வசனமே! ✝

# அவன் வானத்துக்கும், பூமிக்கும் நடுவே தொங்கவிடப்பட்டான்

## So he was left hanging between heaven and earth

*Benny Martin*

அருமையானவர்களே, அவன் வானத்துக்கும், பூமிக்கும் நடுவே தொங்கினான் என்னும் தலைப்பைப் பார்க்கும் போது யாரோ ஒருவன் சர்க்கஸில் மக்களை பரவசப்படுத்துவதற்காக சாகச விளையாட்டுகளை செய்து கொண்டிருப்பது போல் தோற்றமளிக்கிறதா? உண்மை என்ன வென்றால், இங்கே ஒரு வாலிபன் தன்னுடைய பேராசையினால், பெருமையினால், கீழ்ப்படியாமையினால் இப்படி ஒரு கோரமான மரணத்தைச் சந்தித்தான். அவன் யார்? என்று நீங்கள் உங்கள் உள்ளங்களில் கேட்பது எனக்குக் கேட்கிறது. அவன் வேறு யாருமில்லை, தாவீதின் குமாரனாகிய அப்சலோம் தான்.

நாமெல்லாரும் அறிந்திருக்கிறபடி தாவீது ஒரு மிகச்சிறந்த தேவதாசன். ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை பரலோகத்தின் தேவன் அரசனாக்கி அரியணையில் அமரச் செய்து அழகு பார்த்தார். வாழ்க்கையின் சில கட்டங்களில் தாவீது விழுந்து போயிருந்தாலும், பின்பு சுதாரித்துக்கொண்டு எழுந்து நிலைத்து நின்றார். அவர் தேவனுடைய இதயத்திற்கு ஏற்ற தாசனாக திகழ்ந்திருக்கிறார். இப்படிப்பட்ட தேவதாசனாகிய தாவீதின் குமாரனாகிய அப்சலோம் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கி சாக வேண்டியதற்கு அவனிடமிருந்த மூன்று மோசமான பண்புகள் காரணங்களாக அமைந்தன. அவைகளை நாம் இப்போது ஒவ்வொன்றாகப் பார்க்கப் போகிறோம்.

### பெருமை

அப்சலோம் என்னும் பெயரின் பொருள் சமாதானத்தின் தகப்பன் என்பதாகும். ஆனால், இந்த அப்சலோம் தன் வாழ்நாள் முழுவதும் சமாதானமில்லாமல்தான் வாழ்ந்திருக்கிறான். இந்த வாலிபன் சாகும்போது கூட சமாதானமில்லாமல்தான் செத்திருக்கிறான். வாலிபனாகிய இந்த அப்சலோம் அழகாக இருந்திருக்கிறான். இவனுடைய அழகைப் பற்றி வேத வசனம் இப்படியாகச் சொல்கிறது.

இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக் கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அவனில் ஒரு பழுதும்

இல்லாதிருந்தது [2 சாமுவேல் 14:25]. இந்த அப்சலோம் பெருமை பிடித்தவனாக இருந்திருக்கிறான். பெருமை இல்லையென்றால் தன் அருமை தகப்பனாகிய தாவீதை அரியணையிலிருந்து இறக்கி விட்டுத் தான் அதில் அமர வேண்டும் என்கிற ஆசை அவனுக்குள் வந்திருக்காது. பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்று [1 பேதுரு 5:5] நாம் வாசிக்கிறோம். இந்த உலகில் ஒருவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் அவர் பெருமையுள்ளவராக இருந்தால் தேவன் அப்படிப்பட்ட நபருக்கு எதிர்த்து நிற்கிறார். யாத்திராகமம் ஐந்தாம் அதிகாரத்தில் எகிப்தின் ராஜாவாயிருந்த பார்வோனிடத்தில் போய் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்திரத்திலே பண்டிகை கொண்டாடும்படி ஜனங்களைப் போகவிடும்படியாக கேட்டுக் கொண்டார்கள். அதற்கு பார்வோன் நான் இஸ்ரவேலைப் போகவிட கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன் என்று பெருமையாகச் சொன்னான். அதன் விளைவாக தேவன் அவனை வாதைகளால் வாதித்தார். நாமும் பெருமையைக் களைந்து விட்டு, தாழ்மையைத் தரித்துக் கொண்டால் தேவன் நமக்கு கிருபையை அளிப்பார்.

**கீழ்ப்படியாமை**

வாலிபனாக இருந்த இந்த அப்சலோம் தன் தகப்பனாகிய தாவீதுக்கு கீழ்ப்படியாமல் கலகம் பண்ணுகிறவனாகக் காணப் பட்டான். தகப்பனை கனம் பண்ண வேண்டும் என்னும் தேவனுடைய கட்டளையை மீறி **பதவிப் பசியில்** தகப்பனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். அப்சலோம் தன் தகப்பனுக்கு கீழ்ப்படிந்திருந்தால் தானாகவே ராஜ பதவி அவனைத் தேடி வந்திருக்கும். தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்தே கீழ்ப்படியாமையை வெறுத்து வருகிறார். இஸ்ர வேலின் ராஜாவாயிருந்த சவுலைப் பார்த்து தேவன் அமலேக்கியரை சங்கரித்து அவர்களை நிர்மூலமாக்க வேண்டுமென்று கட்டளை யிட்டார். ஆனால் சவுல், ராஜாவாகிய ஆகாகையும் ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமான வைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து, அற்பமானவைகளும் உதவாதவை களுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான். அதனால் தேவன் சவுலை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார்[ 1சாமுவேல் 15] ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூட மரணபரியந்தம் தம்மை அனுப்பின பிதாவுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்படிந்தார். எனவே தான், நாம் அவர் குமாரரானாயிருந்தாலும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று எபிரெயர் 5:8 ல் வாசிக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியாத தினால் தான் வனாந்திரத்தில் அலைக்கழிக்கப்பட்டார்கள். இந்த அப்சலோம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் சமாதானத்தையும் இறுதியாக இந்தக்கோர மரணத்தின் மூலமாக தன் உயிரையும் இழந்துவிட்டான்.

## பேராசை

கடைசியாக இந்த அப்சலோம் அரியணைமீது அயராத ஆசை வைத்துக் கொண்டிருந்தான். அவனிடமிருந்த அந்த பேராசையே பெரு நஷ்டமாக மாறிவிட்டது. அப்சலோம் காலைதோறும் எழுந்து பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்றுகொண்டு எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜா வினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது அவனை அழைத்து, நீ எந்த ஊரான் என்று கேட்பான்; அவன் உமது அடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றுக்கடுத்த இன்ன ஊரான் என்றால், அப்பொழுது அப்சலோம் அவனை நோக்கி இதோ உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது, ஆனாலும் ராஜாவினிடத்தில் உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவருமில்லை என்பான். பின்னும் அப்சலோம் வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து நான் அவர்களுக்கு நியாயஞ்செய்யும்படிக்கு என்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான். இந்தப் பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டான் [ 2 சாமுவேல் 15: 16].

அதுமாத்திரமல்ல, அப்சலோம் அரசானாக வேண்டும் என்கிற ஆசையில் தன் தகப்பனாகிய தாவீதுக்கு விரோதமாக போர் தொடுத்தான். ஆனால், தாவீது தேவனுடைய மனுஷனாக இருந்த படியினால் இந்தப் போரிலே அப்சலோம் தோல்வியைத் தழுவினான். போரில் அப்சலோம் கோவேறு கழுதையின் மேல் ஏறி வரும்போது அந்தக்கோவேறு கழுதை ஒரு பெரிய கர்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டு அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். அப்போது அவன் யோவாப்பால் குத்தி கொல்லப்பட்டான். அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு அவன் மேல் மகாப்பெரிய கற்குவியலைக் குவித்தார்கள். வாலிபனாகிய அப்சலோமின் பெருமையும், கீழ்ப்படியாமையும், பேராசையும் அவனுடைய அழிவுக்குக் காரணங்களாக அமைந்தன. இது போன்ற மோசமான குணாதிசயங்களை நாம் களைந்துப்போட்டு தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் போதுமென்கிற மனநிலையையும் பெற்றுக் கொண்டால் ஏற்ற காலத்தில் தேவன் நம்மை உயர்த்துவார். ✝

### நாமே பொறுப்பு

**நாம் என்ன செய்கிறோமோ அதற்கு நாமே பொறுப்பாயிருப்பதால், இடறலுண்டாக்கு கிறவனுக்கு ஐயோ! என்று தேவன் சொல்லுகிறார். மற்றவர்களுக்கு நாம் இடறலாயிராதபடிக்கு நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.**

தேவன்

# தேவதூதர்கள்

## Angels

Betty Burton Choate



**தே**வ தூதர்கள் என்னும் வார்த்தையை நாம் பல்வேறுப்பட்ட தருணங்களில் பயன்படுத்துவோம். ஒருவர் மற்றொருவரைப் பார்த்து **தேவ தூதர்** என்று அழைத்தால் அப்படி அழைக்கப்பட்ட நபர், யாரும் செய்ய முடியாத அற்புதமான காரியத்தைச் செய்திருக்கிறார் என்று பொருள்.

வேதாகம அடிப்படையில் பார்த்தால் **தேவ தூதர்** என்பது உண்டாக்கப்பட்ட ஆவியினாலான ஜீவராசியைக் குறிக்கிறது. நாம் வேதாகமத்தில் தேவ தூதர்களைப் பற்றிப் பார்க்கும்போது தேவனுடைய சிங்காசனத்தைச், சுற்றி இருக்கிற பரலோக சேனைகளாக அவர்கள் விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி சாத்தானைப் பின்பற்றி விழுந்துபோன தூதர்களைப் பற்றியும் பார்க்கிறோம்.

மேலும், நாம் வேதாகமத்தில் பல இடங்களில் **கர்த்தருடைய தூதனானவர்** என்று பார்க்கிறோம். நாம் அஜாக்கிரதையாக இவ்வசனப்பகுதியைப் படித்தால் இது ஆவியாலான ஜீவராசியைக் குறிப்பது போல் தெரியும். ஆனால், இவ்வசனப்பகுதியின்படி கர்த்தருடைய தூதனானவர் என்பது தேவதுவத்தில் ஒருவரைத்தான் குறிக்கிறது. அதுவும் குறிப்பாக பழைய ஏற்பாட்டின் நாட்களில் தூதுவராக தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக செயல்பட்ட ஒருவரைத்தான் குறிக்கிறது. ஆதாரங்களை வைத்து நாம் பார்க்கும்போது, இந்த நபர்தான் இறுதியாக தேவனுடைய குமாரனாகவும், மனுஷ குமாரனாகவும் பிறந்த வார்த்தை என்று நமக்குத் தெரியவருகிறது. இக்கருத்தைக் குறித்து நாம் மேலும் அறிந்து கொள்ள வேண்டுமென்றால் கீழ்க்காணும் வசனப் பகுதிகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். **யோவான் 1:2-5, கொலோ 1:16;**

**யாத்திராகமம் 3; யோவான் 8: 58, 59 யாத்திராகமம் 14:19,23:20: 33:2-5: யோசுவா 5:13,14: Iகொரிந்தியர் 10:1-4** நிச்சயமாகவே நம்மைச்சுற்றிலும் நமக்கு எல்லாவிதத்திலும் ஆதரவாயிருக்கிற நல்ல மக்கள் இருப்பதை நாம் அதிகமாக விரும்புவோம். இவர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். ஏனென்றால், இவர்களில் பெரும்பாலானோர் நம் ஆவிக்குரிய குடும்பமாகிய சபையில் இருக்கிறார்கள். ஆனால், நாம் ஆழ்ந்து சிந்தித்துப் படிக்கப்போகிற பாடம் உண்டாக்கப்பட்ட அல்லது சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளான தேவ தூதர்களைப் பற்றித்தான். தேவ தூதர் என்னும் வார்த்தையிலே தூதுவர் என்றும் பொருள் அடங்கியிருக்கிறது. இந்த தூதர்கள் பணிவிடை ஆட்களாக வேலை செய்யும்படி தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். இந்தத் தேவதூதர்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். 1] கீழ்ப்படிந்தவர்கள், 2] கீழ்ப்படியாதவர்கள், இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளின்படி, தேவனுக்குக் கீழ்ப்படியாத மனிதர்களுக்கும், கீழ்ப்படியாத தூதர்களுக்கு என்ன நடந்ததோ அது தான் நடக்கும். அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: **சபிக்கப் பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயுத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்பார் [மத்தேயு 25:40-45].** ஆனால், கீழ்ப்படிகிற தேவ தூதர்களின் நிலை என்ன? அவர்களுடைய பணி என்ன? அவர்கள் நித்தியத்தை தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிலும், அவரைத் துதித்துக் கொண்டு கழிக்கிறார்களா? அல்லது வேறு ஏதாவது வேலை செய்ய அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்களா? பொதுவாக தேவ தூதர்கள் என்று பார்க்கும்போது, பலருடைய மனதில் அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜீவராசிகள் என்று தான் ஓர் எண்ணம் ஏற்படும். மேலும், அற்புத அடையாளங்களின் காலம் முடிந்துவிட்டது என்று வேதாகமத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளுகிறபடியால் [**Iகொரிந்தியர் 12:30, 31; 13:8-13**] தேவ தூதர்கள் மனிதர்கள் மத்தியில் எதையும் செய்வதில்லை என்று சிலர் சொல்வார்கள். இருந்தபோதிலும், வேத வாக்கியங்கள் தேவ தூதர்களைப் பற்றி வித்தியாசமான கருத்துக் களைத் தெரிவிக்கிறது. இன்று நம் மத்தியில் தேவதூதர்கள் இருக்கிறார்களா? அவர்கள் மனிதனுடைய காரியங்களோடு இடைபடுகிறார்களா? இப்போது தேவ தூதர்களின் தொடர் வேலையைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது? என்று பார்ப்போம்.

**அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத் தொட்டு, என்னைத் திடப்படுத்தி, பிரியமான புருஷனே பயப்படாதே உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடன்கொள், திடன்கொள் என்றான்; இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடன்கொண்டு அவனை நோக்கி: என் ஆண்டவன் பேசுவாராக; என்னை திடப்படுத்தினீரே என்றேன்.**

**அப்பொழுது அவன் : நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் பண்ணத் திரும்பிப் போகிறேன்; நான் போனபின்பு, கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான் – தானியேல் 10:18-20**

இவ்வசனப்பகுதியில் தேவ தூதனின் தோற்றம் மற்றும் அந்த தூதர் தானியேலோடு பேசிய விதம் இவைகளை வைத்துப் பார்க்கும் போது அற்புத அடையாளங்களின் காலத்தின் நடந்தேறிய சம்பவம் போல் தோன்றும். ஆனால் இந்த யுத்தம் அற்புத அடையாளங்களின் பாணியில் நடந்ததாக எந்த ஒரு வரலாற்றுச் சுவடுகளும் நமக்குத் தெரிவிக்கவில்லை. எனவே, மனித யுத்தத்தில் தேவ தூதர்களின் பங்கு இருப்பதை இங்கு நம்மால் காண முடியும். இருந்தபோதிலும் இந்த வசனப்பகுதியாக இருந்தாலும் சரி, வேறு வசனப்பகுதியாக இருந்தாலும் சரி அதாவது *II*இராஜாக்கள் 19:35,36 உட்பட்ட சில வசனங்கள் அதிகாரத்திற்கான மனிதப் போராட்டங்களில் தேவ தூதர்கள் நேரடியாகப் பங்கேற்க முடியும் என்று காட்டுகின்றன.

**அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாத படியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுப்புழுத்து இறந்தான்** – அப்போஸ்தலர் 12:23

ஏரோது ராஜாவின் முடிவு அற்புத விதமாக நடந்ததாக வரலாறு எதையும் பதிவு செய்யவில்லை; இவன் ஒரு பயங்கரமான அல்லது கோரமான முறையில் மரித்ததாகத் தான் பார்க்கப்படுகிறது. ஆனால், வேத வாக்கியங்கள் அவனுடைய மரணத்திற்கான காரணம் அவனுடைய துன்மார்க்கமான வாழ்க்கைதான் என்று நமக்குத் தெரிவிக்கின்றது. அதன் விளைவாக தேவ தூதனுடைய கையாலே நேரடியாக தேவன் அவனைத் தண்டித்தார். **பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி; நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான். [ அப்போஸ்தலர் 8:26]** இங்கே தேவ தூதன் பிலிப்புவிடம் தோன்றின. விதமும், பிலிப்புவிடம் பேசிய விதத்தையும் பார்க்கும்போது, பலரால் இது அற்புத அடையாளங்களின் காலத்தில் நடந்த சம்பவமாகத்தான் கருதப்படும். இன்றும் கூட தேவன் சத்தியத்தைத் தேடுகிறவர் களிடத்தில் ஆச்சரியப்படும் விதத்தில் இரட்சிப்பின் தூதுவர்களைக் கொண்டு செல்கிறார். வேத வாக்கியங்களில் நாம் பார்க்கும் போது தேவதூதர்கள் சாதாரணமாக மனித உருவத்தில் தோன்றி மனிதர் களுக்கு அடையாளங் கொள்ளாத ரீதியில் பேசியிருக்கிறார்கள். **பின்பு அந்தத் தரித்திரன் மரித்து தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் – லூக்கா 16:22** இவ்வசனம் நமக்கு நித்திய உலகத்தை நமக்கு காட்டுகிறது. மேலும், இவ்வசனம் ஆத்துமா செத்த

சரீரத்திலிருந்து பிரிந்து தேவ தூதர்களால் கொண்டு செல்லப்படுகிறது என்பதையும் வலியுறுத்துகிறது.

சில வேளைகளில், சிலர் பாதுகாப்பளிக்கும் தேவ தூதர் அல்லது காவல் தேவதூதர்களைப் பற்றி பேசுகிறார்கள். [மத்தேயு 18:10] - ஐ நாம் வாசிக்கும் போது இவ்வசனத்தை அடிப்படையாகக் வைத்து தான் அவர்கள் இப்படி பேசுகிறார்கள். நம் ஒவ்வொருவருக்கும் காவல் தூதர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பதை பற்றி நிச்சயம் இல்லை. ஆனால், இவ்வசனத்தின்படி தேவதூதர்களுக்கு மனிதர்களைப் பராமரிக்கும் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். அதிலும் விசேஷமாக சிறு பிள்ளைகளைத் தூதர்கள் பராமரித்திருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

**அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய் தேவனுடைய கோப கலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன். - வெளி16:1** வெளிப்படுத்தின விசேஷத்தில் எவைகளை உருவக நடையில் எடுத்துக்கொள்ள வேண்டும். எவைகளை சொல் அர்த்த ரீதியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது விவாதத்திற்குரியது. ஆனால், இப்புத்தகம் முழுவதும் பூமியில் மனித விவகாரங்களில் தேவ தூதர்களின் ஈடுபாட்டாலும், பங்களிப்பாலும் நிறைந்திருக்கிறது. இவ்வசனம் தேவனுக்கு விரோதமாக, துணிகரமாகச் செயல்படும் தேசங்களை அழிக்க தேவன் தூதர்களை அனுப்புவார் என்று சொல்கிறது. **இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? - எபிரெயர் 1:14 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் அதனாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு** - எபிரெயர் 13:2. என்ன ஒரு தெளிவான, நிச்சயமான, செய்தி இவ்வசனப்பகுதியில் அடங்கியிருக்கிறது என்று பாருங்கள். அற்புத அடையாளங்கள் நடைபெறாத இந்த நாட்களிலும் கூட தேவ தூதர்கள் தேவனுடைய வேலைக்காரர்களாக இருந்து தேவனுடைய பிள்ளைகளுக்காக வேலை செய்கிறார்கள். **எபிரெயர் 13:2** ல் நாம் பார்க்கும் போது, நம்முடைய அன்றாட வாழ்வில் தேவ துதர்கள் மனிதர்களைப் போல் தோற்றமளிக்க முடியும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. உண்மையாகவே, இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணினபடியே அவர் நம்மை இந்த அந்நிய உலகிலே திக் கற்றவர்களாக விடவில்லை [யோவான் 14:18]. நம் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாமே அவரிடம் உண்டு. அவர் நம்முடைய அன்றாட வாழ்வில் இடைப்பட்டு வாழ்க்கையின் தேவையான எந்தத் தருணத்திலும், தம்மை உண்மையாகத் தேடுகிறவர்களுக்கு எல்லா விதத்திலும் உதவி செய்கிறார். ஆதலால் பயப்படாதிருங்கள்: அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர் களாயிருக்கிறீர்கள்! ✝

# ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை
# Never Man So Speake

*Wayne Jackson*

**கூ**டாரப் பண்டிகையின் கடைசிநாளிலே இயேசு கிறிஸ்து நின்று, சத்தமிட்டு **ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்** என்றார் [யோவான் 7:37] என்ன ஓர் அழைப்பு இது! இது ஜனங்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இந்த அழைப்பின் மூலம் ஜனங்களில் சிலர் இயேசு கிறிஸ்துவை தீர்க்கதரிசி என்று உறுதி செய்து கொண்டார்கள். **( உபாகமம் 18:15-19)** அக்கூட்டத்தில் வேறு சிலர் அவர் கிறிஸ்து என்று சொன்னார்கள், சிலர் இரண்டையும் மறுத்தார்கள். எனவே, அக் கூட்டத்தில் கிறிஸ்துவைக் குறித்து பிரிவினை உண்டானது. பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் நம் ஆண்டவரை கைது செய்ய சேவகர்களை அனுப்பினார்கள், ஆனால் அவர்கள் வெறுங்கையோடு திரும்பி வந்தார்கள். , நம் ஆண்டவரைப் பிடிக்க ஆள் அனுப்பியவர்கள் சேவகர்களிடத்தில் நீங்கள் ஏன் அவரைக் கொண்ட வரவில்லை என்ற கேட்டதற்கு சேவகர் பிரதியுத்ரமாக **அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை** என்றார்கள் [யோவான்7:46]. என்பதில் நாம் அலசி ஆராய வேண்டிய ஒரு வாக்கியமாயிருக்கிறது. அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை. ஏனென்றால், அவர் மனிதனை விட மேலானவர், மாம்சத்தில் வந்த தேவனாயிருக்கிறார் [யோவான் 1:1:14]

ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டது ஓர் ஆரோக்கியமான காரியமாகும். இச்சேவகர்கள் நேர்மையானவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் பேச்சை எப்படி உடைத்தார்களோ அதையே உண்மையாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆம், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னும், பின்னும் ஒருவரும் அவரைப் போல் பேசினதில்லை. Demosthenes என்பவர் பழங்காலத்தில் ஒரு சிறந்த சொற்பொழிவாளாராக கருதப்பட்டார். இருந்த போதிலும் அவருடைய புகழ் பெற்ற பேச்சுகளிலிருந்து ஒரு வரியைக் கூட இன்று யாராலும் மேற்கோள் காட்ட முடியுமா? Cicero என்பவரும் கூட ஒரு சிறந்த பழங்காலத்து சொற்பொழிவாளாராகத் திகழ்ந்தார்.ஆனால், அவருடைய சொற்பொழிவுகளெல்லாம் பழங்காலத்து மண்ணில் புதைந்து போய்விட்டன. அதே போல் Daniel webster என்பவர் மேற்கத்திய நாடுகளில் மிகவும் புகழ்பெற்ற

ஒரு பேச்சாளர். ஆனாலும் கூட, அவருடைய வார்த்தைகளை ஒரு சிலரால் தான் மேற்கோள் காட்ட முடியும். இத்தனைக்கும் அவர் மறைந்து ஒரு நூற்றாண்டு தான் ஆகிறது. ஆனால், இயேசு கிறிஸ்துவின் பிரசங்கங்கள் ராஜாக்களின் நாவிலும், சாதாரண மக்களின் நாவிலும் இன்றளவும் தவழ்கிறது. அவருடைய வார்த்தைகள் பலருடைய வாழ்க்கையை மாற்றிருக்கிறது. உண்மையாகவே, நம் இரட்சகரைப் போல் ஒருக்காலும் ஒருவரும் பேசினதில்லை!

இரண்டாவது, இச்சேவகர்கள் **அந்த மனுஷன் பேசகிறது போல ஒருவனும் ஒக்காலும் பேசியதில்லை** என்று செய்த அறிக்கையில் ஓர் உட்பொருள் அடங்கியிருக்கிறது. அதாவது, அவர்கள் இயேசு கிறிஸ்து வெறுமனே ஒரு மனிதனாக பேசவில்லை, அவருடைய செய்தி ஓர் உயர்வான ஆதாரத்தை சுட்டிக்காட்டுகிறது என்பது அவர்களுடைய வார்த்தைகளின் வெளிப்பாடாய் இருக்கிறது. நம் கர்த்தர் தாமே பூமியிலிருந்துண்டானவன். பூமியின் தன்மையுள்ள வனாயிருந்து பூமிக்கடுத்தவைகளை பேசுகிறான். பரலோகத்திலிருந்த வருகிறவர்கள் எல்லாரிலும் மேலானவர்: தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார். [யோவான் 3:31,34] யூதர்கள் நம் ஆண்டவருடைய போதனைகளைக் கேட்டு இவர் பல்கலைகழகத்தில் பயிலாதவரல்ல, எப்படி இப்படி பேசுகிறார்? என்ற ஆச்சரியப்பட்ட போது, நம் ஆண்டவர் வெளிப் படை யாகவே **என் உபதேசம் என்னுடைய தாயிராமல் என்னை அனுப்பி யவருடையதாயிருக்கிறது** என்று பதிலளித்தார் [யோவான் 7:15,16].

மூன்றாவது, அந்த போர்கேசவகர் நம் ஆண்டவருடைய தாக்கத்தின் வல்லமை அவருடைய பேச்சில், அதாவது அவருடைய வார்த்தைகளில் இருந்ததை ஒத்துக் கொண்டார்கள். இது பழங்கால மற்றும் நவீன தத்துவஞானிகளிலிருந்து எவ்வளவு வித்தியாசப் படுகிறது என்பதை கவனியுங்கள். இந்த தத்துவ ஞானங்களெல்லாம் சத்தியம் என்பது ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது. அதை ஒவ்வொருவரும் கண்டுபிடிக்க வேண்டும் என்று போதிக்கிறார். அதை வைத்துப் பார்த்தால், உங்களுக்கு சத்தியமாகத் தோன்றுகிற ஒன்று எனக்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகத் தோன்றலாம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய மனதை வார்த்தைகள் மூலமாக வெளிப்படுத்த இவ்வுலகத்திற்கு வந்தார். யோவான் சுவிசேஷப் புத்தகத்தின் ஆரம்பத்தில் இயேசு கிறிஸ்து தெய்வீக வார்த்தையாக அழைக்கப்படுகிறார் (LOGOS) என்னும் கிரேக்க பதம் கிறிஸ்து தேவன் இவ்வுலகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறானோ அதன் வெளிப்பாடாயாகவும், பிரதிநிதித்துவமாகவும் இருக்கிறார் என்று சொல்கிறது. பூர்வகாலங்களில் நம் தேவன் நம் பிதாகளிடத்தில் பலவிதங்களில் திருவுளம் பற்றியிருக்கிறார் [**சொப்பனங்கள் தரிசனங்கள்**]

ஆனால், இந்நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம் பற்றுகிறார் [எபிரெயர் 1:12] நம் கர்த்தர் தாமே [ யோவான் 6:63] **நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது** என்று சொல்லியிருக்கிறார். அவர் பேசியிருக்கிற வார்த்தைகளை அறிந்து கொள்வது எவ்வளவு அவசியமாயிருக்கிறது.

நான்காவது, அப்போர்ச்சேவகர்கள் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்னும் வாக்கியத்தில் மற்றுமொரு முக்கியத்துவம் மறைந்திருக்கிறது. இவ்வாக்கியம் கிறிஸ்துவின் உபதேசத்தின் தனித் தன்மையை வேறுபடுத்திக் காட்டுகிறது. கீழ்க்காணும் காரியங்களைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். **இப்பூமியில் பிறப்பதற்கு முன்பாகவே இருந்த ஒரே ஒருவர் இயேசு கிறிஸ்து மட்டும் தான் [யோவான் 1:14, 8:58]** அடுத்ததாக, அவர் பரத்திலிருந்து வந்ததாகச் சொன்னவார்த்தைகள் உறுதிச் செய்கின்றன [யோவான் 3:31,32] ஆம், நம் ஆண்டவர் போல், ஒருவனும் பேசினதில்லை! இயேசு கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த வேதபாரகர்கள் அவருடைய வார்த்தைகளில் எந்தத் தவறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் தங்கள் வார்த்தைகளுக்கு வலு சேர்க்க ரபீக்களின் பொன் மொழிகளை மேற்கோள் காட்டினார்கள். ஆனால், நம் ஆண்டவர் ரபீக்களின் வார்த்தைகள் எதையும் தமக்கு ஆதாரமாகப் பயன்படுத்தவே இல்லை. உண்மையில் சொல்லப்போனால், நம் கர்த்தர் ரபீக்களின் சட்டபூர்வமான விளக்கங்கள் உபதேசத்தைவிட மேலானது என் பதையும் நிலைநாட்டினார் [**மத்தேயு 5:21,22,27,28,31,32, 33, 38, 39, 43,43**] நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தை முடித்த உடனே, அவர் வேதபாரகரைப் போல் போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்களுக்கு போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை [மத்தேயு 7:28, 29] நம் ஆண்டவர் தம்முடைய தெய்வீக ஞானத்தால் மென்மை, கடினம். ஆகிய இரண்டையும் ஒரு சேர பிரயோகப் படுத்தினார்: நேர்மையான பாவிகளிடத்தில் அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதை கவனியுங்கள் [மத்தேயு 23:13] இன்னும் சொல்லப்போனால் எந்த ஒரு போதகரும் இந்த அளவு தங்களுடைய போதனையில் கிறிஸ்துவைப் போல் நியாயமாக நடந்து கொள்ள வில்லை. நம் கர்த்தர் தம்முடைய பிரசங்கங்களில் ஆழமான ஆவிக்குரிய உண்மைகளை எளிய மொழிநடையில் எடுத்து இயம்பிருக்கிறார். உதாரணமாக, அவருடைய உவமைகள் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆம், அந்த சேவகர் **அந்த மனுஷர் பேசுகிறது போல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை** என்று மிகச் சரியாகத் தான் சொல்லியிருக்கிறார். ✝

தேவன்

# கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?
# Is Anything Too Hard For The Lord?

Dan wheeler

**சா**ராள் தான் பிள்ளைய்யைப் பெறப்போகிற முன்னறிவிப்பை விசுவாசிக்கத் தயங்கினபோது கர்த்தரால் கடிந்து கொள்ளப்பட்டாள். **கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவ காலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்** (ஆதியாகமம் 18:14) கர்த்தருடைய வார்த்தை அப்படியே நிறைவேறியது. ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் ஈசாக்கு பிறந்தான். இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபோது ஆபிரகாம் பிள்ளை இல்லாமல் இருந்தார். இருந்தபோதிலும், அவர் சகல ஜாதிகளுக்கும் தகப்பனாக இருந்தார். (ஆதியாகமம் 12:2;15:3-4)

இன்னும் பலர் ''கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?'' என்ற கேள்விக்கு விடையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

- ★ நோவா தன்னுடைய குடும்பம் பேழைக்குள் இரட்சிக்கப்பட்ட பிறகு (ஆதி6-8)
- ★ யோசுவா எரிகோவின் மதில்கள் விழுந்த பிறகு (யோசுவா 6)
- ★ குஷ்டரோகியாகிய நாகமான் யோர்தானில் ஏழுதரம் மூழ்கி சுகமான பிறகு (2ராஜா.5)
- ★ ஜனங்கள் இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் நன்றாய் செய்ததைப் பார்த்த பிறகு (மாற்கு 7:37)
- ★ மார்த்தாளும், மரியாளும் தங்கள் சகோதரனாகிய லாசரு அந்த நாற்றமெடுத்த கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்த பிறகு (யோவான் 11)
- ★ உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சகோதரர் கண்ட பிறகு (Iகொரிந்தியர் 15:5-8)
- ★ திரளான கூட்டம் சுவிசேஷத்தை அவரவர் பாஷையிலே கேட்டபிறகு (அப்போஸ்தலர் 2)
- ★ அப்போஸ்தலனாகிய யோவான் பரிசுத்த நகரத்தின் வெளிப்பாட்டைக்கண்ட பிறகு (வெளிப்படுத்தின விசேஷம் 21)

தேவனால் நரகத்திற்க்கு நியமிக்கப்பட்ட பாவிகளைக்கூட (வேசிமார்க்கத்தார் விக்கிரக ஆராதனைக்காரர், விபச்சாரக்காரர், சுயபுணர்ச்சிக்காரர், ஆண்புணர்ச்சிக்காரர், திருடர், பொருளாசைக்காரர், வெறியர், உதாசினர், கொள்ளைக்காரர்) போன்றோர்களைக்கூட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிரியைகளினாலும் நம் தேவனுடைய ஆவியினாலும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கும்படிச் செய்வார் (கொரிந்தியர் 6:9-10).

நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்மை தேவனுடைய ராஜியத்தை சுதந்தரிக்கும்படி செய்கிறார்.

தேவன் வல்லமையுள்ளவராக இருந்தால், நாம் விரும்பிய தெல்லாம் ஏன் நடப்பதில்லை? நம் பிரச்சனைகள் எல்லாமே ஏன் தீர்வதில்லை? ஏசாயா தீர்க்கதரிசி மெத்தனப்போக்கில் இருந்த மக்களைப் பார்த்து **இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை, கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை, உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவிக்கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது [ஏசாயா59-1,2]என்றார்.** நம் தேவன் நம் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுபவரல்ல. இருந்த போதிலும், நாம் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை தந்திருக்கிறார். நீண்டகால அடிப்படையில் நாம் பார்க்கும்போது **அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்** (ரோமர் 8:28) இதினிமித்தம் தேவன் மனுக்குலத்திற்குத் தேவையான அனைத்தையும், செவ்வனே செய்திருக்கிற படியால், அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து உண்மையாய் அவருக்குள் வாழத் தீர்மானிப்போம்! ✝

---

### அதிசயமான தேவன்

**சில வேளைகளில் கர்த்தர் பெருங்காற்றை அமைதிப்படுத்துகிறார்: சில வேளைகளில் பெருங்காற்றை கோரதாண்டவமாடச் செய்து தம்முடைய பிள்ளைகளை அமைதிப்படுத்துகிறார்.**

# வேதாகமப் பதிவுகளை விசுவாசிப்பதற்கான காரணங்கள்
# Reasons For Believing The Bible Records

*Ardron Hinton*

இயேசு கிறிஸ்து சம்பந்தமாக புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிற சம்பவங்களை விசுவாசிக்கிறவர்களைப் பார்த்து, சிலர் போதகனென்றும், ஞானசூன்யங்களென்றும் நகைப்பது வாடிக்கையாகிவிட்டது. அவருடைய பிறப்பு, மரணம், உயிர்தெழுதல் சம்மந்தமாக வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற சம்பவங்களைத் தங்களை ஞானிகளென்று எண்ணுபவர்கள் மறுப்பது மட்டுமல்லாமல், அவர்கள் நவீன விஞ்ஞானத்தோடு சிறிதளவும் பொருத்தவில்லை என்றும் புலம்புகிறார்கள். மேலும், அவர்கள் சொல்லும்போது வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற சம்பவங்கள் மாதிரி நடப்பதற்கெல்லாம் வாய்ப்பில்லை. எனவே, இத்தகைய காரியங்களை எவ்வித யோசனையுமின்றி நாம் நிராகரிக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். புதிய ஏற்பாட்டுத் தகவல்களை குறித்து அவர்களுடைய எதிர்மறையான எண்ணங்கள் நியாய மானதா? வேதாகம சம்பவங்களெல்லாம் நடைபெறவே இல்லையா? அல்லது அவைகள் கண்டுகொள்ளப் படவில்லையா? அது சம் மந்தமான சில உண்மைகளைப் பார்ப்போம்.

புதிய ஏற்பாடு, சபையை ஆரம்பத்திலிருந்தே விஸ்தாரமாக விவரித்திருக்கிறது. சபை பரலோகத்திலிருந்து கிறிஸ்துவால் ஆளுகை செய்யப்படும் ஓர் அமைப்பாகும். சபைக்கு, பூமிக்குரிய தலைமையகமோ, அரசியல் கூட்டோ, அல்லது ராணுவ பலமோ கிடையாது. சபை ஆவிக்குரியதன்மை கொண்டதாயிருக்கிறபடியால் உலகெங்கும் பரந்து விரிந்து காணப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 1:8 **உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிற படியினாலே முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசு கிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்** என்றார். ஆனால் இஸ்லாம் மதத்தைப் பொறுத்தவரை அது ராணுவ பலத்தினாலும், அரசியல் அடக்கு முறையினாலும் திணிக்கப்பட்ட ஒரு மதமாகும். ஆனால், கிறிஸ்தவம் அதன் வளர்ச்சியை செய்தியின் வல்லமையினாலும், செல்வாக்கினாலும் அடைந்திருக்கிறது. கிறிஸ்துவத்தின் செய்தி தனித்துவம் வாய்ந்தது. இது ஜனங்களை உயர்வான, அக்கறையுள்ளவர்களாக மாற்றுகிறது. இதன் அடிப்படை

நம்பிக்கை, தேசங்களில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் தனிப்பட்ட சுதந்திரத்தையும் கொடுக்கிறது. இதன் போதனைகள் சமுதாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்துகிறது. வேதாகமத் தகவல்கள் நம்பத் தகாதவைகளாக இருந்தால் அது கொடுத்திருக்கின்ற அற்புதக் கனியை நீங்கள் எப்படி புசிப்பீர்கள்? 2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை பற்றி அநேக காரியங்களைச் சொல்லியிருக்கிறார். அவர் தெய்வீகத்தன்மை உடையவராகவும், தேவத்துவத்தின் சகல அதிகாரத்தையும் உடையவராகவும் தம்மைப் பற்றிச் சொல்லியிருக் கிறார். இங்கே நடுநிலை என்கிற பேச்சுக்கே இடமில்லை. அவர் இருக்கிறார் அல்லது அவர் இல்லை. இரண்டில் ஒன்று தான் உண்மை.

- அவர் தம்மைப்பற்றி சொல்லிக்கொள்கிற காரியங்களை வைத்துப் பார்த்தால் அவர் பைத்தியகாரராக இருக்க வேண்டும்.

- அவர் ஒரு பொய்யராகவும், ஓர் ஏமாற்றுக்காரராகவும் இருக்க வேண்டும். ஒரு பைத்தியக்காரரால் எப்படி சரியான வாழ்க்கைக்கு ஒழுக்க நெறிகளை வகுக்க முடியும்? ஓர் நேர்மையற்ற மனிதரால் எப்படி இப்படிப்பட்ட நெறிகளை வகுக்க முடியும்? மறுமுனையில் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றி என்னவாகச் சொல்கிறாரோ அப்படியிருந்தால், ஒரு மாபெரும் போதகராக அவருடைய பணியில் எந்த ஆச்சரியமில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் உண்மைத் தன்மையின் முக்கிய ஆதாரமாக உயிர்த்தெழுதலைத் தான் காட்டுகிறார். அவர் சில சாட்சிகளைப் பட்டியலிடுகிறார். **நான் அடைந்ததும் உங்களுக்கும் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு, அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார். அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள். சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் என்றார் [I கொரிந்தியர் 15:3-8].**

இயேசு கிறிஸ்துவை அறிந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் யூதத் தலைவர்களுடைய வற்புறுத்துலினாலே, அவர் கொல்லப் பட்டதையும், அவர் மறுபடியும் உயிர்த்தெழுந்ததையும் உயிர்த் தெழுந்த பிறகு தங்களோடு இருந்ததையும் அறிந்திருந்தார்கள்.

முக்கியமான இரண்டு யூதர்கள் தான் கிறிஸ்துவை அடக்கம் செய்தார்கள். ரோம போர்ச்சேவர்கள்தான் அவருடைய சரீரத்தைப் பாது காத்தார்கள். இயேசு கிறிஸ்து அநேக சாட்சிகளால் உயிரோடிருப்ப தாகக் காணப்பட்டார். முதலில் யூதர்களும் பின்பு ரோமர்களும் வன்மு றையால் இந்தப் புதிய மார்க்கத்தை ஒடுக்கப்பார்த்தார்கள். இருந்தபோதி லும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அவர்களால் பொய்யென்று நிரூ பிக்க முடியவில்லை.

இயேசு கிறிஸ்து மற்றும் அவரோடிருந்தவர்களால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களை பொருளாசையும், உலகத்தன்மையும் கொண்ட நவீன அறிவு ஜீவிகள் நிராகரிக்கிறார்கள். அப்போஸ்தனாகிய பவுல் பெஸ்துவிடம் **இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல** என்று சொன்னார் [**அப்போஸ்தலர் 26:26**] கிறிஸ்துவின் சத்துருக்கள் கூட அவருடைய அற்புதங்களை மறுக்கவில்லை. அதன் முக்கியத் துவத்திற்குத் தங்கள் மனதை மூடிக்கொண்டார்கள் அவ்வளவுதான். கிறிஸ்து செய்த அற்புத அடையாளங்களில் எந்த தந்திர மந்திரமும் இல்லை. எல்லாமே வெளிப்படையாகவே செய்யப்பட்டன. தேவனுடைய வார்த்தை முதலாவது அறிவிக்கப்பட்டதைக் கேட்ட மக்கள் பின்பு அவ்வார்த்தை அற்புத அடையாளங்களால் உறுதி செய்யப்பட்டதையும் கண்டார்கள் [ **எபிரெயர். 2:1-4**]. இந்த அற்புதங்கள் இயற்கை விதிகளை ஒழிக்கவில்லை.


கிறிஸ்துவ மார்க்கத்தின் ஆரம்ப கால வரலாற்றைப் பற்றிய எழுத்துக்கள் நமக்குக் கிடைத்திருப்பது மிகப்பெரிய வரமாகும். எந்த ஒரு மதமும் அதன் ஆரம்பத்தைப் பற்றியும் அதன் செய்தியின் நம்பகத் தன்மை பற்றியும் இத்தனை சாட்சியங்களைக் கொண்டுவர முடியாது. அவிசுவாசிகள் இந்த உண்மையை நிராகரிக்கலாம், ஆனால், அவர்களால் உண்மைத் தன்மையை மறுக்க முடியாது. ✝

## உக்கிராணத்துவ விதிகள்

- ✡ **தேவனுக்கு எல்லாவற்றிலும் முதற்பலனைக் கொடுங்கள்** (நீதிமொழிகள் 3:9,10)
- ✡ **நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள்** (கலாத்தியர் 6:7)
- ✡ **கொடுக்கப்படும் ஒன்றைவிட அதைக்கொடுப்பவரின் மனநிலை முக்கியமானது** (I கொரி. 9:7)
- ✡ **முதலில் நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்** (II கொரி. 8:5)
- ✡ **இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்** (மத்தேயு 10:8)

# தேவன் ஒழுங்கின்மையிலிருந்தும், வெறுமையிலிருந்தும் சிருஷ்டித்தார்

Dave Everson




பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். [ஆதயாகமம் 1:2]

ஆதியகம புத்தகத்தின் முதல் அதிகாரத்தின் இரண்டாவது வசனத்தில் நமக்கு சிருஷ்டிப்பின் ஆரம்பகால தகவல்களைத் தந்திருக்கிறார். சிருஷ்டிக்கப்பட்ட பூமி அங்கே விவரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே தேவன் பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது என்று தேவன் சொல்கிறார். இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய பதங்கள் Tohuw மற்றும் Bohuw என்பவைகளாகும். அது மதிப்பில்லாத வெறுமையான ஒன்றைக் குறிக்கிறது. அது மட்டுமில்லாமல் குழப்பம், வீண், பாழ் போன்ற அர்த்தங்களையும் அது கொடுக்கும்.

இவ்வசனம் முக்கியமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. ஏனென்றால், உலகத்திலும், சபையிலும், கூட சிலர் தங்கள் எண்ணங்களுக்கு ஆதரவாக இவ்வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். விஞ்ஞான சமுதாயம் இப்பூமி மிகவும் பழமை வாய்ந்தது என்று சொல்கிறது. அவர்கள் சொல்லும்போது இப்பூமியிலுள்ள மரம் செடி, மிருகங்கள் போன்றவைகளின் படிமங்கள் எல்லாம் மக்கி

அவைகள் நிலக்கரியாக உருவாவதற்கு லட்சக்கணக்கான வருடங்கள் ஆகும். எனவே பூமி தோன்றி லட்ச்சக்கணக்கான வருடங்கள் ஆகிறது என்று சொல்கிறார்கள். பலர் வேதாகம விவரங்களை விசுவாசித்து தேவன்தான் இப்பூமியை சிருஷ்டித்தார் என்று ஒத்துக்கொண்டாலும் கூட, இன்று பிரபலமாயிருக்கும் விஞ்ஞான அபிப்பிராயங்களையும் ஒத்துக்கொள்வது வேதனை யானது, வேடிக்கையானது. ஆதியாகமம் 1:1–ல் இப்பூமியில் செடி கொடிகள், மிருகங்கள், போன்றவைகளை உள்ளடக்கிய ஒன்றாக, மனிதன் வசிக்கத்தக்க ஒன்றாகவே இருந்தது என்று சிலர் சொல் கிறார்கள். இத்தகைய கருத்துக்களை உடையவர்கள் ஒன்றாம் வசனத்திற்கும், இரண்டாம் வசனத்திற்குமிடையே இலட்சகணக்கான வருடங்கள் இடைவெளி இருந்தது என்று உளறுகிறார்கள். இந்த இடைவெளிக்காலத்தில் தான் எண்ணெய், எரிவாயு, மற்றும் நிலக்கரி போன்றவைகளெல்லாம் உண்டாயின என்றும், படிம உற்பத்தி மற்றும் டைனோசர்களின் ஆட்சியெல்லாம் இக்காலக் கட்டத்தில் தான் நடந்ததென்றும் சொல்கிறார்கள். இது இக்கொள்கையை உடைய வர்களின் யூகம்தான். இவர்கள் தேவனுடைய வார்த்தைகளை வளைத்து, உலகப்பிரகாரமான விஞ்ஞானிகளின் அபிப்பிராயங் களையும், வியாக்கியானங்களையும் உட்புகுத்த நினைக்கிறார்கள். பிரியமானவர்களே, நாம் ஆதியாகமம் புத்தகத்தை ஜாக்கிரதையாக வாசித்தால் ஒன்றாம் அதிகாரம் ஒன்றாம் வசனத்துக்கும், இரண்டாம் வசனத்திற்கும் இடையே நீண்ட காலம் அல்லது அறிவாளிகள் அலப்புவதுபோல் லட்சக்கணக்கான வருடங்கள் இடைவெளி ஆகியிருப்பதற்கு வாய்ப்பே இல்லை. முதல் வசன சம்பவத்தைத் தொடர்ந்து இரண்டாம் வசனத்தில் தேவன் ஒழுங்கற்ற வெறுமையான பூமியை ஒழுங்குபடுத்தும் கிரியையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் என்று தெளிவாக தேவ ஆவியினால் ஏவப்பட்ட ஆசிரியர் சொல்கிறார். இரண்டாம் வசனத்தில் **ஆழத்தின் மேல் இருள் இருந்தது** என்னும் சொற்றொடர் நமக்கு பூமியை பற்றிய அதிகப்படியான விளக்கத்தைக் கொடுக்கிறது.

ஆதியாகமம் ஒன்று மற்றும் இரண்டாம் வசனங்களில் காணப்படும் பூமியில், மிருகங்கள்,மற்றும் செடி, கொடிகள், இருப்பதற்கான வாய்ப்பேயில்லை. அதற்கேற்ற சூழ்நிலையும் அங்கே இல்லை. எனவே தான், தேவன் தொடர்ந்து நமது பயன்பாட்டிற்காக சீரமைத்தார். இப்பூமியானது இருளானதாகவும், ஒழுங்கற்ற அமைப்பை உடையதாகவும் வெறுமையாயும் இருந்தபடியால் தேவன் சிருஷ்டிப்பு வாரத்தின் முதல் நாளில் பல மாற்றங்களை செய்து பூமியை ஒழுங்குபடுத்தும், சீரமைக்கும் பணியில் ஈடுபட்டார். எனவே, ஆதி யாகமம் ஒன்றாம் அதிகாரம் ஒன்று மற்றும் இரண்டாம் வசனங்களில் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கும் வேதவாக்கி யங்களோடு வார்த்தை விளையாட்டில் ஈடுபட்டு லட்சக் கணக்கான கோடிக்கணக்காண ஆண்டுகளைக் காட்ட நாம் துணிய வேண்டாம். ✞

# கர்த்தாவே, உம்முடைய சத்தியத்தால் என்னை உடுத்துவியும்

# Lord, Clothe Me In Your Truth

Randall Caselman

சத்தியம் என்பது உண்மையான, நிச்சயமாக நம்பத்தகுந்த ஒன்றாக விவரிக்கப்படுகிறது. சத்தியம் அதன் உண்மைத் தன்மையினால் நம்பப்படுகிறது. வேதாகமத்தில் சத்தியம் தேவனுடைய பண்பாகப் பேசப்பட்டிருக்கிறது. ஏசாயா 65:16-ல் ஏசாயா தீர்க்கதரிசி நம் தேவனை இருமுறை சத்திய தேவன் என்றழைக்கிறார். அதினாலே, பூமியில் ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான். தீத்து1:3-ல் நம்முடைய நம்பிக்கையைக் குறித்துப் பேசும்போது பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம்பண்ணி அதைக்குறித்து நம் நம்பிக்கையைப் பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி என்று பேசப்பட்டிருக்கிறது. எனவே, தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற, ஏவப்பட்டிருக்கிற எல்லாமே சத்தியமாக இருக்கிறபடியால் அவைகள் உண்மை என நம்பத்தகுந்தவை களாகவும், செல்லத்தக்கவைகளாகவும் இருக்கின்றன.

### சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்

**சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று இயேசு கிறிஸ்து சொன்னார் [யோவான் 8:32]. அவருடைய சத்தியம் தேவ ஆவியினாலே ஏவப்பட்ட வசனங்களில் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவானும் **அந்த வார்த்தை மாம்சமாகி கிருபை யினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்** (யோவான் 1:14). யோவான்14:6ல் நம் **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்** என்று சொல்கிறார். நாம் சத்தியத்தை அறிந்திருக்கிறோமா? உயிரோட்டமுள்ளதாயும் எழுதிக் கொடுக்கப் பட்டதுமாயிருக்கிற சத்தியத்தை நாம் அறிந்திருக்கிறோமா?

### சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல் பரிசுத்தமாயிருக்கிறது

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உம்முடைய சத்தியத் தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் என்று ஜெபித்தார் ( யோவான் 17:17). நாம் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் போது நாம்

சுத்திகரிக்கப்படுகிறோம். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல்[எபேசியர்4-ல்] நமக்கு அதிகமாகச் சொல்கிறார். **அன்றியும் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன், நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் [எபேசியர் 4:25-27].** தேவனுடைய பிள்ளைகள் வாழ்க்கையிலோ அல்லது தேவனுடைய சபையிலோ பாவத்திற்கு இடமேயில்லை. ஏனென்றால், சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியும் போது பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

**சத்தியம் நம்மை விடுதலையாக்கி நம்மை பரிசுத்தப்படுத்துகிறது:**

பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன? அது பாவத்திலிருந்தும், பாவத்தின் பயங்கரமான நித்திய விளைவுகளிலிருந்தும் விடுவிக்கப் படுவதாகும். சத்தியம் நம்மை விடுதலையாக்கி, நம்மைப் பரிசுத்தமாகப் பிரித்து வைக்கிறது. நாம் ஞானஸ்நானம் பெறும்போது புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு கிறிஸ்துவுடனே கூட ஞானஸ்நானத்திலேயே அடக்கம் பண்ணப்பட்டோம் **[ரோமர் 6:4].** பவுல் தொடர்ந்து சொல்லும் போது நாம் நீதியின் ஆயுதங்களாக மாற்றப் பட்டிருக்கிறோம் என்று சொல்கிறார் **[ரோமர் 6:13].** 1பேதுரு 2:9-ல் பேதுரு சொல்லும் போது நாம் பரிசுத்த ஜாதியென்றும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமென்றும், அவருக்குச் சொந்த ஜனமென்றும் சொல்கிறார். ஆவியானவர் வழி நடத்த, நாம் அனுமதித்து அவரோடு சென்றால் நாம் ஆவியின் கனிகளைக் கொடுப்போம் **ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தார்கள், நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்ககடவோம் - கலாத்தியர்5:22-26** உண்மையாகவே அவருடைய கனி நம்மை இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கிறது. அப்படி தானே?

**சத்தியம் நம்மில் அக்கினியாய் எரிய வேண்டும்:**

ஆதலால் நான் அவரை பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்: ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது;

அதைச்சகித்து இளைத்துப் போனேன், எனக்குப் பொறுக்க கூடாமற்போயிற்று– எரேமியா20:9

தேவனுடைய சத்தியம் நம்மில் இருக்கிறதென்பதை நாம் அறிந்து கொண்டால், அதை வெளிப்படுத்தாமல் நம்மால் அடக்கிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால், ஏரேமியாவைப் போல் மற்றவர்களிடத்தில் நாம் தேவனுடைய வார்த்தைகளை அனலோடு அறிவிப்போம். தேவனுடைய சத்தியம் வேறு விதத்திலும் நம்மில் அக்கினியாய் எரிகிறது. அது நம்மை பாவத்திலிருந்து விலக்கிக் காக்கிறது. **நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். 9 [சங்கீதம் 119-11].** நம் இருதயத்தில் மறைந்திருக்கும் சத்தியம் நம் மன நிலையை, நம் நடத்தையை, நம் குணாதிசயத்தை ஒழுங்குபடுத்துகிறது.

**சத்தியம் போரடப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.**

யூதா 1:3 ல் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும் என்று பார்க்கிறோம். இங்கே விசுவாசம் ஒருவிசை ஒப்பு கொடுக்கப்பட்ட சத்தியத்தின் அமைப்பாயிருக்கிறது. இந்த சத்தியத்தை நாம் நடைமுறைப்படுத்துவது மற்றும் அறிவிப்பது என்று மாத்திரமல்லாமல் இதை நாம் பாதுகாப்பதும் நம் கடமையாயிருக்கிறது. ஏனென்றால், இது ஒருவரை இரட்சிக்கும் நற்செய்தியாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் **அந்த நம்பிக்கையைக் குறித்து, நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன்தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக்கேட்டு, தேவகிருபையை சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல், அது உங்களுக்கு பலன்தருகிறாதயிருகக்கிறது [கொலோசெயர் 1:6]**

உண்மையாகவே, நாம் விசுவாசத்திற்காகப் போராட வேண்டும். சத்தியத்திற்காக நிற்க வேண்டும். நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும், விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். சத்தியம் என்றால் என்ன? சத்தியத்தோடு நம்முடைய உறவு என்ன? நாம் அதை அறிந்திருக்கிறோமா? நாம் சத்தியமாக இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமா? நாம் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப் படுகிறோமா? நாம் ஆவியின் கனியைக் கொடுக்கிறோமா? நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து அதை அறிவிக்கிறோமா? நாம் சத்தியத்தின் வெளிச்சத்தில் நடக்கிறோமா? நாம் சத்தியத்தால் உடுத்தப்பட்டிருக்கிறோமா? [யோவான் 8:32] ஆகையால், குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

# கர்த்தரோடு சர்ச்சை செய்தல்
# Disputing the lord

*Carroll Sites*

ஒருமுறை ஒரு பிரசங்கியார் தண்டனை என்னும் தலைப்பில் பிரசங்கம் செய்தார். அடுத்த நாளிலே ஒரு வாலிபன் வந்து, அவர் நரகம் சம்பந்தமாகப் பிரசங்கித்த காரியத்தைக் குறித்து பிரசங்கி யாரோடு வாக்குவாதம் செய்தான். அந்த வாலிபன் பிரசங்கியாரோடு பேசிக்கொண்டிருந்தபோது, அவரைப் பார்த்து நித்திய தண்டனையைக் குறித்து நீங்கள் நம்புவதற்கும், நான் நம்புவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசங்களுக்கு முடிவு காட்டும்படி நான் இங்கே வந்திருக்கிறேன் என்றான். அப்பிரசங்கியார் சில நிமிடங்கள் சிந்தித்து விட்டு அந்த வாலிப னிடத்தில் திரும்பி உனக்கும் எனக்கும் இடையில் எந்த சர்ச்சையும் இல்லை; வேதாகமத்தை திருப்பி மத்தேயு 25:46 வசனத்தை வாசித்தால் சர்ச்சை உனக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையில் தான் இருக்கிறது என்பதைக் காண்பாய். அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதி மான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தெளிவாகச்சொல்லியிருக்கிறார் என்று சொன்னார். எனவே, நீ உடனே போய் உன் பிரச்சனையை அவரோடு தீர்த்துூர்க்கொள் என்று அந்த வாலிபனை அறிவுறுத்தினார். **ஒரு பிரசங்கியார், சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது, மற்றொருவர் அதை வாக்குவாதம் செய்தால் வாக்குவாதம் பிரசங்கி யாரோடல்ல, மாறாக அது தேவனுடைய சத்தியத்தோடு தான் உதாரணமாக,**

- ★ வேதாகமம், தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று சொல்கிறது [ஆதியாகமம் 1:1]. நாத்திகர்கள் தேவன் சிருஷ்டிக்கவில்லை என்று சொல்கிறார்கள், **அவர்களுடைய சர்ச்சை தேவனோடு தான்.**

- ★ வேதாகமம், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று சொல்கிறது ( மத் 3:17, 17:15) யூதர்கள் கிறிஸ்து தேவனுடைய குமாரன் இல்லை என்று சொல்கிறார்கள். **அவர்களுடைய சர்ச்சை தேவனோடு தான்.**

★ வேதாகமம் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று சொல்கிறது [ எபிரெயர் 11:6]. Universalists என்கிற தாராள கொள்கைக்காரர்கள், எச்சூழ்நிலையிலும் இறுதியாக ஒருவர் இரட்சிக்கப்படுவார் என்று சொல்கிறார்கள் **அவர்களுடைய வாக்குவாதம் தேவனோடு தான்.**

★ விசுவாசம் தேவனுடைய வார்த்தையினால் வரும் என்று வேதாகமம் சொல்கிறது [ரோமர் 10:17]. மத நம்பிக்கையுள்ள பலர் **உங்கள் உணர்வுகளை நம்புங்கள். இறுதியில் எல்லாம் சரியாகிவிடும்** என்று சொல்கிறார்கள் **அவர்களுடைய சர்ச்சை தேவனோடு தான்.**

★ வேதாகமம் ஒரே ஒரு சபைதான் உண்டு. கர்த்தர் இரட்சிக்கப் படுகிறவர்களை அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று சொல்கிறது. [எபேசியர் 4:4;1:22,23; கொலோசெயர் 1:18, 24 அப்போஸ்தலர் 2:47] மார்க்கப் பிரிவினை கூட்டத்தார் அநேக சபைகள் உண்டு. ஏதாவது ஒன்றைத் தெரிந்துகொண்டு அதிலே, சேர்ந்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறது. **அவர்களுடைய சர்ச்சை தேவனோடு தான்.**

★ இயேசு கிறிஸ்து எல்லாரும் ஒரே சரீரத்தில் ஒருமித்திருந்து ஒரே காரியத்தைப் பேச வேண்டுமென்று சொன்னார் [யோவான் 17:20,21; எபேசியர் 2:16;1 கொரிந்தியர் 1:10] மார்க்கப் பிரிவினைக் கூடடத்தார் நாம் பல பிரிவுகளாகப் பிரிந்து வித்தியாசமான காரியங்களை பேசுவோம் என்று சொல்கிறார். **அவர்களுடைய சர்ச்சை தேவனோடுதான்.**

★ இயேசு கிறிஸ்து ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று சொன்னார் [ மாற்கு 16:16]. பலர் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் தேவையில்லை என்று சொல்கிறார்கள். **அவர்களுடைய சர்ச்சை தேவனோடு தான்.**

★ இயேசு கிறிஸ்து மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்து ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். [வெளி 2:10] கால்வின் கொள்கைக்காரர்கள் ஒரு கிறிஸ்தவன் இழக்கப்படுவது சத்தியமில்லாத ஒரு காரியம். அது அவன் உண்மையுள்ளவனாகளாயிருந்தாலும் சரி, உண்மையில்லாத வனாக இருந்தாலும் சரி என்று சொல்கிறார்கள். ✞

# தேவனுடைய வார்த்தையைக் கலப்பாய் பேச வேண்டாம்

# Don't Correct God's Word

Ken Tyler

அப்போஸ்தலனாகிய பவுல் II கொரிந்தியர் 2:17- ல் **அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்** என்று சொல்கிறார். இந்த வசனத்திலிருந்து நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் நாட்களில் அநேகர் தேவனுடைய வார்த்தையைக் கலப்பாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று நாம் காண்கிறோம். ஒருவேளை, பவுல் இன்றைய நாட்களில் உயிரோடிருந்தால் மதப்பிரிவினைகளால் பிரிந்து காளான்களைப் போல் முளைத்திருக்கும் ஆயிரக்கணக்கான சபைகளைப் பார்த்தால் என்ன சொல்லுவார்? அவர் அநேகர் தேவ வசனத்தைப் கலப்பாய் பேசுகிறார்கள் என்று சொல்லி பல நூற்றாண்டுகள் உருண்ரோடினபடியினாலும், மக்கள் தொகை பெருக்கத்தினாலும் தேவனுடைய வார்த்தையிலிருந்து மக்கள் வழி விலகி செல்வது இன்னும் அதிகமாகித்தான் இருக்கிறது. மதத்தின் பெயரில் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று மக்கள் நம்புவதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன் என்பார். இவ்வுண்மை தவறான மதநம்பிக்கைகளால் உலக முழுவதும் கொலை, சித்திரவதை போன்ற காரியங்கள் அதிகமாகியிருப்பதால் தெளிவாகிறது.

பவுலால் சொல்லப்பட்ட வார்த்தைகள் இன்று நம்முடைய காதுகளில் ஓங்கி ரீங்காரமிட வேண்டும். நாமும் பவுலைப் போல தேவனுடைய வார்த்தையைக் கலப்பாய்ப் பேசாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பலர் அப்படி செய்யாமலிருக்கலாம். ஆனால், பவுல் **அநேகரைப் போல் நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல்** என்று சொல்கிறார். இன்று நமக்கு தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அது என்ன சொல்கிறதோ அதற்காக வெட்கப்படாத மக்கள் தான் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இன்று ஓரினச்சேர்க்கை போன்ற பாவங்கள் நம் சமுதாயத்தில் தலைத்தூக்கி இருக்கிறது. தங்களை பக்திமான்கள் என்று சொல்லிக்கொள்கிற சிலரால் இது கண்டு கொள்ளப்படாமல் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. பவுல் புறஜாதிகளின் பாவ நடக்கையைக் குறித்துப் பேசும்போது, ரோமர் ஒன்றாம் அதிகாரத்தில்

ஓரினச்சேர்க்கையை வன்மையாகக் கண்டிக்கிறார். ரோமர் 1:26-27[ இவ்வசனங்களை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்] இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே, அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.

ஏசாயா தீர்க்கதரிசி பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சில வார்த்தையைப் பேசியிருக்கிறார். அது இன்றைய நாட்களிலும் அப்படியே பொருந்துகிறது. தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமாகவும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து கசப்பைத் தித்திப்பும் தித்திப்பை கசப்பென்றும், சாதிக்கிறவர்களுக்கு ஐயோ! என்று சொல்கிறார் [ஏசாயா 5:20] இங்கே தீர்க்கதரிசி தங்களுடைய ஒழுக்க நெறிகளைச் சீர் குலைந்த ஜனங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். இந்த ஜனங்கள் தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் பேசிக்கொண்டிருந்தார்கள். இது இன்றும் உண்மையாயிருக்கிறது தேவனுடைய வார்த்தை எங்கே நிற்கிறதோ அங்கே நாமெல்லாரும் சரியாக நிற்க வேண்டுமென்பதே என்னுடைய ஜெபமாயிருக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையை மதிக்க வேண்டும். அதைப் படிக்க வேண்டும். அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அதை நாம் ஒருபோதும் கலப்பாய்ப் பேச வேண்டாம். தேவனுடைய வார்த்தையை நாம் நம்முடைய குறிப்பிட்ட ஒரு சூழ்நிலைக்கோ அல்லது பிரச்சனைக்கோ பொருத்துமாறு வளைக்க வேண்டாம். அது என்ன சொல்லுகிறாதோ அதை அப்படியே செய்யுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்போது மகிழ்ச்சியாயிருப்பீர்களென்று நான் உறுதியளிக்கிறேன். ✞

---

## இவைகளில் வளர வேண்டும்

- ✱ விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து வளர வேண்டும்
- ✱ நம்பிக்கையில் வளர வேண்டும்
- ✱ நன்றியாய் இருப்பதில் வளர வேண்டும்
- ✱ பிறருக்கு உதவி செய்வதில் வளர வேண்டும்
- ✱ போதுமென்கிற மனதிருப்தியில் வளர வேண்டும்.

# வசன ஆராய்ச்சி

## I கொரிந்தியர் 1:1–17

*Jerry Bates*

- I கொரிந்தியர் நிருபத்தை எழுதியது யார்? (வசனம்1).
- பவுல் எப்படி அப்போஸ்தலர் ஆனார் (வசனம் 1).
- கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் எப்படி அழைக்கப்பட்டார்கள்? (வசனம் 2).
- கொரிந்துவிலும், மற்ற இடங்களிலும் சபை யாருக்குச் சொந்தமானது? (வசனம்2).
- பவுல் எதற்காக தேவனை ஸ்தோத்தரித்தார்? (வசனம் 6).
- யாரோடு கிறிஸ்தவர்களுக்கு ஐக்கியம் இருக்கிறது (வசனம்9).
- பவுல் பத்தாம் வசனத்தில் எந்த காரியத்திற்காகப் புத்தி சொல்கிறார்?
- கிறிஸ்தவர்கள்-----------பிரிவினைகளில்லாமல் --------- உள்ளவார்களாய்--------- நம்மிடையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்(வசனம் 10)
- கொரிந்து சபையிலே பிரிவினை உண்டான காரியம் யாரால் பவுலுக்கு அறிவிக்கப்பட்டது? (வசனம் 11).
- கொரிந்தியர்கள் எந்த நான்கு பெயர்களால் தங்களை அழைத்துக் கொண்டார்கள்? (வசனம் 12).
- ஏன் அவர்கள் கிறிஸ்துவில் மாத்திரம் இணைந்திருக்க வேண்டும்? (வசனம் 13).
- பவுல் யாருக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுத்தார்? (வசனம் 15,16).
- பவுல் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுக்காததற்காக ஏன் சந்தோஷப்பட்டார்? (வசனம்14).

- என்ன நோக்கத்திற்காக கிறிஸ்து பவுலை கொரிந்துவுக்கு அனுப்பினார்? (வசனம் 17).
- ஏன் பவுல் சாதுரிய ஞானத்தோடு பிரசங்கிக்கவில்லை? (வசனம் 17).

## I கொரிந்தியர் 1:1-17

தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே, கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான் களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும், தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானம் உண்டாவதாக. கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே, ஸ்திரப்படுத்தப்பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூர்ண முள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே, நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து வுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே, வாக்குவாதங்கள் உண்டென்று, குலோவேயாளின் வீட்டாரால் எனக்கு அறிவிக்கப் பட்டது. உங்களில் சிலர் : நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன்.

*கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே, ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்துவுக்கும், காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை: இதற்காகத் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்ததுண்டு, இதுவுமல்லாமல், இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானம் கொடுத்தேனோ இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைத் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்.*

குறிப்பு :

**இந்த நிரூபம் கொரிந்துவிலிருந்த சபைக்கு எழுதப்பட்டது. இந்த சபையில் பல பிரச்சனைகள் இருந்தன. முதல் பிரச்சனை பிரிவினையாயிருந்தது. பிரிவினை, சபையில் எப்போதுமே பிரச்சனையாக இருந்து வருகிறது. இருந்தபோதிலும் அது தேவனுடைய திட்டத்தின் படியானதல்ல என்பது தெளிவாகிறது. ஒற்றுமை என்பது வெறுமனே நம் வேறுபாடுகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதினால் கிடைக்கும் வெளிப்புறமான ஒற்றுமையோ அல்லது பொய்யான ஒற்றுமையோ அல்ல. மாறாக, இந்த ஒற்றுமை நம் மனமும், இருதயமும், கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் இணைவதாகும்.**

**இவ்வசனப்பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல், தான் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுக்காததற்காக தேவனை ஸ்தோத்தரிப்பதாகச் சொல்கிறார். இது சிலர் சொல்லிக்கொள்வது போல் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கான ஓர் வசனப் பகுதி அல்ல. கொரிந்து சபையில் சிலர் தங்களுக்கு யார் வசனத்தைப் போதித்து ஞானஸ்நானம் கொடுத்தார்களோ, அவர்களிடத்தில் தங்கள் பற்றைக் காட்டினார்கள். இது சபையில் பிரிவினைக்கு வழிவகுத்தது. நமக்கு வசனத்தை யார் போதிக்கிறார், யார் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறார் என்பது ஒரு பொருட்டே அல்ல. நாமெல்லாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்க வேண்டும். எல்லாருமே கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்கள் தான் அதாவது வேலைக்காரர்கள் தான். நமக்காக மரித்து நம்மை இரட்சித்து இயேசு கிறிஸ்து தான். எந்த ஒரு மனிதனும் அல்ல!**

✝

இரட்சிப்பு

# சவுல் எப்போது இரட்சிக்கப்பட்டார்? When Was Saul Saved?

Raymond Elliott



**தே**வ ஆவியினால் ஏவப்பட்ட வரலாற்று ஆசிரியரான லூக்கா சவுலின் மனமாற்ற சம்பவத்தை அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்பதாம் அதிகாரத்தில் பதிவு செய்திருக்கிறார். இதே புத்தகம் 22 மற்றும் 26 ஆம் அதிகாரங்களில் தன்னுடைய ஊழியம் பற்றி மறு உத்தரவு சொல்லும் போது தன் மனமாற்ற சம்பவத்தை மறுபடியும் சொல்கிறார். நாம் ஒருவரிடம் சவுல் எப்போது இரட்சிக்கப்பட்டார் என்னும் கேள்வியை எழுப்பினால் வழக்கமாக வரும் பதில் **சவுல் தமஸ்குவுக்குப் போகும் பாதையில் கர்த்தரைக் கண்டபோது** என்பதாகத்தான் இருக்கும். ஒரு பிரசித்திப் பெற்ற கிராமப்புற பாடகர் தன்னுடைய வாழ்நாளில் **நான் ஒளியைக்கண்டேன்** என்னும் பிரபலமான பாடலை வெளியிட்டார். இன்னும் பலர் தங்கள் வாழ்க்கையில் ஒளியைக் கண்டதாகவும் அந்நேரத்திலேயே இரட்சிக்கப்பட்டதாகவும் உறுதியாகச் சொல்கிறார்கள். ஆனால் சவுலும் அதேபோல் தமஸ்குவுக்குப் போகும் பாதையில் இரட்சிக்கப் பட்டாரா? இக்காரியத்தின் உண்மை நிலைமையைக் கண்டறிய அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தின் 9,22, மற்றும் 26ஆம் அதிகாரங்களை மறுபடியும் வாசிக்கும்படி உங்களை அன்போடு வலியுறுத்துகிறேன். கீழ்க்காணும் காரியங்களை உற்றுநோக்கும் படியாக தயவாய் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

- ★ சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இரட்சிக்கப்பட்டிருந்தால் அது அவருக்கே தெரிந்திருக்கவில்லை. ஏனென்றால், அவர் கர்த்தரிடம் **ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?** என்று கேட்டார் [அப்போஸ்தலர் 9:6] அந்நேரத்தில் சவுல் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை, அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவர் இரட்சிக்கப்பட்டாரா? அப்படியென்றால் ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்னும் கேள்வியின் முக்கியத்துவம் என்ன?
- ★ சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இரட்சிக்கப்பட்டிருந்தால் அது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே தெரியவில்லை. ஏனென்றால், அவர் சவுலைப்பார்த்து நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்று சொன்னார். சவுல் மனமாற்றத்தின் இக்கட்டத்தில் இரட்சிக்கப்பட்டிருந்தால் இது தான் பொருத்தமான நேரமாக இருந்தது

★ சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இரட்சிக்கப் பட்டிருந்தால் கர்த்தர் சவுலினிடத்தில் அனுப்பிய அனனியா என்னும் சீடன் அதை அறியவில்லை. ஏனென்றால், அவர் சவுலிடம் இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் [அப். 22:16] சவுல் கிறிஸ்துவை விசுவாசித்தான். அவருடைய செயல்களை வைத்துப்பார்க்கும் போது செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு, மனந்திரும்பிய ஒரு நபராகப் பார்க்கிறோம். **அவர் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தான் [அப்9:9]** இதே அதிகாரம் பதினோராம் வசனத்தில் அந்நாட்களில் சவுல் தொடர்ச்சியாக ஜெபித்துக் கொண்டிருந்தார் என்று நாம் வாசிக்கிறோம். இருந்தபோதிலும் அனனியா சவுலிடத்தில் வந்த போது அவர் இரட்சிக்கப்படவில்லை. இதை நாம் அனனியா சவுலிடத்தில் நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்தானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்று சொன்னதன் மூலம் அறிந்து கொள்ளலாம் [அப்போஸ்தலர் 22:16]. பாவமே இல்லையென்றால், பாவங்கள் எப்படி கழுவப்பட முடியும். ஒருவருடைய பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டிருந்தால், உன் பாவங்கள் போகக்கழுவப்படு என்று சொல்ல வேண்டிய அவசியமில்லையே.

★ கடைசியாக, சவுல் தமஸ்வுக்குச் செல்லும் பாதையில் தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொண்டார் ஏனென்றால், அனனியா மூலமாக கர்த்தர் கொடுத்த கட்டளைகளுக்கு அவர் கீழ்படிந்தார். இது உண்மையென்று நமக்கு எப்படித் தெரியும்? பின்பு பவுல் ரோமாபுரியில் உள்ள சகோதரர்களுக்கு எழுதும்போது, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற **நாமனைவரும்** [பன்மையாக] அவரையும் சேர்த்து சொல்கிறார். அடுத்த வசனத்தில் **நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்** என்று தன்ரையும் சேர்த்து சொல்கிறார்[ ரோமர் 6:3,4]. சவுல் எப்போது கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றார்? அனனியாவால் அப்படி செய்ய போதிக்கப்பட்டபோது, தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவருடைய பாவங்கள் கழுவப்பட்டது [யோவான் 1:29].

மேற்சொல்லப்பட்ட காரியங்களில் நாம் பார்க்கும் போது ஒருவருடைய மனமாற்ற சம்பவத்தில் விசுவாசமோ, அல்லது மனந் திரும்புதலோ நேரடியாக குறிப்பிடப்படவில்லை என்பது கேட்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கிறது. ஆனால், மனமாற்ற சம்பவத்தில் இவைகள் உள்ளடக்கம் என்பது உண்மையாயிருக்கிறது. இருந்த போதிலும், அனனியாவால் கொடுக்கப்பட்ட கட்டளை அதாவது தண்ணீர் ஞானஸ்நானம் இன்னும் மத உலகில் சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறி இருக்கிறது. சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சவுலுக்கு காட்சியளித்ததற்கு சில காரணங்கள் உண்டு. குறிப்பாக அவரை புறஜாதிகள் மத்தியில் பிரசங்கிக்க அனுப்புவது மற்றும் சவுல் கர்த்தருடைய நாமத்தினிமித்தம் பாடுபடுவது போன்றவைகள் அவைகளில் சில. ✠

## வேதாகமம் வாசிக்க நேரத்தைக் கண்டுபிடிப்பதற்கான சில வழிகள்

- ஒவ்வொரு காலையிலும் பத்து நிமிடம் முன்பாக எழுந்து வேதாகமத்தை வாசியுங்கள்.
- ஒவ்வொரு இரவிலும் தூங்குவதற்கு முன்பாக வாசிப்பதற்கு வசதியாக வேதாகமத்தை அருகில் வைத்துக் கொள்ளுங்கள்.
- குறைவாகப் பேசுங்கள், அப்போது உங்களுக்கு வாசிப்பதற்கு இன்னும் சில நிமிடங்கள் கூடுதலாகக் கிடைக்கும்.
- வேதாகமம் இல்லாமல் எந்த ஒரு பயணத்தையும் ஒரு போதும் செய்ய வேண்டாம்.
- அன்றாடம் நான் வேதம் வாசித்தே தீருவேன் என்று தீர்மானம் எடுத்து அதிலே உறுதியாயிருங்கள்.

# ஒரு மனிதன் மரித்தால்... If a Man Die...

Dean Fugett

மனிதன் நித்திய ஜீவனில் விருப்பமாயிருக்கிறான் அல்லது தொடர்ந்து விருப்பமுள்ளவனாயிருக்கிறான் என்று சொல்வது அதன் முக்கியத்துவத்தை குறைத்துப் பேசுகிற ஒரு காரியமாக மாறி விடுகிறது. மனிதன் எப்போதெல்லாம் தான் கனவு கண்டு கொண்டிருக்கின்ற நித்திய ஜீவனை, அமைப்பு சார்ந்த மதங்களில் தேடியும் அதை கண்டடையவில்லையோ அப்போதெல்லாம் அவன் ஒரு மதத்தை உண்டுபண்ணிவிடுகிறான். இப்போது இருக்கின்ற சபைகள், மத அமைப்புகள் சர்ச்சிகளாக இருக்கின்றன. எகிப்பதின் மிக பிரம்மாண்டமான பிரமிடுகள் மனிதன் இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகு மகிழ்ச்சியாயிருப்பதற்கு செய்த காப்பீட்டின் அடையாளங்களாகவே திகழ்கின்றன.

நாம் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையை, தந்திரமாக உருவாக்கப்பட்ட மனித கட்டுக்கதைகளிலோ அல்லது அருமையாக வடிவமைக்கப்பட்டு, சிங்காரிக்கப்பட்டிருக்கின்ற கல்லறைகளின் மீதோ வைக்கவில்லை. நம்முடைய நம்பிக்கை எல்லாம் கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களை ஆதாரமாகக் கொண்டதாகும். கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களெல்லாம் நம்முடைய ஜீவியத்திற்காக அவருடைய நிபந்தனைகளோடு இணைக்கப்பட்டுள்ளது. ஜீவியத்தின் நிபந்தனைகளை நீக்குவது வாக்குதத்தத்தின் நிபந்தனைகளைத் துண்டிப்பதாகும். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தது, தீர்க்க தரிசிகளின் நிறைவேறுதலாயிருக்கிறது [அப்போஸ்தலர் 21-30,34] நாம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவது நம் கர்த்தருடைய கட்டளை களுக்கு நாம் உண்மையாகக் கீழ்ப்படிவதின் விளைவாக அல்லது பலனாயிருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் எப்படி கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினாரோ அதே போல் நம்மையும் தேவன் உயிரோடு எழுப்புவார் என்று நிச்சயப் படுத்துகிறார். ஆகவே, நாம் இப்பூமிக்குரிய வாழ்க்கைக்குப் பிறகு சுகமாக வாழ வருங்கால ஏற்பாடுகளுடன் கூடிய மிகப்பெரிய

நினைவுச் சின்னங்களை நாம் கட்டுவதில்லை. அவைகளை கல், மண் மற்றும் விலையுயர்ந்த பொருட்களினால் கட்டுகிறார்கள். ஆனால், நாம் இவ்வுலகில் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு அவருடைய கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப் படிந்து **அவபக்தியையும் இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலேயே ஜீவனம் பண்ணி** நம் வாழ்க்கையைக் கட்டிக் கொண்டிருக்கிறோம் [தீத்து2:12]. அதன் பின்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாக்குத் தத்தங்களில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம், ஏனென்றால், அவரே நமக்கு நித்திய இரட்சிப்பை அளிக்க வல்லவராயிருக்கிறார். கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாதவர்களின் நிலை, அவர்கள் வருங்கால ஏற்பாடுகளை மதங்களில் செய்திருந்தாலும் சரி, கல்லறைகளில் செய்திருந்தாலும் சரி [தெசலோனிக்கேயர் 1:7–9] தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கராயும் நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலும் உங்களி டத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப் படத்தக்கவராயும் அவர் வரும் போது, நீங்கள் நித்திய ஜீவனில் விருப்பமுடையவர்களாக இருந்தால், வேதாகமத்தை ஜாக்கிரதையாக, நேர்மையாக வாசிக்க வேண்டுமென்று உங்களை வருந்திக் கேட்டுக் கொள்கிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, தேவ பக்தியோடு அவருடைய சபையில் வாழ்ந்து, கிறிஸ்து உயிர்த் தெழுந்தது போல நாமும் ஒரு நாளில் உயிரோடு எழுவோம் என்னும் நிச்சயத்தோடு வாழ்வை எதிர் கொள்வோம். ✝

---

*நம் பரமப்பிதா நம் வாழ்க்கையில் கூட்டி வழங்கிய ஆசீர்வாதங்கள் ஏராளம், தாராளம். நாம் ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்க அதிக நேரம் எடுத்துக்கொண்டால், துயரப்படுவதற்கு நேரமே இருக்காது.*

# இரட்சிப்பு
# ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் தண்ணீர் முக்கியமானது
# Water Is Important In Man's Life

*Marshall Keeble*

**தே**வன் முதலில் தண்ணீரை உண்டாக்கினார். பின்பு மனிதனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். தண்ணீரல்லாமல் மண் ஒட்டாது. தண்ணீரில் வல்லமை இருக்கிறது. நீங்கள் இதை நம்பவில்லையென்றால், வாகனத்திலுள்ள ரேடியேட்டரில் [Radiator] தண்ணீர் ஊற்றாமல் வாகனத்தை ஓட்டிச் சென்று பாருங்கள். உங்கள் வாகனம் சூடாகி எரிந்துவிடும். இப்போது தண்ணீரில்லாமல் ஒரு மனிதனை பரலோகம் அனுப்ப முயற்சித்துப் பாருங்கள். அந்த மனிதனால் தண்ணீரில்லாமல், தண்ணீரில் மூழ்காமல் பரலோகம் போகவே முடியாது.

சிலர் நாம் ஞானஸ்நானத்திற்கு முன்பாகவே இரட்சிக்கப்படுகிறோம் என்று சொல்கிறார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** என்று சொல்லியிருக்கிறார் [மாற்கு 16:16]. இப்போது நாம் ஞானஸ்நானதிற்கு முன்பாக இரட்சிக்கப்படுகிறோம் என்று சொல்ல முடியாது, அப்படிச் சொன்னால் நாம் தேவனை பொய் சொல்கிறவர் என்று குற்றம் சாட்டுகிறவர்களாக இருப்போம். தேவனுக்குள் அப்படி குற்றஞ்சாட்டி நம்மால் பரலோகம் போக முடியாது. நீங்கள் என்னை **பொய்யன்** என்றழைக்கலாம். ஆனால், தேவனை அப்படி அழைக்க முடியாது.

இன்னும் சிலர், ஒரு மனிதன் முதலில், இரட்சிக்கப்படுகிறான். பின்பு தான் ஞானஸ்தானம் பெறுகிறான் என்று சொல்கிறார். ஒரு பெண் துணிகள் ஏற்கனவே சுத்தமாக இருப்பதினால் துவைப்பதில்லை: துணிகள் அழுக்காக இருப்பதினால் துவைக்கிறாள். அது போல் தான் ஞானஸ்நானம் பெறுகிறான். ஏனென்றால், சுத்திகரிக்கப்பட வேண்டும்.

சுவிசேஷமானது எந்த நோய்களையும் குணப்படுத்தக் கூடிய ஐந்து மாத்திரரைகளால் உண்டானது.

* *முதல் மாத்திரை - கேட்பது*
* *இரண்டாவது மாத்திரை - விசுவாசிப்பது*
* *மூன்றாவது மாத்திரை - மனந்திரும்புவது*
* *நான்காவது மாத்திரை - அறிக்கையிடுவது*
* *ஐந்தாவது மாத்திரை - ஞானஸ்நானம் பெறுவது.*

எனவே, பாவங்களை நீக்கும் வல்லமை கொண்ட திருமுழுக்கை அற்பமாக எண்ணாதீர்கள்!. ✞

# பவுலின் பிரசங்கத்தைப் பற்றிய பார்வை
# A Look at paul`s preaching

Clarance DeLoach



அபாயகரமான சூழ்நிலைகளை உள்ளடக்கிய இவ்வுலகில் ஒவ்வொரு சுவிசேஷப் பிரசங்கியாரும் பவுலின் பிரசங்கத்தை ஆராய்ந்து பார்க்கும்போது ஆவிக்குரிய உற்சாகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எபேசு பட்டணத்து மூப்பர்களோடு நடத்திய உணர்வுப்பூர்வமான கூட்டத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஊழியத்தைப் பற்றிய செய்தி, முறைமை பற்றிய காரியங்களை விரிவாக எடுத்துரைக்கிறார் [அப் 20:17-38].

**முதலாவது அவருடைய தனிப்பட்ட நடத்தையை கவனியுங்கள்.**

பவுலின் நடத்தை எல்லோரும் அறிந்த ஒன்றாக இருந்தது. அங்கே ஒளிவு மறைவு இல்லை! அவர் குற்றமற்றவராகவும், நிந்தைக்கு அப்பாற்பட்டவராகவும் இருந்தார். அவருடைய நடத்தை எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இருந்தது. இந்த மாபெரும் பிரசங்கியார் காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. அதாவது, எல்லாக் காலங்களிலும் இவருடைய நடத்தை ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. இது அவருடைய வாழ்க்கையின் ஸ்திரத்தன்மையை நமக்குச் சொல்கிறது.

அவர் தீமோத்தேயுவுக்கு **சமயம் வாய்த்தாலும், வாய்க்கா விட்டாலும் ஜாக்கிரதையாயத் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு** என்று புத்திமதி சொன்ன காரியங்களை அவர் முதலில் தனக்குத்தானே பயன்படுத்தினார் [2தீமோத்தேயு 4:2].

அவர் ஓர் ஊழியக்கரனாக சொல் அர்த்த ரீதியாக ஒரு கொத்தடிமையாக தன்னுடைய எஜமானுக்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தார். இந்தக் காரியத்தில், அவர் தன் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் தன்னை முழுமையாக ஒப்புகொடுத்தார்.

அவர் தன்னுடைய ஊழியத்தை தாழ்மையாகச் செய்தார்! பவுலின் நாட்களில் கிறிஸ்தவ மார்க்கத்தில் பவுலைப் போல் புத்திமான், கல்விமான் யாருமில்லை. அந்நாட்களில் நியாய சாஸ்திரங்களில் பவுலுக்கு இருந்த அறிவைப் போல், கலாச்சாரத்தில் அவருக்கிருந்த பரிச்சயத்தைப் போல யாருக்குமில்லை. ரோமக்குடியுரிமை அவருக்கு தனித்துவமான நன்மைகளைக் கொடுத்தது. இருந்தபோதிலும், அவர் சுவிசேஷ ஊழியத்தைத் தன்மேல் பொழியப்பட்ட கிருபையாகக் கருதினர். என்னே ஒரு தாழ்மை!

மேடைப் பிரசங்கத்தில் அகங்காரத்திற்கு வேலையே இல்லை! அகந்தை கிருபையின் சுவிசேஷத்திற்கு அருவருப்பானது.

அவர் கண்ணீரோடு ஊழியம் செய்தார்! நாமும் கூட கண்ணீரோடு கூட ஆத்துமாக்களைச் சந்திக்கவேண்டும். இன்று பிரசங்கியார்கள் சந்திக்கும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று அவர்கள் இயந்திரத் தனமாகப் பிரசங்கிப்பது தான். அதனால் உணர்வுகளுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை! எசேக்கியலைப் போல் ஜனங்கள் எங்கே உட்காருகிறார்களோ அங்கே நாமும் உட்கார வேண்டும். நம் எஜமானாகிய இயேசு கிறிஸ்துவைப்போல் மற்றவர் களுடைய உணர்வுகளால் தொடப்பட வேண்டும். விதைப்பதும் கண்ணீர் விடுவதும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்கிறது. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள் [சங்கீதம் 126:6].

பவுல் பாடுகளோடு ஊழியம் செய்தார்! ஊழியத்தின் பாதையில் நிச்சயமாகவே, பவுல் அத்தனை பாடுகளைப் பட்டிருக்க நாம் மட்டும் ஏன் விதிவிலக்காயிருக்க வேண்டும்? நமக்குப் போதுமான பொருளாதார உதவி இல்லை, மோசமான வேலை ஸ்தலங்கள், சகோதரர்களிடமிருந்து போதுமான ஒத்துழைப்பு இல்லை. என்றெல்லாம் நாம் முறுமுறுக்கிறோம்[*I* கொரி.11:23-13].

பவுல் மகிழ்ச்சியாக ஊழியம் செய்தார்! பவுல் தன்னுடைய ஊழியத்தை சந்தோஷமாக முடிக்க ஆசைப்பட்டார் (வசனம் 24) ஊழியத்திலே கண்ணீர்கள், பாடுகள் இருப்பதாலும் அது மகிழ்ச்சியான பணியாகவே இருந்தது. ஊழியத்தை மகிழ்ச்சியாகச் செய்யாதவர்கள் ஊழியத்தை விட்டே வெளியேற வேண்டும். ஒருவருடைய மனம் ஊழியத்திலே இல்லையென்றால் எப்படி மனதார ஊழியம் செய்ய முடியும்? பவுல் ஊழியத்தை சந்தோஷமாகச் செய்தபடியால் தான் **நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்று தைரியமாகச் சொன்னார் (2தீமோ. 4:7).**

**இரண்டாவது அவருடைய பிரசங்க முறையைக் கவனியுங்கள்.**

நான் உங்களுக்கு சாட்சியாக அறிவித்தேன் என்று சொல்கிறார். அவர் என்ன பிரசங்கித்தாரோ அப்படியாகவே இருந்தார்! ஊழியத்தின் பாதையில் தனிப்பட்ட உதாரணத்திற்கு இணை எதுவுமில்லை. அவர் தன்னுடைய உதடுகளில் என்ன உச்சரித்தாரோ அதை செயலிலும் செய்து காட்டினார். அவருடைய பேச்சும் செயலும் ஒரே நேர்கோட்டில் இருந்தது. அவருடைய போதிக்கும் முறை பொதுவான ரீதியிலும் இருந்தது. தனிப்பட்ட ரீதியிலும் இருந்தது. அவர் பெரிய ஜனக் கூட்டத்தின் மத்தியிலும் போதித்தார். அதே நேரத்தில் தனித் தனியாகவும் போதித்தார். எந்த ஒரு பிரசங்கியாரும் பிரசங்க மேடை தான் தன்னுடைய அதிகார எல்லை வரம்பு என்று நினைக்க கூடாது.

பவுல் எச்சரிப்புடன் பிரசங்கித்தார்! அவர் மூப்பர்களை எச்சரித்தார்! அவர் மூப்பர்களுக்கு விழிப்புடன் இருக்கும்படிக்கு எச்சரிப்பு விடுத்தார். கிறிஸ்துவைப் பிரசங்கிப்பவர்கள் இருதயத்தில் சமுதாய பட்சபாதமில்லாதவர்களாயிருக்கிறபடியால், அவருடைய தூதுவர்களாக சேவை செய்கிறவர்கள் தங்கள் எஜமானை எல்லாவற்றிலும் பிரதிபலிக்க வேண்டும். மேலும், பவுல் மூப்பர்களை எச்சரிக்கும் போது மூப்பர்களில் சிலர் எழுப்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடனவைகளைப் போதிப்பார்களென்று எச்சரித்தார். பிரசங்கியார்கள் தங்களைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சகோதரர்கள் மாறுபாடானவைகளைப் போதிக்கிறார்களா? என்பதை பிரசங்கியார்கள் கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

பவுல் சகோதரர்களை தட்டிக்கொடுத்து மெச்சவும் செய்திருக்கிறார். அவருடைய பிரசங்கங்கள் எல்லாமே எதிர் மறையானவைகளல்ல. சகோதரர்கள் சில சமயங்களில் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். பவுலின் நிரூபங்களில் மெச்சுதல் முக்கிய பங்கு வகிக்கிறது.

**மூன்றாவது, அவருடைய செய்தியை கவனியுங்கள்**

அது அவரிடமிருந்து தோன்றவில்லை. செய்தியை அவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்டார்: இயேசு கிறிஸ்துவே அதை அவருக்கு வெளிப்படுத்தினார்.(கலாத்தியர் 1:12). அவர் இச்செய்தி சம்மதமாக எல்லோருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்று அவரால் சொல்ல முடிந்தது. மேலும், அவர் இப்படிச் சொல்ல முடிந்ததற்கான காரணங்கள் என்னவென்று பார்த்தால், அவர்

- **முழுமையான சத்தியத்தைப் போதித்தார்.**
- **அவர்களை சுவிசேஷத்தை விசுவாசிக்கும்படி செய்திருக்கிறார்**
- **அவர்களுக்கு முன்பாக சுவிசேஷத்தின்படி வாழ்ந்து காட்டுகிறார்.**

பவுல் பிரயோஜமானவைகளில் ஒன்றையும் மறைந்து வைக்க வில்லை! பிரசங்கம் கோழைகளுக்கான ஒன்றல்ல! பிரசங்கம் என்பது ஜனங்களுடைய விருப்பத்திற்கேற்ப இருக்க கூடாது. அப்படிச் செய்யும்போது ஜனங்கள் மத்தியில் பிரபலம் ஆகாமல் இருக்கலாம். ஆனால், அது ஜனங்களுடைய பாவங்களைக் கண்டித்து உணர்த்து கிறது, இரட்சிக்கிறது, பக்தி விருத்தி அடையச்செய்கிறது. தேவையான சத்தியம் மறைக்கப்படும் போது ஆத்துமா ஆபத்துக்குள்ளாகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசத்தின் முக்கியத்துவம் பற்றியும், மனந்திரும்பும் அவசியம் பற்றியும் பிரசங்கித்தார். அவர் ராஜ்ஜியத்தை நிகழ்கால நிஜமாகப் பிரசங்கித்தார். அது மாத்திரமல்ல, சபையானது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே வாங்கப்பட்டது என்றும் அறிவித்தார். அவர் கிருபையின் சுவிசேஷத்தைப் பற்றியும் விவரித்தார். மேலும் அவர், சபை எதிர்கொள்ளும் ஆபத்துகள் குறித்தும், வழிவிலகி செல்லும் மனநிலைச்குறித்தும் எச்சரித்தார்.

நாம் எப்படியெல்லாம் பவுலைப்போலிருக்க வேண்டுமென்று பாருங்கள். அவருடைய துடிப்புள்ள பிரசங்கிக்கும் விதம் மற்றும் செய்தி இந்த ஆபத்தான நாட்களில் நம் உணர்வுகளை உற்சாகபடுத்து வதாக! ✝

---

**நாம் தேவனுக்குச் சொந்தமானவர்களாக இருந்தால், நம்முடைய மதிப்பும், பிறகாரியங்களும் நமக்குச் சொந்தமாகாது. அவருடைய அளவுகோலின் படியாக அவைகள் தீர்மானிக்கப்படுகிறது; அவைகள் நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்கின்றன.**

சபை

# காணவில்லை
# Missing

Steve Higginbotham

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வேளையிலே ஒரு குறிப்பிட்ட சபையின் பிரசங்கியார் மூப்பர்களில் ஒருவரை அழைத்து பிரசங்க பீடத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டியை காண வில்லை என்று சொன்னார். பூந்தொட்டி காணாமல் போனது ஆரம்பத்தில் அந்த மூப்பருக்கத் தெரியவில்லை. ஆனால், இப்போது தெரிய வந்துவிட்டது. அந்த மூப்பரோ எல்லா மூப்பர்களையும் அழைத்து அந்த பூந்தொட்டி காணாமல் போனதை குறித்து ஏதாவது தகவல் உண்டா? என்று கேட்டார். யாருக்கும் எதுவும் தெரியவில்லை. எனவே அப்பூந்தொட்டியை தேடும் பணி தொடர்ந்தது.

அப்பூந்தொட்டி அதிகமான விலை கொடுத்து வாங்கப்பட்டது. கடைக்காரர் பல ஆயிரக்கணக்கான ரூபாய் அப்பூந்தொட்டிக்காக கேட்டிருந்தபடியால் அதன் மதிப்பறிந்து ஒவ்வொருவரும் தேடல் வேட்டையில் இறங்கினார்கள். சபைக்கட்டிடத்திலிருந்த ஒவ்வொரு அறையிலுமுள்ள அலமாரி, பீரோ, மேஜை போன்றவைகளில் சிரத்தையாக தேடினார்கள். சபை அறிவிப்பு பலகையில் பூந் தொட்டி காணவில்லையென்று நோட்டீஸ் ஒட்டப்பட்டது. சபை அங்கத்தினர்கள் எல்லோருக்கும் ஈமெயில் அனுப்பப்பட்டது. தொலைபேசி அழைப்புகள் எல்லோருக்கும் பறந்தன. இருந்த போதிலும் அப்பூந்தொட்டி கிடைத்த பாடில்லை.

சுமார் ஒரு மாத காலம் வெறுமையான பீடத்தைக் கண்ட பிரசங்கியார் பிரசங்க பீடத்தின் பின்னே தன் கையை விட்டு காணாமல் போன அப்பூந்தொட்டியை எடுத்தார். அப்போது சபை அங்கத்தினர்களின் பெருமூச்சு சத்தம் சபை கட்டிடத்தை நிரப்பியது. அதைத் தொடர்ந்து உடனே, பிரசங்கியார் ஒரு சுருக்கமான பாவத்தை கண்டித்துணர்த்தும் செய்தியைக் கொடுத்தார். அந்நாளின் செய்தி தான் பிரசங்கியார் கொடுத்த செய்திகளிலேயே மிகச் சிறந்த செய்தியாகும். அவர் முதலில் சொன்ன வார்த்தை எல்லோரையும் நிலை குலையச் செய்தது. அவர் நான் தான் பூந்தொட்டியை எடுத்து ஒளித்து வைத்தேன் என்பதை முதலில் ஒத்துக்கொள்கிறேன் என்றார். மேலும் தொடர்ந்து சொல்லும் போது நான் ஏன் அதை ஒளித்து வைத்தேன் என்றால் பிரசங்க பீடத்தின் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் பூந்தொட்டி காணாமல் போனால் நீங்க ளெல்லாரும் எப்படித் தேடுவீர்கள்? எப்படியாக நடந்து கொள்வீர்கள் என்று அறிய விரும்பினேன். நீங்களும் பூந்தொட்டி காணாமல் போனதி லிருந்து அதை தேடும் பணியில் பரபரப்பாக இருந்ததை என்னால் காண முடிந்தது. ஆனால், காணமல் போன உங்கள் ஆத்துமாவைக் குறித்து நீங்கள். கண்டு கொள்ளாமலிருக்கிறதென்ன? என்று எல்லோருடைய சிந்தனையையும் தூண்டினார்.

நீங்கள் அந்த சபையின் அங்கத்தினராக இருந்தால் இதைக் குறித்து என்ன எண்ணுவீர்கள்? உங்கள் ஆத்துமாக்களைத் தொலைத்து விட்டீர்கள் என்கிற உணர்வு உண்டாகுமா? சிந்தித்துப் பாருங்கள்! ✝

# சபையின் உரிமையாளர் யார்?

# Who owns the church?

*Hollis Miller*

இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு மேலே கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்புக்கு பதில் கொடுப்பது மிக எளிதான காரியமாக இருக்கும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்** என்று சொல்லியிருக்கிறார் ( மத்தேயு 16:18) நம் இரட்சகருடைய இவ்வார்த்தைகள் மட்டுமல்லாமல் புதிய ஏற்பாடு, சபை கிறிஸ்துவுக்கு சொந்தமானது என்று பல இடங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:28 –ன் படி கிறிஸ்து தம்முடைய சுய இரத்தத்தினாலே வாங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது; கிறிஸ்து சபையை விற்கவும் இல்லை. அது அவரிடமிருந்து கொள்ளையிடப்படவில்லை.

இயேசு கிறிஸ்து சபையின் உரிமையாளராக இருக்கிறபடியால், அவரிடமிருந்து அந்த அதிகாரத்தை பலவந்தமாக பறிக்க நினைக்கும் எவரும் கர்த்தரை கொள்ளையிடும் குற்றவாளியாகிவிடுகிறார். எந்த ஒரு வேத வித்தகரும், மத தத்துவஞானியும், மூப்பத்துவமும் எந்த ஒரு உதவிக்காரரும், பிரசங்கியாரும் எந்த ஒரு ஆலோசனைச் சங்கமும் சபையின் உரிமையாளர் அங்கீகாரத்தை எந்த ஒரு காரியத்தையும் செய்யவோ தீர்மானிக்கவோ முடியாது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலின் பவுல் சபை கிறிஸ்துவுக்கு சொந்தமானதென்றும் சபை சம்மந்தமான எல்லா காரியத்துக்கும் கிறிஸ்துவே தலையானவரென்றும் உறுதியாக சொல்கிறார். ஆகையால், உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்க்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுகுறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். (அப்போஸ்தலர் 20:28) எல்லாத்துரைத்தனத்துக்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்திற்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக. அவரை உன்னதங்களில் தம்முடைய

வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" -(எபேசியர் 1:20 - 23) மூப்பர்கள் அல்லது கண்காணிகள் சபையை மேய்க்கிறார்கள். ஆனால் சபையின் உரிமையாளர் சபைக்காக எவைகளையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறாரோ அவைகளை மாற்ற எந்த அதிகாரமும் இல்லை. உதவிக்காரர்கள் சபையில் உதவிசெய்கிறார்கள். ஆனால், சபையின் உரிமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு காரியத்தையும் அவர்களால் மாற்ற முடியாது. பிரசங்கியார்கள் சபை உரிமையாளரின் போதனைகளை பிரசங்கிக்கலாம். ஆனால் சபை உரிமையாளரின் போதனைகளுக்கு மாற்றாக தங்கள் சொந்த கருத்துக்களைப் புகுத்த முடியாது. மனிதர்கள் புதிய புதிய மாற்றங்களையும் புதிய புதிய எண்ணங்களையும் விரும்பி அவைகளை பரப்புவதில் பரபரப்பாகத் திரியும் இந்த நாட்களில் சபையின் உரிமையாளர் யார்? என்னும் கேள்வி மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏதோ ஒன்று புதிதாக வித்தியாசமாக உத்தேசிக்கப்படும்போது எழும்பும் முதல் கேள்வி: சபையின் உரிமையாளர் அதைப்பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறரா? சபை தனக்கு தானே அதற்கு ஆளுகை அமைப்பாக இருக்க முடியாது. சபைக்கு சில காரியங்கள் சுவாரஸ்யமாக தோன்றலாம். ஆனால் சபைக்கு சுவாரஸ்யமாக தோன்றும் காரியங்கள் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்காது. ✞

## தியானியுங்கள்

***தேவனுடைய பிரமாணத்தைப் பற்றிய அறிவில் குறைவுள்ளவர்களாக இருந்தால் யாத்திராகமம் 20; மத்தேயு 23 அதிகாரங்களைத் தியானியுங்கள்.***

***மற்றவர்களிடத்தில் காட்டும் அன்பில் குறைவுள்ளவர்களாக இருந்தால் 1கொரி 13 ஐ தியானியுங்கள்.***

***சந்தேகத்திலும், விசுவாசக் குறைச்சலிலும் இருக்கும் போது எபிரெயர் 12 அதிகாரங்களையும் தியானியுங்கள்.***


***ஆவிக்குரிய போராட்டம் கடுமையாக இருக்கும் போது சங்கீதம் 27 ஐ தியானியுங்கள்.***

***மன்னிப்பது கடினமான இருந்தால் மத்தேயு 18 ஐ தியானியுங்கள்.***

# சபைக்கு கிறிஸ்துவின் சேவை

## எபேசியர் 5:25,27





**கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையை பராமரிக்கிறார்.**

| | |
|---|---|
| கடந்த காலத்தில்: சிலுவையில் | ❈ அவர் சபையில் அன்பு கூர்ந்தார்<br>❈ அதற்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் |
| நிகழ்காலத்தில்: சிங்காசனத்தில் | ❈ பரிசுத்தப்படுத்துகிறார்,<br>❈ சுத்திகரிக்கிறார்,<br>❈ போஷிக்கிறார்,<br>❈ காப்பாற்றுகிறார். |
| வருங்காலத்தில் அவருடைய வருகையின் போது | ❈ அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வார். |

**அவருடைய சபை அங்கத்தினர்களாக. நாம் அவருக்கு உண்மையுள்ள வேலையாட்களாக இருப்போமாக!**

வாழ்வதற்கான உபதேசம்

# சொல்லப்படாத ஒன்று
# What Is Not Said

*David Deffenbaugh*

**தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறே னென்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறேன்.** – அப்போஸ்தலர் 20:26–27

இது ஒரு ஆச்சரியமூட்டும் வாக்கியமாக இருக்கிறது அப்படித்தானே? இவ்வசனப்பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷப் பிரசங்கத்தை ஜனங்களுடைய ஜீவியங்களில் தனக்கிருக்கின்ற தனிப்பட்ட பொறுப்போடு தொடர்புபடுத்திப் பேசியிருக்கிறார். இதன் முடிவு அல்லது தீர்ப்பு பவுல் குற்றமற்றவர் என்பதாயிருக்கிறது!

அப்போஸ்தலனாகிய பவுல் மேற்கண்டவாறு சொல்வது முதல் முறை அல்ல. கொரிந்து பட்டணத்தில் ஜெபஆலயத்தில் யூதர்களிடத்தில் பவுல் **உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்: இது முதல் புறஜாதி யாரிடத்திற்குப் போகிறேன்** [அப்போஸ்தலன் 18:6] என்று சொன்னார். மேற்சொல்லப்பட்ட இரு வசனங்களும் ஒன்றொடொன்று தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறது. ஏன் அப்படி? இதற்கான விடைக்கு ஒருவர் பழைய ஏற்பாட்டிற்குத் திரும்பி எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு தேவன் சொன்ன வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும்.

மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீ

துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன் முன் இடறலை வைக்கும் போதும், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப் படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீதிமான் பாவஞ்செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்த பின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான்; அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவை தப்புவித்தாய் என்றார் (எசேக்கியேல் 3:17-21)

தன்னை சுவிசேஷப் பிரசங்கியார் என்று சொல்லிக்கொள்ளுகிற எல்லோருக்கும் தேவனுடைய ஒட்டுமொத்த ஆலோசனைகளையும் பிரசங்கிக்கும் பொறுப்பு இருக்கிறது. இது எல்லோராலும் விருப்பப்படும் பிரசங்கமாயிருக்குமா என்பது கேள்விக்கிடமானது. இதனால் யோவானுடைய தலை துண்டிக்கப்பட்டது. எரேமியா தண்ணீர் தொட்டிக்குள் தூக்கி எறியப்பட்டார். பவுல் அடிக்கப்பட்டு கல்லெறியப்பட்டார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். இப்படியிருக்கும்போது சபை ஒன்று தான், விவாகம் சம்பந்தமாக தேவனுடைய கட்டளைகள், வீட்டிலும், சபையிலும் ஆண் தலைமை, ஒருவனுக்கு ஒருத்தி போன்ற காரியங்களைக் குறித்து தேவனுடைய ஆலோசனையை எடுத்துரைக்கும் போது விளைவுகள் என்ன வாயிருக்கும் என்பதைக் கேட்கவும் வேண்டுமா?


இங்கே பிரச்சனை என்னவென்றால் ஒருவர் என்ன போதிக்கிறார் என்பதல்ல. மாறாக ஒருவர் எதைப் போதிக்கத் தவறுகிறார் என்பது தான்; அது தான் ஒருவரை குற்றவாளியென்றும் குற்றமற்றவர் என்றும் தீர்ப்பளிக்கும். ✝

---

***நாம் தேவனுடையவர்களானால் ஒழுக்க நெறிகளும், நற்பண்புகளும் நம்மால் தீர்மானிக்கப்படுவதில்லை. அவைகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளே நம் வாழ்க்கையை ஆளுகின்றன.***

# பெருகும் கிருபை
# GRACE ABOUNDING

*Bobby Dockery*



**கி**ருபை நம்ப முடியாத ஒன்றாக இருக்கிறது.... ஆனால் அது உண்மையாயிருக்கிறது! மனிதன் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்து பாவத்தினால் தன்னைத் தரம் தாழ்த்திக் கொண்ட பிறகு கூட, தேவன் மனித இனத்திடம் அன்பு கூர்ந்தார். எனவே, மனிதனுடைய மீட்புக்காக ஒரு திட்டத்தைத் தீட்டும் பணியில் தம்மை ஈடுபடுத்தினார் **(யோவான் 3:16)**. மனித மீட்புக்காகத் தேவனே காரியத்தை முன்னெடுத்துச் செய்தார்.

**அந்த வார்த்தை மாம்சமாகி அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லோரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம் (யோவான் 1:14,16).** ரோமர் 5:17- ல் அப்போஸ்தலனாகிய பவுல் **கிருபையின் பரிபூரணத்தைப்** பற்றிப் பேசுகிறார். இதே அதிகாரத்தில் பவுல் கிருபை என்னும் வார்த்தையைப் பெருக்கம் என்னும் வார்த்தையோடு தொடர்புபடுத்திப் பேசுகிறார் [வசனங்கள் 15:20] இங்கே கிருபைக்கு குறைவே இல்லை.

கிருபை பற்றி பேசும்போது, மத உலகம் ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை. ஒரு பக்கம் **சம்பாதித்த கிருபை** என்னும் கருத்தை ஒரு சாரார் முன் வைக்கிறார்கள். அதாவது, தகுதி இல்லாத ஒன்றுக்கு தாம் தகுதியடைகிறோம் என்பதை தேவனுக்கு ஏதாவது ரீதியில் நாம் நிரூபிக்க வேண்டும். இந்தத் தகுதியம்சத்திற்கு உட்படுத்தியவர்கள் தான் கிருபையை சம்பாதிக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

மற்றொரு பக்கம் **சுலப கிருபை** என்னும் கொள்கையை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இது, நாம் பாவத்தை பற்றியெல்லாம் கவலைபட வேண்டியதில்லை, உங்கள் பலவீனங்களைக் குறித்தும் அலட்டிக் கொள்ளவேண்டாம். எல்லாவற்றையும் கிருபை பார்த்துக் கொள்ளும். ஆனால், கிருபை பாவம் ஒரு பொருட்டல்ல என்று ஒரு போதும் சொன்னதில்லை! இன்னும் சொல்லப்போனால் பாவம் பயங்கரமானது. நம்முடைய பாவத்திற்காக இயேசு கிறிஸ்து மரித்து அதன் பிடியிலிருந்து விடுபட ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறார் என்று தான் சொல்கிறது. கிருபை பற்றி வேதாகமம் சொல்லும் காரியங்களை நாம் நினைவுப்படுத்திக் கொள்வது நம் அனைவருக்கும் நன்மையானதாக இருக்கும்.

**1. நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்**

**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்** [எபேசியர் 2:4,9]. மனிதன் இழந்து போனவனாக, நம்பிக்கை இல்லாதவனாக, தேவனில்லாதவனாக இவ்வுலகத்தில் இருந்தான். மனிதன் தனக்குத்தானே உதவி செய்ய திராணியில்லாதவனாக இருந்தான். ரோமர் 5:6 அன்றியும் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் என்று தெளிவுபடுத்துகிறது. அந்நேரத்தில் தேவன் நமக்காக காரியங்களை முன்னின்று செய்தார். கிருபை என்பது பாவத்திற்கு எந்த விலையும் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்று பொருள்படாது. மாறாக, அதன் பொருள், என் பாவத்திற்காகச் செலுத்த வேண்டிய தொகையை நான் செலுத்தத் தேவையில்லை, இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மரித்து அந்தக் கிரயத்தை எனக்காக செலுத்தினார் என்பதாயிருக்கிறது.

**2. நாம் கிருபையினால் படிப்பிக்கப்படுகிறோம்**

கிருபை நமக்குக் போதிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தீத்து 2:11-13 வசனங்களில் **ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது** என்று சொல்கிறார். கிருபை நாம் தவறான அநீதியான காரியங்களைச் செய்ய கூடாதென்றும், நல்ல நீதியான,

காரியங்களையே செய்யவேண்டுமென்றும் நமக்குப் போதிக்கிறது. மேலும், கிருபை, பாவத்திற்கு மரித்த நாம் ஒரு போதும் பாவத்தில் வாழ முடியாதென்றும் நமக்குப்போதிக்கிறது ( ரோமர் 6:2).

**3. நாம் கிருபையினிடத்தில் சரணஅடைந்திடவேண்டும்:**

மத உலகில் அநேகர் போதிப்பது போல தேவனுடைய கிருபை நிபந்தனையில்லாததல்ல. இரட்சிப்பு என்னும் ஈவு இலவசமாக வழங்கப்படுகிறது. ஆனால், தேவன் கட்டளையிட்டிருக்கிறபடி அதை ஏற்றுக்கொள்வது நமக்கு அவசியமாயிருக்கிறது. தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்து போவது சாத்தியமே. எல்லோரும் இரட்சிக்கப்படமாட்டார்கள். ஏனென்றால், எல்லோரும் தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தேவனுடைய கிருபைக்கு கைம்மாறாக மனிதன் செய்ய வேண்டியதெல்லாம் அதற்கு சரணடைந்து வாழ்வது தான்; தேவனுடைய மாபெரும் கிருபைக்கு நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் வாழ வேண்டும்( எபிரெயர் 5:8,9). ரோமர் 6:1-4 வசனங்களில் பவுல், ஞானஸ்நான செயலின் போது தான், மனிதனுடைய கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் தேவனுடைய கிருபையினிடத்தில் சரண் ஆகிறது என்பதை நிரூபிக்கிறார்! இது கிரியைகளினாலான இரட்சிப்பல்ல. ஞானஸ்நானம் மாத்திரமே இரட்சிப்பை சம்பாதித்துத் தருவதில்லை. ஞானஸ்நானம் என்பது தேவனுடைய கிருபையும், மனிதனுடைய கீழ்ப்படிதலுள்ள விசுவாசமும் சந்திக்கும் ஓர் இடம் தான்! ஆனால், அந்த சந்திப்பும், கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான அடக்கம் பண்ணப்படுவதும் இல்லையென்றால் இரட்சிப்பே இருக்க முடியாது. ஆகவே, நாம் தேவனுடைய கிருபையை, அதற்கு சரண் ஆவதன் மூலமாக ஏற்றுக்கொள்கிறோம்.

தேவனுடைய கிருபை ஆச்சரியமான கிருபை. அதை நாம் பெற்றுக்கொள்வதற்கு கொடுத்து வைத்தவர்கள் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய கிருபையைக் குறித்து நாம் சத்தமாகப் பேச வேண்டும். அதைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும்! எல்லாவற்றிற்கும் மேலாக அதனிடத்தில் நாம் சரணடைய வேண்டும்! விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன் (வெளி 22:17). என்ற தேவனுடைய கிருபைக்கு எப்பொழுதும் நாம் அர்ப்பணிப்புள்ளவர்களாக வாழ தேவன் கிருபை செய்வார்! ✝

# நான் ஏன் விசுவாசிக்க வேண்டும்?
# Why Should I Believe?

*Kevin L.Moore*



**நான் ஏன் தேவனை விசுவாசிக்க வேண்டும்?**

தேவனை உண்மையாகத் தேடும் எல்லோரும் அவரைக் கண்டுபிடிக்க முடியும் [**அப்போஸ்தலர் 17:27**]. மேலும், தேவனுடைய உண்மைத் தன்மையை உறுதிசெய்ய ஒருவர் எத்தகைய தத்துவஞான வாக்குவாதத்திற்கும் தர்க்க ரீதியான விவாதங்களுக்கும் சவால் விடலாம். ஏனென்றால், வேதாகமம் எல்லா விவாதத்திற்கும் மேலான வல்லமை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. **எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும் எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன் (எபிரெயர் 3:4),** இவ்வசனம் மிக சுலபமான ஒன்றாகத் தெரியும். இருந்தாலும் இது ஆழமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. இவ்வுலகத்தில் நான் இருக்கிறேன். நீங்கள் இருக்கிறீர்கள் இவ்வுலகமும் இருக்கிறது. அப்படியென்றால், இவைகளெல்லாம் எங்கே இருக்கிறது? எங்கே இருந்து வந்தது? சிருஷ்டிகர் இந்த அண்டசராசரங்களையும் உருவாக்கினார் என்பதற்கு ஆதாரமாக இருக்கும் ஒரே உபதேசம் தான் இவ்வசனம் இந்த எளிய உண்மையை ஏற்றுக்கொள்வது நியாயமானதாயிருக்கும்.

### நான் ஏன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும்

உலக வரலாறு, இயேசு கிறிஸ்து என்னும் வரலாற்று நாயகனை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி, அவருடைய குணாதிசயங்களைப் பற்றி மிக விரிவான விளக்கத்தை கொடுத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட ரீதியில் கவனித்து, அறிந்த சிலரால் கொடுக்கப்பட்டுள்ள சாட்சியங்களை ஜாக்கிரதையாக ஆராய்ந்து பார்த்தால் நியாயமாக ஒரே ஒரு முடிவுக்குத் தான் வர முடியும்; இயேசு கிறிஸ்து தம்மை யார் என்று சொன்னாரோ? மற்றவர்கள் அவரை யார் என்று சொன்னார்களோ? அப்படியாகத்தான் அவர், தேவனுடைய குமாரனாக இருக்கிறார் [1பேதுரு 1:16-21] மேலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு மார்க்க அமைப்பைத் தோற்றுவித்தார். அம்மார்க்க அமைப்பு இவ்வுலகில் தாக்குபிடித்தது மாத்திரமல்ல கற்பனை செய்து பார்க்க முடியாத பல விதமான இன்னல்களையும், பாடுகளையும் கடந்து செழித்தோங்குகிறது. மேலும், இந்த மார்க்கம் மனித வரலாற்றிலும், எண்ணற்ற தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையிலும் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. [யோவான் 20:30,31] இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

### நான் ஏன் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்க வேண்டும்

உணர்வுகள் அல்லது தனிப்பட்ட அனுபவங்களையும் தாண்டி கணிசமான காரியங்கள் பரிசுத்த ஆவியானவரின் உண்மைத் தன்மையை உறுதி செய்கின்றன. வேதாகம் இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறது [எபேசியர் 6:17]. வேதாகமத்தின் எழுத்தாளர்களை வழிநடத்தி, இதுவரை யாரும் வெளியிட்டிராத குறிப்பிடத்தக்க ஆச்சரியமான புத்தகத்தை உருவாக்கின பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை வெளிப்படுத்துகிறார் (I கொரி.2:10) பரிசுத்தமாக்குகிறார். [II தெச 2:13] ஆறுதல்படுத்துகிறார் [அப் 9:31] பலப்படுத்துகிறார் [ரோமர் 15:13] நடத்துகிறார் [கலா. 5:18] இரட்சிக்கிறார் [தீத்து 3:5] இவைகளெல்லாம் தேவனுடைய வார்த்தைகளினாலே நிறைவேற்றப்பட்டன. ஏனென்றால், தேவனுடைய வார்த்தை சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

[IIதீமோ 3:15–17]; பரிசுத்தமாக்குகிறது[யோவான் 17:17] ஆறுதல்படுத்துகிறது [ரோமர் 15:4]; பெலப்படுத்துகிறது [ரோமர் 1:16]; வழிநடத்துகிறது [சங்கீதம் 43:3]; இரட்சிக்கிறது [யாக்கோபு 1:21] இவைகளையெல்லாம் வைத்துப் பார்த்தால் வேதாகமம் சாதாரண புத்தகமல்ல, பரிசுத்த ஆவியானவர் அதற்கு ஜீவனையும், வல்லமையையும் கொடுத்திருக்கிறார் [Iதெச. 2:13].

**நான் ஏன் வேதாகமத்தை விசுவாசிக்க வேண்டும்?**

வேதாகமம் ஒருக்காலும் சம்பந்தமில்லாத சம்பவங்களை தொகுத்து வைத்திருக்கும் பழமையான புத்தகமல்ல. தேவனுடைய வார்த்தை ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக இருந்து ஒருவனுடைய ஆத்துமாவின் ஆழங்களில் ஊடுருவுகிறது [எபிரெயர் 4:12]. வேதாகமம் பல நூற்றாண்டுகளாக பலருடைய வாழ்க்கையை மாற்றி சமுதாயத்தைச் சீர்படுத்தி வருகிறது. வேதாகமம் எழுதப்பட்ட போது அதன் செய்தி எப்படி சத்தியமுடையதாக, வல்லமையானதாக இருந்ததோ இன்றும் அப்படியே இருக்கிறது.

---

**சாத்தானால் செய்ய முடியாத ஆறு காரியங்கள்**

- தேவனுடைய அன்பின் வல்லமையைக் குறைக்க முடியாது
- தேவனுடைய ராஜ்யத்தின் விதையை அழிக்க முடியாது
- வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைத் தோற்கடிக்க முடியாது
- நம்மை தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய நிர்ப்பந்திக்க முடியாது
- தேவனுடைய கரத்திலிருந்து நம்மை விலக்க முடியாது
- தேவனுடைய பண்புகளை மாற்ற முடியாது.

வாழ்வதற்கான உபதேசம்

# ஒரே அமர்வில் வேத பாட வகுப்பு

# *A Bible Study In One Session*

*Paul Holland*



சமீபத்தில் ஒரு சகோதரன் ஒரே அமர்வில் வேத பாட வகுப்பு நடத்துவதெப்படி என்பதை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். அந்த சகோரதனும் அவருடைய மனைவியும் புற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணத்தருவாயில் இருந்த ஒரு பெண்ணுக்கு வேதபாட வகுப்பு ஒரே அமர்வில் நடந்த வேண்டுமென்று ஆசைப்பட்டு என்னிடம் ஆலோசனை கேட்டார்கள். அதிலும் குறிப்பாக தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிய வேத பாட வகுப்பு நடத்துவதெப்படி என்று ஆலோசனை கேட்டார்கள். எங்கே தொடங்க வேண்டும்? என்ன வசனப் பகுதியை வாசிக்க வேண்டும்? என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கான பதில் வித்தியாசமான வசனப்பகுதிகளைக் கொண்ட பல வேதாகமப் புத்தகங்கள் இருந்தாலும் கூட நான் ரோமர் புத்தகத்தை சிபாரிசு செய்தேன்.

ரோமர் 1:16 – கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. சுவிசேஷம் என்னும் வார்த்தையின் பொருள் நற்செய்தி என்பதாகும். முதலில் துர்ச்செய்தி எது? ரோமர் 3:10–23. அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை;

உணர்வுள்ளவன் இல்லை. தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள். அவர்களுடைய உதடுகளில் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது; அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது; அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துவதற்குத் தீவிரிக்கிறது; நாசமும், நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது; சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வ பயமில்லை என்று எழுதியிருக்கிறதே. மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப் பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுதில்லை. இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப் பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களும் சாட்சியாயிருக்கிறது. அது இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இது தான் துர்ச்செய்தி.

ரோமர் 4;15 அப்படியானால் நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்? ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மை பாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை. வேதவாக்கியம் என்ன சொல்கிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது. கிரியை செய்கிறவனுக்கு வருகிறகூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென் றெண்ணப்படும். ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்கு கிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். நம்முடைய கிரியைகளினாலே நாம் பரலோகம் செல்ல முடியாது. நம்முடைய விசுவாசத்தினாலும், தேவனுடைய கிருபையினாலும் தான் அது சாத்தியம், அதனால் நாம் எதை விசுவாசிக்க வேண்டும்?

ரோமர் 5:6-10 அன்றியும் நாம் பெலனற்றகளாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. **கிறிஸ்துவின் மரணத்தினால் நாம் நன்மை பெற தேவன் சத்தியத்தை உண்டாக்கியிருக்கிறார்.**

ரோமர் 6:37 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.

இதிலிருந்து எட்டாம் அதிகாரத்திற்கு கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதினால் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டுநம் கரங்களிலுள்ள வேதாகமத்தைத் திருப்பினால், அவருடைய உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்பட்டிருக்கிற ஒருவருக்கு கிடைக்கும் அருமையான ஆசீர்வாதங்களை வாசிக்கலாம். ✞

## நீங்கள் வசனரீதியான ஞானஸ்நானம் பெற்றிருந்தால்

- ***உங்களுக்குப் பாவமன்னிப்புஉண்டு(அப்போஸ்தலர்2:38)***
- ***நீங்கள்தண்ணீரினால் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறீர்கள்(எபே.5:26)***
- ***நீங்கள்கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள்(ரோமர்:3:27)***
- ***நீங்கள்புதுசிருஷ்டியாயிருக்கிறீர்கள்(IIகொரி5:17)***
- ***நீங்கள்கிறிஸ்துவைத்தரித்துக்கொண்டிருக்கிறீர்கள்(கலா.3:27)***

# எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு

# All Things Are Lowful

*Hugo McCord*

**அ**ப்போஸ்தலனாகிய பவுல், **எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும், எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்** என்று I கொரி.6:12–ல் சொல்வதை வைத்து ஒரு கேள்வி எழுகிறது. இதே விதமாக பவுல் எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது என்று I கொரி.10:23 ல் செல்லுகிறார்.

மேற்சொல்லப்பட்ட வசனங்களில் இடம்பெற்றுள்ள எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு என்பதில் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொள்ளும் விபச்சாரமும் உள்ளடக்கம் [I கொரி. 5:1] ஆனால், பவுல் **அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்** என்று கடிந்து கொள்வதினால், விபச்சாரம் **எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு** என்னும் பவுலின் பட்டியலில் இல்லை. அதேபோல், சகோதரனோடே வழக்காடுவதும் எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு என்பதும் பவுலின் பட்டியலில் இல்லை. தொடர்ந்து பவுல் எழுதும் போது, நீங்கள் ஒருவரையொருவர் வழக்காடுகிறது, எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது என்று எழுதுகிறார் [II கொரி 6:7]

எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு என்று பவுல் சொல்வதன் பின்னனி ஆகாரம் புசிப்பதாகும். வேறு விதமாகச் சொன்னால் எல்லா ஆகாரத்தையும் புசிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது.. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் நான் ஒன்றிக்கும் அடிமைப்படமாட்டேன் என்று பவுல் சொல்கிறார். இரண்டு வகையான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். **ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான்: பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான்** [ரோமர் 14:2].

ரோமர் 14:3-4 புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாய்; தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே: மற்றொருவனுடைய வேலைக் காரனை குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக் கிறாரே.

ரோமர் 14:6 நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறான் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் சொலுத்துகிறான்.

ரோமர் 14:7-8 நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்திருத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால், பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

I கொரிந்தியர் 10:23,29 எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது. ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன். கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. அன்றியும் அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, போக உங்களுக்கு மனதிருந்தால், மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியமல், உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள். ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினி மித்தமும் புசியாதிருங்கள், பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. உன்னுடைய மனச்சாட்சியை குறித்து நான் இப்படிச் சொல்லாமல்.

மற்றொருவனுடைய மனசாட்சியைக் குறித்தே சொல்லுகிறேன். என் சுயாதீனம், மற்றொருவனுடைய மனசாட்சியினாலே குற்றமாய் எண்ணப்படவேண்டுவதென்ன? நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும் தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.

அடுத்ததாக, எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு என்று அப்போஸ்தலனாகிய பவுல் நாட்கள் சம்மந்தமாகச் சொல்கிறார். அதாவது, விசேஷித்த நாட்கள், சாதாரண நாட்கள் என இவ்விரு வகையான நாட்களைப் பற்றியும் சொல்கிறார்.

ரோமர் 14:5,6 அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன் தன் மனதிலே, முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்: நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான். புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்.

ரோமர் 14:10-13 இப்படியிருக்க, நீ உன் சகோதரனை குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். இப்படியிருக்க நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

# மனிதனின் தேவைகள்

# MAN`S NEEDS

*Perry N. Hall*

தேவன் உண்டாக்கிய எல்லாமே அவசியமானவைகள் தான், அவர் உணவு, காற்று மற்றும் தண்ணீரை உண்டாக்கியிருக்கிறார். மனிதனுக்கு இவைகளெல்லாம் அவசியமானவைகள் தான். இவைகளில்லாமல் நாம் வாழ முடியாது. இவைகளில் ஒன்றைக்கூட அவசியமில்லை என்று யாரும் சொல்வதில்லை. உணவு, காற்று மற்றும் தண்ணீரை விட்டு நாம் விலகியிருக்க வேண்டும் என்று யாரும் தம்மை வற்புறுத்துவதை நாம் விரும்புவதில்லை. ஏனென்றால், இவைகளில்லாமல் நாம் வாழ முடியாதென்பதை அறிந்திருக்கிறோம்.

இயேசு கிறிஸ்து **மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்** என்று எழுதியிருக்கிறதே என்று சொன்னார் (மத் 4:4) ஆம், தேவன் மனிதனுக்கு வேதாகமத்தை கொடுத்தார். ஏனென்றால், அது மனிதனுக்கு எப்படி உணவு, தண்ணீர் காற்று, போன்றவைகள் அவசியமோ அதே போல் அவசியமாயிருக்கிறது. மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து இரட்சித்து அவனுக்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்கும் ஒரே புத்தகம் வேதாகமம் தான். யாக்கோபு 1:21, IபேதுருI:22,25) அந்நிய தேவர்களை தொழுது கொண்ட உலகம் அதன் அறிவில் தேவனைத் தக்க வைத்துக் கொள்ளாதபடியால் எல்லாவிதமான துன்மார்க்கமான காரியங்களுக்குள்ளும் விழுந்தது (ரோமர் 1:18-32) எல்லா காலக்கட்டத்திலும் தேவனை மறந்த ஜனங்கள் தண்டனைக்குத் தப்பியதே இல்லை, தேவனை மறுக்கிற எல்லோருக்கும் ஆக்கினை காத்திருக்கிறது, மனித இனத்தை நித்திய சமாதானம் என்றும், அழியா துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லும் அணையா விளக்காக வேதாகமம் திகழ்கிறது. அது மாத்திரமல்ல, மெய் விசுவாசமுடையே கண்களுக்கு இவ்விளக்கு ஒரு போதும் மங்கா விளக்காகத் திகழ்கிறது (எபேசியர் 1:18 -23). ✝

செயலில் கிறிஸ்தவம்

# அப்பிரயோஜனமான ஊழியக்காரர்?

# Worthless Servants?

Bonnie Rushmore



அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே. பின்பு அவர் அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம்பேரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றி லிருந்தும், தீருசீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்தி லிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள். [லூக்கா 6:1217].

இயேசு கிறிஸ்துவால் தம்முடைய அப்போஸ்தலர்களாக நியமிக்கப்பட்ட இந்த மனிதர்கள் யார்? இவர்கள் பாலஸ் தீனத்திலிருந்த கலிலேயானவச் சேர்ந்தவர்கள். இவர்கள் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும், கல்லாதவர்களாகவும், ஒன்று மறியாதவர்களாகவும் பலரால் கருதப்பட்டார்கள். யூதாவிலுள்ள யூதர்கள் இவர்களை மிகவும் தரக்குறைவாகப் பார்த்தார்கள் (அப்போஸ்தலர் 2:7) மத்தேயு ஓர் ஆயக்காரனாக இருந்தார்.

பரிசேயர்கள் ஆயக்காரரை பாவிகளோடு சேர்த்து தான் பார்த்தார்கள் (மத்தேயு 9:9-10). செலோத்தே என்னப்பட்ட சீமோன் தற்கால தீவிரவாதிக்கு சமமானவன். பேதுருவைப் பற்றிக் சொல்ல வேண்டிய தில்லை. யோசனையின்றி, பின்விளைவுகள் பற்றிக் கவலைப்படாமல் துடிப்புடன் பேசுகிறவர்! பலர் அவரை முந்திரிக் கொட்டை என்று கூட அழைப்பதுண்டு. யாக்கோபும் யோவானும், பொறுமை இல்லாதவர்கள் (மாற்கு9:38,39) பழிவாங்கும் குணமுடையவர்கள் (லூக்கா 9:51-55) இயேசு கிறிஸ்து இந்த சகோதரர்களை இடி முழுக்க மக்களென்று அழைத்தார் (மாற்கு 3:17) மற்றவர்கள் மீது இவர்களுக்கிருந்த மனநிலையின் காரணமாக கிறிஸ்து இவர்களை இவ்விதமாக அழைத்தார்.

சவுல் தன்னுடைய கிரேக்கப் பெயரான பவுல் என்ற பெயரால் நம்மால் நன்றாக அறியப்படுகிறார். இவர் பல கிறிஸ்தவர்களுடைய மரணத்திற்கும், சிறைவாசத்திற்கும் காரணமாயிருந்தவர். ஆனால் இவர் அப்போஸ்தலனான பின்பு, மற்ற அப்போஸ்தலனாகிய யோவானைத் தவிர மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மீது தங்களுக்கிருந்த விசு வாசத்தின் காரணமாக கொல்லப்பட்டார்கள். அதேநேரத்தில், யோவான் தன்னுடைய விசுவாசத்திற்காக பத்மு என்னும் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிராத இந்த மனிதர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களா? இல்லை. இயேசு கிறிஸ்து இந்த மனிதர்களை தம்முடைய விசேஷித்த உதவிக்காரர்களாகச் சேர்த்துக்கொண்டார் (லூக்கா 9:1,2) **அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதி யுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரம் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும் பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.**

சிலர் தங்கள் வாழ்க்கை இயேசு கிறிஸ்துவின் விருப்பத்திற்கு வெகு தூரமாயிருக்கிறபடியால் சுவிசேஷத்தின் இரட்சிக்கும் வல்லமையை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். இந்த அப்போஸ்தலர்களைப் பாருங்கள். கிறிஸ்து அவர்கள் எப்படி வாழவேண்டுமென்று விரும்பினாரோ அவ்விருப்பத்திற்கு வெகு தூரத்தில் இருந்தார்கள். இருந்த போதிலும் கூட கிறிஸ்து **என் பின்னே வாருங்கள்** என்று அழைத்த மாத்திரத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருக்குப் பின் சென்றார்கள். நாம் எவ்வளவு மோசமானவர்களாக எவ்வளவு அபாத்திரராக இருந்தாலும் கூட நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும் போது அவர் விரும்பும் பாத்திரராக மாறிவிடுவோம்.

சில கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்த வரை கர்த்தருக்கு ஊழியம் செய்வதில்லை. அவர்கள் கல்வி அறிவில்லாதவர்களென்றும், தகுதியில்லாதவர்களென்றும் நினைக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் பவுலைத் தவிர மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் கல்லாதவர்கள் தான். அவர்கள் யூதேயாவிலுள்ள யூதர்களால் தாழ்வாகப் பார்க்கப்பட்டவர்கள் தான்.

எது உங்களை தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் ஊழியம் செய்வதற்கும் தடையாக இருக்கிறது? வேத வாக்கியங்களைக் கேட்பதினாலும், தியானித்ததினாலும் அப்போஸ்தலர்கள் விசுவாசத்திலும், அறிவிலும் வளர்ந்தார்கள். அதுபோல, நாமும் வளர முடியும். நாம் அப்படி வளரும் போது தேவனுக்கென்று மிகச் சிறந்த ஊழியக்காரர்களாக மாறமுடியும். அப்போஸ்தலர்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய தங்கள் கடந்த காலம் ஒரு தடையாக இருக்க அனுமதிக்கவில்லை. நாமும் அப்படி அனுமதிக்கக்கூடாது. ✞


---

***சபை என்பது மதகுருக்குள் சடங்காச்சாரங்களை நிறைவேற்றவும், அதை ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதற்குமான ஓர் இடமல்ல. தேவனுடைய வார்த்தையை தைரியமாக, கூட்டாக அறிவிக்கக்கூடிய துடிப்புள்ள, அர்ப்பணிப்புள்ள விசுவாசிகள் கூடும் இடந்தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.***

# எதிர்பார்ப்பை விட அதிகமாகச் செய்தல்
# Going The Extra Mile

*Dale Grissom*

சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத அல்லது கிறிஸ்தவனாக இருந்து உண்மையாக வாழாத உங்களுக்குப் பிரியமானவர்களை நீங்கள் எப்போதாவது இழந்ததுண்டா? இத்தகைய இழப்பு அவர்களின் மரணத்தைவிட தாங்கொண்ணா துயரத்தை நமக்குத் தருகிறது. ஏனென்றால், அவர்களுக்கு தேவனோடு எப்படி சுமூகமான உறவு இருக்க வேண்டுமோ அப்படி இருக்கவில்லை. அதிலும் குறிப்பாக நம்முடைய பங்கில் எந்த முயற்சியும் எடுக்கப்படாமல், அவர்களுடைய வாழ்க்கையில் பெரிய வித்தியாசத்தை நாம் ஏற்படுத்த தவறும்போது அது இன்னும் அதிக துக்கத்தை நமக்கு ஏற்படுத்துகிறது.



நம்மைச் சுற்றிலுமுள்ள ஜனங்கள் சுவிசேஷ பஞ்சத்தால் பரிதபிக்கிறார்கள். பலர் யாராவது தங்களிடம் வந்து தங்கள் ஆத்துமாக்களைக் குறித்து பேசமாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் யாரோ ஒருவர் திரும்பி நம்மை பார்த்து நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி எங்களிடம் எதுவுமே சொல்லவில்லையே என்று சொன்னால் அது எவ்வளவு பரிதாபகரமாக இருக்கும்!

நாம் ஜனங்களிடம் அவர்களுடைய ஆத்துமாக்கள் பற்றி பேச நமக்கு நிறைய வாய்ப்புண்டு. பல நேரங்களில் நாம் சுவிசேஷத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள பயப்படுகிறோம். அவர்களிடம் எதைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று நமக்குத் தெரிவதில்லை. நாம் தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது, நிராகரிக்கப்படுவோமோ? என்கிற பயம் நம் இரட்சிப்பின் செய்தியின் பாதையில் வராதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்! இது ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிற காரியமாக இருக்கிறபடியால் இக்காரியத்தை நாம் கண்ணும் கருத்துமாக செய்ய வேண்டும். இல்லை நாம் இதற்கு அதிக விலை கொடுக்க வேண்டிவரும்.

நாங்கள் மிகவும் பரபரப்பாக இருக்கிறோம், எங்களுக்குப் பயமாக இருக்கிறது அல்லது இந்த வேலையை செய்வதற்கு சபையில் ஊழியக்காரருக்கு உதவி கொடுத்து வருகிறோம் என்று நம் இயலாமைக்கு பல சாக்கு போக்குகளை சொல்வது சுலபமானது.

எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உலகமெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:19-20). முயற்சிகளை எடுக்கும் அளவுக்கு நாம் ஆத்துமாக்கள் மீது அக்கறைப்படுகிறோமா? எதிர்பார்ப்பை விட அதிகமாகச் செய்ய நாம் தீர்மானிப்போம். ✝

## சுவிசேஷம் என்பது என்ன?

நீங்கள் செய்யும் செயல்களாலும்

நீங்கள் பேசும் வார்த்தைகளாலும்

ஒவ்வொரு நாளும் சுவிசேஷப் புத்தகத்தின் ஓர் அதிகாரத்தை

நீங்கள் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்

மனிதர்கள் அவைகள் உண்மையா அல்லது உண்மையற்றவையா

என்பதைத் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உங்களைப் பொறுத்தவரை எது சுவிசேஷம்? சொல்லுங்கள்.

# பிரதான கட்டளை - யாருக்குக் கொடுக்கப்பட்டது?

## The Great Commission - Given To Whom?

*Bill Keele*

சபையில் சிலர் பிராதனை கட்டளை இன்று வாழும் நமக்குக் கொடுக்கப்படவில்லை என்று நினைப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது! அவர்களுடைய எண்ணம், இயேசு கிறிஸ்து பதினொரு சீஷர்களிடம் பேசிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது (மத்தேயு 28:10). இன்றும் சபையில் சிலர், பிரதான கட்டளை தலைமைத்துவ பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் ஆரம்பத்தில் பிரதான கட்டளை சபையின் தலைமைத் துவத்தை அடையாளப்படுத்தியது பதினொரு சீஷர்கள் தான் என்கிற உண்மையை ஆதாரமாக்கிக் கொண்டது தான். இவ்வகையான அணுகுமுறை வெளிநாடு சென்று ஊழியம் செய்பவர்கள் மற்றும் பிராந்திய சபையில் ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு உதவ ஊக்கமளிக்கும்.

இன்னும் சபையில் சிலர் பிரதான கட்டளை எல்லோருக்கு மானது தான். ஆனால், இது முன் மாதிரியான வாழ்க்கை மூலமாக நிறைவேற்றப்படுகிறது என்று நம்புகிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தில் வைத்துப் பார்த்தால், முன்மாதிரியான வாழ்க்கை முறையைத் தாண்டி ஆத்தும ஆதாயத்தில் கிறிஸ்தவர்கள் ஈடுபட வேண்டிய அவசியமில்லை என்கிற நிலை ஏற்பட்டுவிடுகிறது. யாராவது ஒருவர் அதிகமாகச் செய்ய விரும்பினால், அது அவரவர் விருப்பத்திற்கு உட்பட்டது தான், அது கட்டாயமல்ல என்கிற நிலை ஏற்பட்டுவிடுகிறது. இவ்வகையான அணுகுமுறை ஆத்தும ஆதாய செயல்பாடுகளை ஊக்கப்படுத்தினாலும் கூட முன் மாதிரியான ஜீவியத்திற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

இன்றும் சபையில் சிலர் பிரதான கட்டளை சபைக்கு தான் கொடுக்கப்பட்டது சபை ஆத்தும ஆதாயப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று நினைக்கிறார்கள். இது சபையில் சிலர் ஆத்தும ஆதாயத்தில் ஈடுபடும் போது எல்லா அங்கத்தினர்களிடமும் நல் மனசாட்சியைக் கொண்டிருக்கவேண்டுமென்று ஒரு ஆவலைத் தூண்டுகிறது.

இன்றும் சபையில் சிலர் பிராதன கட்டளை சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு அங்கத்தினருக்குத் தான் என்று நினைக்கிறார்கள். அதாவது சபையிலுள்ள ஒவ்வொருவரும் ஆத்தும ஆதாயத்தில் ஈடுபாட்டால் நானும் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற எண்ணம். வேறு விதமாகச் சொன்னால் பிரசங்கியாரும் மூப்பரும், ஆத்தமாக்களை ஆயத்தப்படுத்தவில்லையென்றால், நானும் ஆயத்தப்படுத்தமாட்டேன் என்னும் நிலைப்பாடு. இவ்விதமாக பிரசங்கியார் மூப்பர்களை குற்றஞ்சாட்டுகிறார். மூப்பர்கள் பிரசங்கி யாரை குற்றஞ்சாட்டுகிறார். சபையில் பொறுப்புகளில் இருப்பவர்கள் அங்கத்தினர்களைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அங்கத்தினர் பொறுப்புகளில் இருப்பவர்களை குற்றஞ்சாட்டுகிறார்கள் இதினிமித்தம் யாருமே பொறுப்புகளை ஏற்பதில்லை.

இன்றும் சபையில் சிலர் பிரதான கட்டளை சபையில் அங்கம் வகிக்கும் எல்லா அங்கத்தினர்களும் ஆத்தும ஆதாயத்தில் ஈடுபடாவிட்டாலும் கூட நான் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வேன். இது ஓர் ஆக்கப்பூர்வமான அணுகுமுறையாகும். இப்படி நினைப்பவர்கள் ஆத்தும ஆதாயப் பணியில் சபை ஒட்டுமொத்தமாக ஈடுபட வேண்டுமென்று நினைக்கிறார்கள். இது இவர்களுடைய தனிப்பட்ட பொறுப்பிலிருந்து இவர்களை விடுக்கவில்லை. சபையில் யார் ஆத்தும ஆதாயம் செய்தாலும் செய்யாவிட்டாலும் நான் செய்வேன் என்னும் எண்ணம் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கு வேறுசில பொறுப்புகள் இருப்பதை உணர்த்தியிருக்கிறார்கள். இருந்த போதிலும் அவர்களுடைய ஆத்தும ஆதாய ஆர்வம் அவர்களை விட்டு அகன்று போகவில்லை.

சகோதரனே, சகோதரியே.......நாம் எங்கே இருக்கிறோம்..? ✝


**தீர்மானியுங்கள்**

**நம் பரலோகத்தின் தேவன், பிசாசு நம்மைச் சோதிப்பதற்கு அனுமதி கொடுக்கிறார். தேவன் நமக்கு சோதனையை அனுமதிப்பதற்கான நோக்கம், சோதனையின் மூலமாக நாம் பெலப்பட வேண்டுமெனன்பதாகும். ஆனால், பிசாசின் நோக்கம் நாம் தேவனிடமிருந்து வழிவிலகிச் செல்ல வேண்டுமென்பதாகும். விளைவு எப்படியிருக்க வேண்டுமென்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.**

# ஆத்தும அளவீடு

இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டவரும், ஜாதியரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி: உண்மையுள்ள கர்த்தர் நிமித்தமும் உம்மை தெரிந்துகொண்ட இஸ்ரவேலின் பரிசுத்தர் நிமித்தமும், ராஜாக்கள் கண்டு எழுந்திருந்து, பிரபுக்கள் பணிந்து கொள்வார்கள் என்று சொல்லுகிறார். பின்னும் கர்த்தர்: அநுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவி கொடுத்து, இரட்சண்ய நாளிலே உமக்கு உதவி செய்தேன்; நீர் பூமியை சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்குப் பண்ணவும்; கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப் போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்; அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள். சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும். அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும் வெயிலாகிலும் அவர்கள் மேல் படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார். என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த்தப்படும்.

(ஏசாயா 49:7-11)



# கர்த்தருடைய பந்தி
# The Lord's Supper

Dennis Gulledge

ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் கர்த்தருடைய பந்தி என்பது கிறிஸ்தவ ஆராதனையின் மையப்பகுதியாக இருக்கிறது. இது கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை, நினைவுகளை நாம் நினைக்கும் படியான ஒரு ஞாபகார்த்தமான ஆதாரமாகும்.

(லூக்கா 22:19) இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது. கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது. (Iகொரி 10:16) நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் போதெல்லாம் கர்த்தர் இப்பூமிக்கு வருவார் என்று தெரிவிக்கிறோம் (Iகொரிந்தியர் 11:26) தற்போது கர்த்தருடைய பந்தி என்னும் தலைப்பு பல சர்ச்சைகளுக்கு உட்பட்டிருக்கிறது. சிலர் அதைக் கொண்டாட்டம் என்றழைக்கிறார்கள்.

சிலர், நாம் கர்த்தருடைய பந்தி அனுசரிப்பதைக் கொச்சைப் படுத்தி ஒரு கடி ஒரு குடி என்று பரிகாசம் செய்கிறார்கள். சிலர் இது ஞாயிற்றுக்கிழமை மட்டுமல்லாமல் மற்ற நாட்களிலும் அனுசரிக்க வேண்டும். குறிப்பாக திருமணம் மற்றும் மரணத்தின் போதும் அனுசரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு மத அமைப்பு, வீட்டில் முடங்கிக் கிடப்பவர்களுக்கு வசதியாக தொலை பேசியிலேயே கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த நினைவு கூருதல் நிகழ்வை தற்கால தாராளமயக் கொள்கைக்கேற்றவாறு பொருத்திப் பார்ப்பதற்கு நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. அதே நேரத்தில் நாம் வாரந்தோறும் அதில் பங்கேற்கிறோம் என்பதற்காக அதை ஒரு சடங்காச்சாரமாகவும் நினைத்து விடக்கூடாது.

நாம் கர்த்தருடைய பந்தியை வசன ரீதியாக அனுசரிக்கிறோமா? புதிய ஏற்பாட்டில் இது கர்த்தருடைய போஜனம் என்றழைக்கப் படுகிறது. (I கொரிந்தியர் 11:21). Iகொரிந்தியர் 10:21 ல் நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்க கூடாதே என்று சொல்லப்படுகிறது (கொரிந்தியர் 10:16) ல் இரத்தத்தின் ஐக்கியமாகவும், சரீரத்தின் ஐக்கியமாகவும் இருக்கிறது. அப்போஸ்தலர் 2:42லும் 20, 7லும் அப்பம் பிட்குதல் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



கர்த்தருடைய பந்தியின் ஆரம்பத்தை நாம் அறிந்தி ருக்கிறோமா? நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக இப்பந்தியை ஏற்படுத்தினார் [லூக்கா 22:14–20] வேளை வந்தபோது அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்ப தில்லையென்று உங்களுக்குச் சொல்கிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி: நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சைப் பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லை யென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, அவர்களுக்கு கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. என்றார்.] இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் இராப்போஜனத்தில் இடம் பெற வேண்டிய பொருள்களையும் அவற்றிற்கான அர்த்தங்களையும் தெரிவித்தார். மேலும், தம்முடைய நினைவாக அது எப்படி செய்யப்பட வேண்டுமென்று சீஷர்களுக்கு வழிமுறைகளையும் கொடுத்தார்.

பஸ்கா பண்டிகை என்பது தேவன் எகிப்தியரை அதம்பண்ணி இஸ்ரவேல் ஜனங்களை வெளியே கொண்டுவந்ததன் நினைவாக கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும் ( யாத்திரயாகமம் 12:1–30) பஸ்கா ஆட்டுக்குட்டி முதலாம் மாதம் 14 –ஆம் தேதியில் பலியிடப்பட வேண்டும் (வசனம் 4), பஸ்காவும் கர்த்தருடைய பந்தியும் ஒரே பொருளைக் கொண்டது தான்; இரண்டுக்குமே இரத்தஞ் சிந்துதல் அவசியப்பட்டது. யூதர்களிடத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி இருந்தது. நம்முடைய பஸ்காவாக கிறிஸ்து இருக்கிறாரே (1கொரி .5:7) கர்த்தருடைய பந்தி எதற்காக? ஏன் எப்படி அனுசரிக்கிறோம் என்பதை நாம் புரிந்திருக்கிறோமா? புதிய ஏற்பாடு நாம் கர்த்தருடைய பந்தியில் எப்போது பங்கேற்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லுகிறது: **அப்போஸ்தலர் 20:7 வாரத்தின் முதல்நாளிலே அப்பம் பிட்கும்படி சிஷர்கள் கூடிவந்திருக்கையில் பவுல், மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாதித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.**

புதிய ஏற்பாடு, நாம் கர்த்தருடைய பந்தியை எங்கே அனுசரிக்க வேண்டும் என்றும் தெளிவாகச் சொல்கிறது. நாம் கர்த்தருடைய மரணத்தை பரிசுத்தவான்கள் சபையாக கூடி வரும் போது அனுசரிக்க வேண்டுமென்று சொல்கிறது. (*I* கொரிந்தியர் 11:18,26; எபிரெயர் 10:25; அப்போஸ்தலர் 20:7).

மேலும், புதிய ஏற்பாடு, நாம் எதற்காகக் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்க வேண்டுமென்றும் தெளிவாகச் சொல்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்** என்று சொல்லியிருக்கிறார் (லூக்கா 22:19) நினைவு கூருதல் என்பது கடந்த கால நிகழ்வுகளை மறுபடியும் மனதில் கொண்டுவருவதாகும். இந்த இடத்தில் இயேசு கிறிஸ்துவின் கடந்த காலப் பாடுகளை நம்முடைய மனதில் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் போது மறுபடியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்: நாம் பந்தியில் பாத்திரராகப் பங்குபெறுகிறோமா என்று நம்மை நாமே நமக்குள்ளே உள்நோக்கிப் பார்க்க வேண்டும்: கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கும்படி முன்னோக்கிப் பார்க்க வேண்டும்.

ஆராதனை

# இந்தக் கொடுக்கிற காரியத்தில்
## In this matter of giving

Jerry Jenkins

இந்தக் கொடுக்கிற காரியத்தில் நாம் நினைவில் கொள்ள வேண்டிய சில குறிப்பிட்ட விதிமுறைகள் உண்டு.

தேவனை விட அதிகமாக யாராலும் கொடுக்கவே முடியாது. ஒரு மனிதனுக்கு ஒன்பது பிள்ளைகள் இருந்தார்கள். அவரிடம் நீங்கள் எப்படி அத்தனை பேருக்கும் உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளைச் செய்து கொடுக்கிறீர்கள் என்று கேள்வி கேட்கப்பட்டது. நான் என் பிள்ளைகளுக்குப் படி அளிக்கிறேன். ஆனால், அதைவிட அதிகமாகப் எனக்குத் தேவன் படி அளந்து விடுகிறார். என் படியை விட அவருடைய படி மகா பெரியது என்று சொன்னார். நாம் ஆராதிக்கிற தேவன் மிகப் பெரியவர். அவருடைய வளங்களுக்கு எல்லையே இல்லை. அவர் தம்முடைய பிள்ளை களுக்கு நன்மை பயக்கின்ற யாதொன்றையும் விளக்குவதேயில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தாவீது மனித இனத்தின் மீது தேவன் பாராட்டின தயவை எண்ணிப் பரவசமடைகிறார்.

சங்கீதம் 8- எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர். பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர். உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது, மனுசனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடு மாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!!

ஒருவருடைய கொடுத்தல் அவர் தேவனைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைப் பிரதிபலிக்கிறது. நம்முடைய வெகுமதி நம்முடைய உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. சாதாரணமாக நாம் சரீரப்பிரகாரமாக பார்த்தால் கூட நாம் ஒருவரிடம் அதிக அன்புள்ளவர்களாயிருந்தால் அவருக்கு அதிகமாகக் கொடுப்போம். நம்முடைய அன்பு நம் கொடுத்தலில் வெளிப்படுத்தப் படுகிறது [*II* கொரி. 8:24] **ஆதலால் உங்கள் அன்பையும், நாங்கள் உங்களைக் குறித்துச் சொன்ன புகழ்ச்சியையும் சபைகளுக்கு முன்பாக அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்துங்கள்.**

நாம் நினைவில் கொள்ள வேண்டிய மூன்றாவது விதிமுறை தேவன் நாம் எந்த அளவு அவருடைய காரியங்களுக்காக கொடுக்கி றோமோ அந்த அளவு நம்மை சரீரப்பிரகாரமாக ஆசீர்வதிக்கிறார். இன்றைய நாட்களில் பல ஏமாற்றுப் பேர் வழிகள் தொலைக் காட்சிகளில் தோன்றி இவ் வேதாகம போதனையை பலர் மறுக்கும்படி செய்திருப்பது வேதனை அளிக்கிறது. (*II* கொரி.9:6-8] பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன், சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான், அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூர்ணமுடையவர்களையும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லராயிருக்கிறார்.

சகோதரரே, நாம் தேவனுக்காக அவருடைய காரியங்களுக்காக உற்சாகமாக, உதாரத்துவாய்க் கொடுப்போமாக!

---

**கிறிஸ்துவின் பதில்**

**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6)**

✡ **நான் எப்படி இரட்சிக்கப்பட முடியும்?**

**நானே வழி**

✡ **நான் எப்படி நிச்சயித்துக்கொள்ள முடியும்?**

**நானே சத்தியம்**

✡ **நான் எப்படி திருப்தியடைய முடியும்?**

**நானே ஜீவன்**

# பாடுங்கள்! SING !

Travis L. Quertermous

புதிய ஏற்பாடு சபை ஆராதனையின் பங்குகளில் ஒன்று சபையாக சேர்ந்து பாடல் பாடுவது. இருந்தபோதிலும் பல கிறிஸ்தவர்கள் பாட விரும்பாத காரணத்தால் இந்த ஆனந்தத்தை இழந்து காணப்படுகிறார்கள். பாடல் தொடர்பாக முக்கியமான வசனத்தை நாம் கொலோசேயர் 3:16 ல் காணமுடியும்.

**கிறிஸ்து வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி!!**

நாம் இவ்விதமாக பாடல்பாடும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

**✷ பாடுங்கள்!**

இங்கே பவுல் நன்றாகப் பாடுங்கள் என்று சொல்லவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். சபையில் சிலர் தங்களுக்கு நன்றாகப் பாட தெரியாதென்பதாலும் அல்லது விருப்பமில்லாத காரணத்தினாலும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய தங்களுக்கு உரிமை இருப்பதாக கருதுகிறார்கள். குரல்வளை வீக்கம் போன்ற நோய்கள் எதுவும் ஒருவருக்கு இல்லாத பட்சத்தில் மகத்துவமான நாமத்தை பாடித் துதிக்க வேண்டும்.

**✷ நேர்த்தியாகப் பாடுங்கள்!**

இதன் பொருள் மகிழ்ச்சி: அன்பு நன்றி மற்றும் மரியாதையோடு நம் பரமப்பிதாவை பாடித் துதிக்க வேண்டும்.

**✷ இருதயத்திலிருந்து பாடுங்கள்!**

நம்முடைய இருதயத்தையே இசைக்கருவியாக்கி அதிலிருந்து இசையை உருவாக்க வேண்டும். இசைக்கருவிகளிலிருந்து இசையை உருவாக்கக்கூடாது. இதன் பொருள் நாம் தேவனை பாடல்கள் மூலமாக உண்மையாக ஆராதிக்க வேண்டும். யோசனையின்றி வெறும் வார்த்தைகளை உச்சரிப்பதாக பாசாங்கு செய்து விருப்பமும், உற்சாகமுமில்லாமல் பாடலைப் பாடக்கூடாது.

★ நாம் கர்த்தருக்கே பாடவேண்டும்

நம்முடைய ஆராதனையின் பிரதான நோக்கம் நம்மையல்ல. தேவனை மகிமைப்படுத்துவது தான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆராதனையில் யெகோவா தேவனும் பார்வையாளராக இருக்கிறார். நாம் கூட வரும் ஜனக்கூட்டத்தை மகிழ்விக்கும்படியாக ஆராதிக்கவில்லை.

★ ஒருவருக்கொருவர் பாடுங்கள்

எல்லோரும் முழுமையான ஈடுபாட்டுடன் பாடலில் ஈடுபட வேண்டும். எல்லோரும் கர்த்தருக்காகப் பாடவேண்டும். நாம் அழகான, இனிமையான பாடல்களைக் கர்த்தருக்காகப் பாடும்போது, ஒருவருக் கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு நம் இதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுகிறோம். எனவே தான் சபையில் பாடல் என்பது ஒட்டு மொத்த அங்கத்தினர்களால் ஏறெடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. எனவே தான் சபையில் தனிப்பட்டு அல்லது பாடல் குழு போன்ற உபதேசங்கள் வேதத்திற்குப் புறம்பானது.

சகோதரரே! நாம் தேவனுக்கு முழுமையான ஆராதனையை ஏறெடுக்க வேண்டுமென்றால், ஆராதனை முழுமையானதாக இருக்க வேண்டுமென்றால் நாம் நம் வாயைத் திறந்து நம் பரம தகப்பனை பாடித் துதிக்க வேண்டும்! பாடல் வேளையில் அநேகர் வாயை மூடிக் கொண்டிருப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை பற்றி கவலைப்பட வேண்டாம். வாயைத் திறந்து பாடவில்லையென்றால் தேவன் என்ன நினைப்பார் என்பதைப் பற்றி மாத்திரம் கவலைப்படுங்கள்! சங்கீதம் **150:6 சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக, அல்லேலூயா!**

ஆராதனையில் எந்தப் பகுதியை அதிகமாக விரும்புகிறீர்கள் என்று நீங்கள் என்னிடம் கேட்டால் பாடல் என்று உடனடியாக என் பதில் வரும். சபையாரோடு சேர்ந்து தேவனை துதித்துப் பாடுவது சிறு வயதிலிருந்தே எனக்குப் பிடித்தமான காரியம். ஆனால், ஒரு கட்டத்தில் அதாவது என் இளமைப்பருவம் மலர்ந்த போது என் குரலில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. என் குரல் மென்மையான நிலையிலிருந்து கரடுமுரடான நிலைக்கு மாறியபோது நான் பாடலில் ஈடு பாடில்லாதவனாகத் காணப்பட்டேன். அக்குறுகிய காலம் தவிர மற்ற நாட்களில் நான் எப்போதுமே பாடித்துதிக்கவே விரும்புவேன். ஆனால், அக்குறுகிய காலத்தில் நான் பாடலின் மீது கொண்ட தாக்கத்தை முற்றிலுமாக உணரத் தவறினேன்.

ஆராதனையின் ஒரு பங்காகப் பாடல் இருப்பதால் நாம் பாட வேண்டுமென்ற கட்டளை பெற்றிருக்கிறபடியால் நான் பாடினேன் [எபே. 5:19; கொலோ. 3:16] அக்கட்டளையில் இடம் பெற்றிருக்கிற எல்லா நோக்கங்களையும் முழுமையாகப் புரிந்து கொள்வதற்கே பல வருடங்கள் ஆயின. நம் சிருஷ் கர்த்தர் நம் மனதின் சிக்கல்களை முழுமையாகப் புரிந்து கொள்கிறார். நம்முடைய திறமைகளை எப்படி முழுமையாக பயன்படுத்த முடியும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும்.

இன்றைய நாட்களில் ஆராதனையில் பாடல் வேளையில் பெரும்பாலான ஜனங்கள் வாய்மூடி மௌனிகளாகவே இருப்பது போல் தெரிகிறது. அநேகர் வாய் திறந்து தேவனைத் துதித்துப்பாட மறுக்கிறார்கள். அவர்கள் இப்படிச் செய்யும்போது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை ஏறெடுக்காமல் அடக்கி வைக்கிறார்கள். நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை செலுத்தும்படிக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறோம் [எபி 13:15]. அது மாத்திரமல்ல, அவர்கள் தங்கள் விசுவாசத்தை மிகச் சிறந்த ஊக்கியாகப் பயன்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். **நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் [I கொரி 14:15].** ✝

---

## இரட்சிப்பின் சூத்திரம்

***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் [மாற்கு 16:16]***

| | | | | |
|---|---|---|---|---|
| **1** | **+** | **2** | **= 3 (உண்மை)** |
| **விசுவாசம்** | **+** | **ஞானஸ்நானம்** | **= இரட்சிப்பு (உண்மை)** |
| **0** | **+** | **2** | **= 3 (தவறு)** |
| **அவிசுவாசம்** | **+** | **ஞானஸ்நானம்** | **= இரட்சிப்பு (தவறு)** |
| **1** | **+** | **0** | **= 3 (தவறு)** |
| **விசுவாசம்** | **+** | **ஞானஸ்நானமின்மை** | **= இரட்சிப்பு (தவறு)** |

# அக்கினிமயமான புறப்பாடு
## A FIERY DEPARTURE

Betty Tucker

ஒரே விதமான உச்சரிப்புகளைக் கொண்ட இரு பெயர்களை IIஇராஜாக்கள் புத்தகத்தில் நாம் காண்கிறோம். அது எலிசா, எலியா என்றும் தேவ மனிதர்களின் பெயர்கள் தான். அந்நாட்களில் இஸ்ரவேலில் கடும் வறட்சி உண்டானது. மூன்றரை ஆண்டுகள் மழை பெய்யவில்லை. அப்படியென்றால் இப்பூமி எப்படி வறண்டு போயிருக்கும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள்? புல், பூண்டுகளெல்லாம் உலர்ந்து போயிற்று. மிருக ஜீவன்கள் எல்லாம் பட்டினியால் மடிந்து போய்விட்டன. கடும்வறட்சியின் காரணமாக உழுவது கூட கடினமான ஒன்றாக மாறிவிட்டது.

### தொழில் மாற்றம்

எலிசா ஒரு விவசாயியாக இருந்த படியால், ஒரு நாள் வறண்ட பூமியில் பன்னிரண்டு ஏர்பூட்டி உழுதுகொண்டிருந்தார். மாடுகளைக் கொண்டு அந்த நிலத்தை உழவேண்டிய அவசியமென்றாலும் அந்த நிலம் மூன்றரை ஆண்டுகள் மழை இல்லாததால் வறண்டு நிலம் கடினமாகிவிட்டது. எலியா அதிகம் பேசாத நபராக இருந்தபடியால் எலிசா மீது தன் சாலவையைத் தூக்கிப்போட்டார். அச்செயலின் முக்கியத்துவத்தை இருவரும் புரிந்து கொண்டார்கள்.

எலிசா எலியாவின் ஊழியத்தில் அங்கம் வகிக்கப் போவதை அறிந்திருந்தபடியால் அந்நாளிலிருந்து எலியா தீர்க்கதரிசியோடு நடக்கத் தொடங்கினார். இன்னும் சொல்லப்போனால் எலிசா, எலியாவுக்கு வேலைக்காரனாகவே மாறி அவர் போகும் இடமெல்லாம் அவர் கூடவே சென்று எலியாவின் இடத்தை நிரப்ப கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களையெல்லாம் கற்றுக்கொண்டார்.

### எளிய வைபவம்

எலியாவும், எலிசாவும் வருங்காலத்தில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய, இளம் தீர்க்கதரிசிகளை உருவாக்கும் பணியில் இணைந்து செயல்பட்டார்கள். இருவரும் இணைந்து பத்து ஆண்டுகள் பணி செய்தார்கள். எலியா பெத்தேலுக்கு தனியாகப் போக நினைத்தார். ஆனால், எலிசா அவரைப் பார்த்து நான் உம்மை விடுகிறதில்லை, என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்கிறேன் என்றான் (IIராஜா.2:2). எனவே, அவர்கள் இருவரும் சேர்ந்து பெத்தேலுக்குச் சென்றார்கள். எலியாவும், எலிசாவும் யோர்தான் நதியருகே நெருங்கினதை இளம் தீர்க்கதரிசிகள் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது எலியா தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான். அது இரு பக்கமாய்ப் பிரித்தது அவர்கள் இருவரும் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனார்கள் [IIராஜா. 2:8].

அக்கரைபட்டபின்பு எலியா, எலிசாவை நோக்கி: நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படு முன்னே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள் என்றான். எலிசா கேட்கத் தயங்க வில்லை. எலிசாவின் வேண்டுகோள் சுத்தமாகவும், தெளிவாகவும் இருந்தது. உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான் [2:9]. அதற்கு எலியா **அரிதான காரியத்தைக் கேட்டாய்: உன்னவிட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்கு கிடைக்கும்;** இல்லாவிட்டால் கிடையாது என்றான்.



எலிசா எலியாவோடு பத்து ஆண்டுகள் நெருக்கமாக வேலை செய்தான். எலியாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருடைய பணியை இவர் தொடர்ந்து செய்ய வேண்டுமென்றால் தன்னுடைய திறமையை விட அதிகமாக வேறு சில காரியங்கள் தேவைப் படுமென்பதை அறிந்திருந்த படியால் எலியாவினிடத்திலிருந்த ஆவியின் வரம் தனக்கு வேண்டுமென்று கேட்டார்.

**அவர்கள் பேசிக்கொண்டு நடந்து போகையில், இதோ, அக்கினி இரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரிந்தது; எலியா சுழற்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்**(2:11).

எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவருடைய சால்வை கீழே விழுந்தது. அப்பொழுது எலிசா தன் வஸ்திரத்தை பிடித்து இரண்டு துண்டாக கிழித்தான். எலிசா தேவன் எலியாவினிடத்திலிருந்து ஆவியின் வரத்தை தனக்கு இரட்டிப்பாக கொடுத்துவிட்டதையும் அறிந்திருந்தான்.

இப்பொழுது எலிசா சால்வையை எடுத்து சால்வையை முறுக்கி தண்ணீரை அடித்தான். அது இருபக்கமாய் பிரிந்தது. அவன் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனாள் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி அவனுக்கு எதிர் கொண்டு போய் தரை மட்டும் குனிந்தார்கள். ✝

## யோவான் 3:16

# சுருக்கமாக சுவிசேஷம்

தேவன்!!

**மிகப்பெரிய நேசர்**

தம்முடைய ஒரே பேறான குமாரனை!!

**மிகப்பெரிய ஈவு**

விசுவாசிக்கிறவன் எவனோ!!

**மிகப்பெரிய வாய்ப்பு**

அவன் கெட்டப் போகாமல்!!

**மிகப்பெரிய வாக்குத்தத்தம்**

நித்திய ஜீவனை அடையும்படிக்கு!!

**மிகப்பெரிய உடைமை**


அவரைத் தந்தருளி!!

**மிகப் பெரிய செயல்**

உலகத்தில் மிகப்பெரிய ஐக்கியம்!!

**அன்புகூர்ந்தார் மிகப்பெரியஅளவு.**

## சத்திய வழி




- ❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**
- ❖ ரேடியோ : ஞாயிறு - வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



- ❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
- ❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45) Srilanka all Asia Service




<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை




- ❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
- ❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- ❖ மையின் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- ❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |



### அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (TRACTS) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

E.Z.S. ராஜநாயகம் : 98427 30382
P.R. சுவாமி : 098440 70763
P.C. பிலேமோன் ராஜா: 9244204420
B. அர்ஜுனன் : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 [ **4** இதழ்கள் ] (அ) ரூ. 200 [ **8** இதழ்கள் ] க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**[இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்]**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**
“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்
**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**
**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**
**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________